# தீபம்

www.deepam.lk

வார இதழ் • தீபம் 8 • 13.09.2015



விலை
20 ரூபா




# தனிக்கட்சி தொடங்குகிறாரா முதல்வர்?

வடக்கில் என்ன நடக்கிறது?. இதுதான் இன்றைய திகதியில் பலரதும் மண்டையை குடையும் பெரிய கேள்வியாக உள்ளது. வடக்கு முதல்வர் தனிவழி போவாரா? தமிழரசுக்கட்சி அவர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமா? தமிழ் தேசிய கூட்டமைப்பின் அதிருப்தியாளர் அணிகளை வடக்கு முதல்வர் தலைமை தாங்குவாரா? அவருடன் யார் யார் செல்வார்கள்? எல்லோரதும் மண்டையை உடைக்க வைக்கும் கேள்விவிவைகள்.

அண்மைநாட்களாக தமிழ் அரசியலை கவனிப்பவர்களிற்கு ஒன்று புலப்பட்டிருக்கும் ஒரு அரசியல் பூகம்பம் இரகசியமாக வடக்கில் மையம் கொண்டபடியிருக்கிறது என்பது. அது எந்த சமயத்தில் வெடித்து சிதறும்? வெடித்து சிதறாமலே போகுமா? இதுதான் இன்றைய மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வி.

வடக்கு முதல்வர் எங்களிற்கு எதிரானவர்களுடன் சேர்ந்து செயற்படுகிறார், எம்மை தோற்கடிக்க முயன்றார் என வவுனியாவில்


தொடர்ச்சி 7-ம் பக்கம்





ஒன்றே ஒன்று... கண்ணே கண்ணு! 3





என்ன விலை உயிரே 6





யாழ்ப்பாண பொடியளின் காதல் 'ரேஸ்ற்ஸ்' 20


உள்ளே...

# சிறிதரனின் அடுத்த இலக்கு இதுவா?



சிறிதரன் என்றாலே பரபரப்பு என்றுதான் இளைய சமுதாயத்திடம் அபிப்பிராயம் உள்ளது. அவரது ஒவ்வொரு சொல்லும் ஏ.கே 47 இலிருந்து சீறிச் பறக்கும் தோட்டா, அவரது பார்வை தீமூட்டும் அக்னிப்பார்வை. இப்படித்தான் அவரைப்பற்றிய பிம்பம் கட்டியெழுப்பப்பட்டு வருகிறது. உண்மையிலேயே அவர் ஒரு அனல் கக்கும் போராளி. அவர் போன்றவர்களாலேயே தீர்வை பெற முடியுமென இன்னும் பெருமளவான தமிழர்கள் நம்புகிறார்கள். அதனால்த்தான் யாழில் அவர் விருப்பு வாக்கில் முதலிடம் பிடித்தார்.

அரசியல், போராட்டம் எதிலும் எந்த பின்னணியுமில்லாமல் திடீரென அரசியலிற்குள் நுழைந்து, முன்னணிக்கு வந்ததுதான் சிறிதரனின் சாமர்த்தியம். தன்னைப்பற்றிய இமேஜை கட்டியெழுப்பு வதில் சிறிதரன் மிக சூட்சுமமாக திட்டமிட்டு செயற்படுகிறார். இதன் மிக அண்மைய உதாரணம், அவரது


தொடர்ச்சி 9-ம் பக்கம்

# சர்வதேச விசாரணை

இறுதி யுத்தத்தில் நடந்த மனிதஉரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று நடத்தப்பட வேண்டுமென்பதில் கடந்த டிசம்பர் மாதம் வரையும் தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகளின் மத்தியில் இரண்டுவேறு கருத்துக்கள் இருந்ததில்லை. அரசுடன் இருந்த சில உதிரியான தமிழ்அரசியல்வாதிகள் மட்டும்தான் அதனை எதிர்த்தார்கள். அவர்களிற்கு மக்கள் வாக்களிப்பதில்லை. அதனால் அந்த கருத்துக்களை பொதுஅரங்கில் விவாதிக்காமல் தவிர்த்து விடலாம்.

தமிழ்தேசிய கூட்டமைப்பு, தமிழ்தேசிய மக்கள் முன்னணி போன்ற தீவிர தமிழ்தேசிய கட்சிகள், சிவில் அமைப்புக்கள், மனிதஉரிமை அமைப்புக்கள் என எல்லோரும் ஒருமித்த குரலில் சர்வதேச விசாரணையை கோரினார்கள். ஜெனீவா அமர்வுகளிற்கு சென்று, தமிழர் குரல்களை எதிரொலிக்கச் செய்தனர். இலங்கை தொடர்பில் மேற்குலகம் முன்னெடுத்த அரசியல் நகர்வுகளுடன் தமிழர்குரல்களும் ஒன்றிணைந்திருந்தது.

ஆனால் ஆட்சிமாற்றத்தின் பின்னர் இந்த விவகாரம் சடுதியான மாற்றத்திற்கு உள்ளாகிவிட்டது. ஆட்சிமாற்றமொன்றை இலக்காக கொண்டே இந்த விவகாரத்தை மேற்குலகம் கையாண்டது என்பது அண்மைய சம்பவங்களின் மூலம் தெளிவாகிவிட்டது. இது முன்னரே கூறப்பட்டதுதான். அதனால் இதில் தமிழர்கள் அதிர்ச்சியடைய தேவையில்லை.

என்றாலும், இதில் குறிப்பிட வேண்டிய விடயம் தொடர்ந்தும் வெளியாட்களில் நம்பிக்கை வைத்து தமிழர் அரசியலை முன்னகர்த்தும் போக்கை தமிழர் அரசியல்தலைமைகள் கைவிட வேண்டும். வெகுஜன அடித்தளத்தில் கட்டியெழுப்பப்படாத எந்த அரசியல் இயக்கமும் வெற்றியடையாதென்பதே வரலாறு.

வெளியாரில் நம்பியிருப்பதால் ஏற்படும் விளைவுகளிற்கான பலனே, தற்போதைய விசாரணை அறிக்கை விவகாரம். வெளியாரின் நலன்கள் மாறுபடும்போது, அவர்கள் யாரையும் கைவிடத் தயங்க மாட்டார்கள். கைவிட்ட யாரையும் அரவணைக்கவும் பின்னிற்க மாட்டார்கள். முன்னைய இலங்கை ஆட்சியாளர்களிற்கும், சர்வதேச சமூகத்திற்குமிடையிலான முறுகல், சர்வதேச விசாரணையொன்றை நோக்கி நகர்ந்திருந்தது. ஆனால் இப்பொழுது அந்த நிலை மாறிவிட்டது.

இந்தநிலையில், வடக்கு கிழக்கு எங்கும் சர்வதேச விசாரணையை கோரி குரல்கள் எழுகின்றன. கையெழுத்து திரட்டப்படுகிறது.

எனினும், இந்த விவகாரத்தில் தமிழ் அரசியல் தலைமைகள் இரண்டுபட்டுள்ளதாக தெரிகிறது. இந்த பிளவு கட்சிரீதியான பிளவல்ல. தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் கையெழுத்து வேட்டையில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு கையெழுத்திட்டிருந்தனர்.

சர்வதேச விசாரணை முடிந்து விட்டதென ஒரு சாரரும், சர்வதேச விசாரணை தேவையென இன்னொரு சாரரும் பகிரங்கமாக கருத்து கூறுகிறார்கள். சர்வதேச விசாரணை நடந்துவிட்டதா? நடக்கவில்லையா என்பது பற்றி நாம் ஆராயப் போவதில்லை. இந்த விடயத்தில் அரசியல் தலைமைகளின் பொறுப்புணர்வையும், ஒற்றுமையையுமே வலியுறுத்துகிறோம்.

சர்வதேச விசாரணைகளின் பரிமாணங்களை தீர்மானிப்பதும் சர்வதேச நலன்களே. குற்றவாளிகளை நீதியமைப்புக்களின் முன்பாக நிறுத்துவதோ, அல்லது உள்ளூர் பொறிமுறைகளின் ஊடாக பரிகாரம் காண்பதோ என்பதெல்லாம் நாடுகளின் நலன்கள் சார்ந்தது. சர்வதேச விசாரணை விவகாரத்தையே இழுத்துமூடும் புதியகாட்சி மாற்றத்தை இலங்கை கண்டுவிட்ட நிலையில், கறாரான விசாரணைகளிற்கு இனி வாய்ப்பில்லை.

அண்மைய சில அரங்குகளில் மாவை.சேனாதிராசா சர்வதேச விசாரணை முடிந்துவிட்டதாக கூறுகிறார். தமிழரசுக்கட்சியின் வேறு ஒருவர் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென்கிறார். உள்கட்சிக்குள் அல்லாமல் இந்த வேறுபாடு தமிழ் அரசியல் சூழலையே பிடித்துள்ளது.

இந்த பகுதியில் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல, தமிழர்களின் அரசியல் சக்திகள் ஒன்றிணைந்து, கலந்துரையாடல்களை நடத்தி, அரசியல் தீர்மானங்களை எடுக்க வேண்டியதன் அவசியத்தை இது புரிய வைக்கிறது. இந்த நூற்றாண்டின் மாபெரும் துயரங்களிலொன்றான இறுதி யுத்த கொடூரங்கள் குறித்த சர்வதேச விசாரணை நடத்து விட்டதா? இல்லையா என்பதிலேயே தமிழர்களின் அரசியல் தலைமைகள் குழப்பமடையும் நிலைமை அல்லது குழப்பத்தை தூண்டும் விதமாக கையாளத்தக்க அரசியல் தலைமைகளையே தமிழர்கள் பெற்றுள்ளார்கள் என்பது நிச்சயம் தமிழர்களிற்கு ஆரோக்கியமானதல்ல.

இப்படியான போக்கு தமிழர்களை மீண்டும் மீண்டும் முட்டுச்சந்துகளிலேயே நிறுத்தும். இந்த ஆபத்தான போக்கை கடப்பதற்கு தமிழ்அரசியல் தலைமைகளை ஓரணியில் திரளவும், அரசியல் தீர்மானங்களை பரந்த ஆலோசனைகளின் பின்னர் எடுக்கச் செய்வதும் மக்களின் உடனடி கடமையாகும்.

அலுவலகம்
தீபம்
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி
யாழ்ப்பாணம்: 0212216633 ஐக்கிய ராச்சியம் 00442034687086
மின்னஞ்சல்: info@deepamtv.tv

# சொன்னார்கள்



**சந்திரிகா பண்டாரநாயக்கா - முன்னாள் ஜனாதிபதி**

தமிழ்மக்களின் காணிகளை திரும்பக் கொடுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றோம். காணாமல் போனவர்கள் பிரச்சனை மற்றும் அரசியல்பொதியை முன்னெடுப்பதற்கும் செயற்பட ஆரம்பித்துள்ளோம். இனப்பிரச்சனைக்கு தீர்வைக்காண பொன்னான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவே நான் கருதுகிறேன்.



**சீ.வீ.கே.சிவஞானம் - வடமாகாணசபை அவைத்தலைவர்**

வடமாகாணசபை உறுப்பினர்கள் யாரும், மாகாணசபையின் அனுமதியின்றி மாகாணசபை சார்பில் ஜெனீவா செல்ல முடியாது. அப்படி செல்வதானால் அவர்களின் நிதிச் செலவீனங்களை மாகாணசபை ஏற்க வேண்டி வரலாம். அதற்கான நிதிவசதி எம்மிடமில்லை. தனிப்பட்ட ரீதியில் உறுப்பினர்கள் செல்வதற்கு தடையில்லை.



**உதய கம்மன்பில - பிவிதுரு ஹெலஉறுமய**

அடுத்த உள்ளூராட்சி தேர்தல் பற்றி இப்பொழுதே கூற முடியாது. கூட்டமைப்பை ஏற்படுத்துவது பற்றி பேசி வருகிறோம். எம்மை முறியடிக்க பலர் காத்திருக்கிறார்கள். இப்பொழுதே கூறினால், அது அவர்களிற்கு வாய்ப்பாகி விடும். கடந்த தேர்தலில் ஒரு வாக்கை பெற நான் 63 ரூபாயை மட்டும்தான் செலவிட்டேன்.



**இரா.சம்பந்தன் - எதிர்க்கட்சி தலைவர்**

எமது உரிமைப் போராட்ட பயணத்தில் உண்மையுள்ளது. நேர்மையுள்ளது. எமது நிலைப்பாட்டை ஆதரிக்கும் சிங்கள மக்கள் உள்ளனர். பல பிரச்சனைகளுடன் முஸ்லீம் மக்களும் உள்ளனர். அவர்களையும் இணைத்துக் கொண்டு எமது பயணத்தில் வெற்றியடைவோம்.



**பந்துல குணவர்த்தன - ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு**

எதிர்க்கட்சி தலைவர் பதவி தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு சென்றதைவிட, எமக்கு கிடைக்கவில்லையென்பதே அதிக கவலையாக உள்ளது. ஐ.ம.சு.கூவின் புதிய செயலாளர் கட்சிவிதிகளிற்கு மாறாக சபாநாயகருக்கு கடிதம் அனுப்பியதாலேயே இவ்வளவும் நடந்தது. அதிக உறுப்பினர்களை கொண்ட கட்சிக்குத்தான் எதிர்க்கட்சி தலைவர் பதவி வர வேண்டும்.



**அருந்தவபாலன்**

கடந்த பொதுத்தேர்தல் மிக நேர்மையாக நடந்தது. எனினும், யாழ்ப்பாண விருப்பு வாக்கெண்ணலில் மோசடி நடந்துள்ளது. எனது வாக்குகள் ஆறாவதாக வந்த ஒருவருக்கு சேர்க்கப்பட்டு, அவர் முன்னுக்கு கொண்டு வரப்பட்டார். அவருக்கு நாடாளுமன்றத்தில் இடம்கொடுக்க வேண்டுமென்பதற்காக அப்படி செய்தார்கள்.



**கலகோட அத்தே ஞானசார தேரர் - பொதுபலசேனா**

மனோகணேசன் போன்ற இனவாதிகள் எமது பொதுபலசேனா அமைப்பை இல்லாமல் செய்ய முயற்சிக்கிறார்கள். ஆனால் நாம் முன்பைவிட தீவிரமாக சிங்களமக்களின் நலன்களை பாதுகாக்க செயற்படவுள்ளோம். இனவாதிகளின் கருத்துக்களிற்கு பயந்து ஓட, பொதுபலசேனா கோழைகளின் கூடாரமல்ல.

# க்ளிக் பக்கம்

யுத்தத்தினால் தனது இரண்டு கைகளினதும் மணிகட்டு பகுதியோடு இழந்த ஒருவர் வாழ்வாதார உதவிக்காக தனது பெயரை பதிவு செய்ய நின்ற போது எடுக்கப்பட்ட படம். யுத்தம் சப்பித்துப்பிய பலர் இன்றும், வாழ்க்கையாலும் சக மனிதர்களாலும் கைவிடப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். அரசஉதவிகளை நம்பி வாழ்க்கையை நடத்தும் அவர்களின் துயரத்தை உணர்த்தும் படம்.

**என்னைப்பற்றி:** நான் மு.தமிழ்ச்செல்வன். கிளிநொச்சியில் வசித்து வருகிறேன். வெகுஜன ஊடகத்துறையில் டிப்ளோமா கற்றை நெறியை முடித்து கடந்த பத்து வருடங்களாக ஊடகத்துறையில் பணியாற்றி வருகின்றேன். ஊடகத்துறையில் ஏற்பட்ட ஆர்வமே புகைப்படத்துறையில் ஆர்வத்தை ஏற்படுத்தியது. மீள்குடியேற்றத்தின் பின்னர் தொடர்ச்சியாக மக்களினதும், பிரதேசத்தினதும் நிலைமைகள் தொடர்பில் புகைப்படங்களை எடுத்து வருகின்றேன்.



படப்பிடிப்பாளர்:
மு.தமிழ்செல்வன்
இடம்: கிளிநொச்சி






# ஒன்றே ஒன்று... கண்ணே கண்ணு!

பெரும் சர்ச்சையின் பின்னர் அமைச்சரவை இழுபறி முடிவுக்கு வந்துள்ளது. முடிவுக்கு வந்துவிட்டதென சொல்ல முடியாவிட்டாலும்.. பெரும் பிரளயங்கள் எதுவுமின்றி அமைச்சரவை பதவியேற்பு நடந்து முடிந்துவிட்டது. அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் 45 பேர் பதவியேற்றுவிட்டனர். இதற்குத்தான் பெரும்போட்டி நிலவியது.

இதுதவிர, கடந்த புதன்கிழமை 21 பிரதியமைச்சர்களும், 17 இராஜாங்க அமைச்சர்களும் பதவியேற்றுள்ளனர்.

இந்த இரண்டு பதவியும் எப்படியானதென்று எல்லோருக்கும் தெரிந்ததுதான். அழுதபிள்ளைக்கு கொடுத்த அல்வா. இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து அமைத்துள்ள பிரமாண்ட அரசில் இணைந்துள்ளவர்கள், 'மக்கள் சேவையாற்ற' வேண்டுமென அடம் பிடிப்பார்கள். அப்படி அடம்பிடிப்பவர்கள் எல்லோரையும் சமாளிக்க இராஜாங்க அமைச்சர், பிரதியமைச்சர் என பலவகையான அல்வாக்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

இந்த அல்வாவை முதலில் கிண்டிக் காட்டியவர் மகிந்த ராஜபக்ச. அவரது ஆட்சிக்காலம் இன்னும் கொஞ்சநாள் நீண்டிருந்தால் 'சும்மா இருப்பவர்களிற்கான அமைச்சர்' என்ற ஒன்றையும் உருவாக்கியிருப்பார். தாவரங்களிற்காகவும் அமைச்சரவையை ஒதுக்கிய ஆள் அல்லவா அவர்!

மகிந்தவை வீழ்த்திய கடந்த ஆட்சியில் சுதந்திரக்கட்சியும் இணையத் தொடங்கியபோது, அமைச்சரவை படிப்படியாகவீங்கத் தொடங்கி, பழைய கதையானது. இம்முறையும் கிட்டத்தட்ட அதே கதைதான். அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் தொகை கிட்டத்தட்ட நூறை எட்டலாமென கருதப்படுகிறது.

ஆனால்இதில்அதிர்ச்சியளிக்கும் விடயம்..இம்முறைவடக்கு,கிழக்கில் தமிழர்கள் அமைச்சு பதவியில் கண்டுகொள்ளப்படாமை. கிழக்கிலென்றாலும் முஸ்லீம் காங்கிரசிலிருந்து பலர் அமைச்சர்களாகவும், இராஜாங்க அமைச்சர்களாகவும், பிரதியமைச்சர்களாகவும் ஆகியுள்ளனர். தமிழர்களின் நிலைமைதான் மிக மோசமாக உள்ளது.

இரண்டு பிரதான கட்சிகளுடனும் கூட்டணி வைத்த முஸ்லீம் கட்சிகள் சார்பில் கிட்டத்தட்ட 10 பேர் அமைச்சு பதவிகளை ஏற்றுள்ளனர். அமைச்சு பதவியென்பது முழுநாட்டிற்கென்றாலும், அதன் உண்மையான அர்த்தம் என்னவென்பதை எல்லோரும் அறிவோம். அமைச்சு பதவி ஏற்பவரின் பிரதேசத்தில் உள்ளவர்கள்தான் அதன் முழுமையான பலனை அனுபவிப்பார்கள். தேர்தல் அரசியலில் இதனைவிட வேறெதனையும் எதிர்பார்ப்பது வீண்.

கிழக்கில் கணிசமான அமைச்சுப் பதவிகள் சென்று சேர்ந்திருக்கிறது. அது தனியே முஸ்லீம்மக்களை மட்டும் போஷிக்காது என நம்பலாம்.



ஆனால் வடக்கு நிலைதான் மிக மோசமாக உள்ளது. ஒரேயொரு தமிழ் அமைச்சர் மட்டுமே பதவியேற்றுள்ளார். அதுவும் ஒப்புக்கு உருவாக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர் பதவி. சிறுவர் என்றொரு அமைச்சை ஐ.தே.கவின் விஜயகலா மகேஸ்வரன் பெற்றுள்ளார்.

இராஜாங்க அமைச்சரிற்கு அமைச்சர் ஒருவரினால் குறிப்பிடத்தக்க எந்த காரியத்தையும் ஆற்றமுடியாது. தனக்குள்ள தொடர்புகளின் மூலமே எதையாவது சாதிக்க முடியும்.

தமிழர்களில் யாராவது அமைச்சு பதவியை ஏற்றுக்கொண்டால் அவர்கள் ஆயுளுக்கும் துரோகியாகவே காலத்தை கழிக்க வேண்டுமென்ற விதிதான் உள்ளது. என்றாலும், இந்த விடயத்தை இப்படி மேலோட்டமாக அனுகமுடியாது. கடந்த ஆட்சிக்காலங்களில் அமைச்சு பதவி ஏற்றவர்கள், அதற்கு பிரதியுபகாரமாக ஆட்சியாளர்களிற்கு சேவகம் செய்தமையும் இப்படியான எண்ணம் உருவாக காரணமாக அமைந்திருக்கலாம். என்றாலும், தனியே எதிர்ப்பு அரசியலோ அல்லது அபிவிருத்தி அரசியலோ செய்வது புத்திசாலித்தனமல்ல என்பதன் அடிப்படையில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டத்தின் மீள்வாழ்விற்கு அமைச்சு பதவிகள் நிச்சயம் உதவி செய்யவே செய்யும். தமிழர்களின் மீள்வாழ்வு தொடர்பில் முறையான பொறிமுறையொன்று உருவாக்கப்படாத பட்சத்தில், இப்படியான சில முறைமைகளில் மக்கள் நம்பிக்கை வைக்க வேண்டியதுதான் யதார்த்தமாக உள்ளது.

கடந்த காலங்களில் அமைச்சர்களாக பதவி வகித்தவர்கள் தொடர்பில் அரசியல்ரீதியிலான கடுமையான விமர்சனங்கள் வைக்கப்பட்டிருந்தாலும், அவர்களின் அமைச்சுப்பதவி வடக்கில் பல இளைஞர்களின் வாழ்வில் ஒளியூட்டியுள்ள தென்பதென்னவோ உண்மைதான்.

அமைச்சு பதவிகளில் வடக்கு ஏன் புறக்கணிக்கப்பட்டுள்ளதென தெரியவில்லை. போர்த்தாக்கங்கள் மற்றும் வேலைவாய்ப்பு பிரச்சனைகளிலிருந்து படிப்படியாக மக்கள் விடுபட்டுவரும் பொறிமுறைக்கு இது நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும்.

வடக்கு, கிழக்கு மக்களின் புனர்வாழ்வு மற்றும் வேலைவாய்ப்பு விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு விசேட பொறிமுறையொன்றை அவசியமாக ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதை செய்ய தவறினால், இந்த விடயங்களில் பெரும் தேக்கம் ஏற்பட்டு பெரும் சமூகப் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

**வடக்கில் சில அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. அங்கஜன் இராமநாதன் தான் நிச்சயம் அமைச்சராவேன் என தீபம் நேர்காணல் ஒன்றில் கூறியிருந்தார். அவருக்கு வாக்குறுதி வழங்கப்பட்டிருக்கலாம். டக்ளஸ் தேவானந்தாவும் அமைச்சர் பதவி ஏற்பார் என எதிர்பார்க்கப்பட்டது. இறுதிவரை அதற்கான பேச்சுக்களும் நடந்து வந்தது. எனினும், இறுதிநேரத்தில் அவர்களும் நிராகரிக்கப்பட்டுள்ளனர். இந்த விடயம்தான் பெரும் மர்மமாக உள்ளது. இந்த விடயங்களின் பின்னணியில் வலுவான கரங்கள் இருந்தனவா?**

**இரண்டு பிரதான கூட்டணியிலும் இடம்பிடித்த முஸ்லீம்கட்சிகள் சார்பில் இதுவரை 10 வரையானவர்கள் அமைச்சு பதவியை ஏற்றுள்ளனர். அதில் அரைவாசித் தொகை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள். இதில் வன்னித் தொகுதியில் போட்டியிட்ட அமைச்சர் ரிசாட் பதியுதீன் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகியுள்ளார். எனினும் கடந்தகால அனுபவங்களினடிப்படையில் அவர் 'முஸ்லீம்' அமைச்சராகவே இருப்பார் என்றுதான் நம்பலாம்.**

**அதுபோல மலையகத்தில் களமிறங்கிய திகாம்பரம், ராதாகிருஸ்ணன் போன்றவர்களும், கொழும்பில் போட்டியிட்ட மனோ கணேசனும், ஐ.தே.க தேசியப்பட்டியல் எம்.பி டி.எம்.சுவாமிநாதனும் அமைச்சர்களாகியுள்ளனர். எனினும், இவர்கள் வடக்கிற்கு வெளியில் உள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.**



# போதைக்கு இல்லையா வேலி?

பார்த்தீபன்



வடக்கில் போதைவஸ்து, மதுபாவனை, புகையிலைப் பழக்க வழக்கம் அதிகரித்து வருவதன் பின்னணி பற்றிய பல அதிர்ச்சி தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இதுவொரு திட்டமிட்ட நடவடிக்கையா என்ற சந்தேகம்தான் பரவலாக உள்ளது.

ஆயுத போராட்டக் காலத்தில் இல்லாத மது பாவனை, புகையிலை, போதைப்பொருள் பாவனை இன்று அதிகரித்து இருப்பது பலத்த சந்தேகத்தை உருவாக்கியுள்ளது. இத்தகைய பாவனைகளை ஆரம்பத்தில் கட்டுப்படுத்துவதே மிக அவசியமாகும். இத்னைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்பதே காலத்தின் கட்டாயம்.

போராட்டம் காரணமாக ஒருவித அடக்கு முறைக்குள் இருந்தமையால் கலாசார சீரழிவு இன்றி இத்தகைய தீய பழக்கங்களுக்குள் ஆளாகாமலும் இருந்த நிலையில் போராட்டம் முடிவுறுத்தப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளபோதும் சிறந்த வெளிச் சிறைச்சாலை போல் ஒருவித அடக்கு முறைக்குள்ளேயே மக்கள் தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

தமிழ் மக்களது ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தமைபோல் அடக்கி வாழலாம் என்று நினைத்து வடக்கு கிழக்கைத் திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கையாக போதைவஸ்து, மதுப் பாவனை அதிகரித்துச் செல்லும் இவற்றைக் கட்டுப்படுத்த முயலும் போதும் புலனாய்வு, இராணுவம் கண்காணிப்பினால் போராட்டமே திசை திருப்பப்படும் நிலை கடந்த அரசுபோல் இந்த அரசிலும் காணப்படுகின்றது.

ஒருவித போராட்டத்தில் வாழ்ந்த மக்கள் அப்போராட்டம் முடிவுறுத்தப்பட்டமையால் மக்கள் எதை நோக்கிச்செல்வது என்ற நிலை உருவாகியுள்ளது. மண்ணுக்காகப் போராட்டியவர்கள் இன்று அகதிகளாகவும் வாழ்வாதாரம் அற்றவர்களாகவும் வாழும் நிலையில் மது, போதை, புகையிலை பழக்கத்திற்குள் அடிமையாகின்றார்கள். இதனையே ஒருசில மக்கள் கூட்டம் விரும்புகிறவர்கள் இந்த நிலையில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டும்.

நாம் வெறுமனே வடக்கில் போதைவஸ்துப் பாவனை மது பாவனை, கலாச்சார சீரழிவு அதிகரிக்கின்றது என்று அரசியல் வாதிகள் போல் கூறிக்கொண்டு நாம் இருக்கப் போகின்றோமா என்பது தற்போதைய சூழலில் அவசியமான கேள்வியாக உள்ளது.

ஏனெனில் எந்த அரசியல் வாதியைப் பார்த்தாலும் தனது இருப்புக்காகவும் தன் சார்ந்த அரசியல் கட்சிக்காகவும் இனிவரும் தேர்தலை இலக்கு வைத்து பல கதைகளை உருவாக்கும் திறமைகளும் இவர்களிடம் உள்ளது. ஏனெனில் கடந்த 30 வருட காலத்தில் இவர்கள் இதனையே செய்துள்ளார்கள். இவர்கள் மக்களுடன் மக்களாகவே இருந்து இத்தகைய திட்டமிட்டு சீரழிக்கப் படுகின்ற செயலை மக்களுடன் இருந்து செய்தால் இதனைக் கட்டுப்படுத்த முடியும். தற்போதைய சூழல் இனிவரும் சூழல் இத்தகைய நிலையை உருவாக்கும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

போராட்டத்திற்குள் இருந்து வெளிவந்த சமூகத்தினுள் திடீர் என ஒருவித்தியாசமான சூழலுக்குள் செல்லும்போது அல்லது புகுவது இலகுவானதாகவே இருக்கும். ஆனால் நாம் விழிப்புடன் இருக்க வேண்டிய சூழல் நம்முடையதே 2009 மே 18 இன் பின்னர் கடுமையான அடக்குமுறைக்குள் மெல்லமெல்ல அது தளர்வடைந்து வரும்போது அடக்கு முறையாளர்களாலேயே ஒருசில பொது நிகழ்வுகளின்போது மதுபானங்கள் வழங்கி வருவதைஒரு வாடிக்கையா கொண்டிருந்தார்கள். இத்தகைய சூழலில் இதனை வெளிப்படுத்தினாலும் துன்பம் வெளிப்படுத்தாது விட்டாலும் துன்பமாக இருந்தது. இன்றும் அத்தகைய நிலை மாறி வருகின்றபோதும் திட்டமிட்டு வடக்கு, கிழக்கை இலக்கு வைத்து செய்யப்பட்டுவரும் துன்பமான நிலை இன்றும் உள்ளது.

போதைவஸ்து, மதுபாவனை, புகையிலைப் பொருள் விற்பனை இவை அதிகரித்து வருகின்ற நிலையில் போதைவஸ்து வருகை என்பது இந்தியாவிலிருந்து வருவதாகவே உறுதிப்படுத்தப்படுகிறது. இந்த கடத்தல் பல்வேறு சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது. போராட்ட ஆயுதத்தை முடக்கவும் போராட்டத்தின் பின்னரான ஜனநாயக போராட்டத்தை மழுங்கடிக்கவும் இது திட்டமிடப்பட்டதா என்பது சந்தேகமாகவுள்ளது.

மதுபாவனை, புகையிலைப் பாவனை என்பனவற்றை உற்பத்தியாளர்கள் விற்பனையாளர்களை பல்வகையான கவர்ச்சிப் பொருட்களின் மாயையைக் காட்டி ஒருசில நாட்களுக்கான வருமானத்தைக் கொடுத்து விற்பனைக்கான தந்திர உபாயங்களை வழங்குவதால் விற்பனையாளர்களும் தாம் என்ன செய்கின்றோம். இத்தகைய பொருட்கள் விற்பனை செய்வதால் எத்தகைய தீமையை எமது சந்ததியை நாமே அளிக்கின்றோம் என்ற உண்மையை உணராமல் செயற்படுகிறார்கள்.

விற்பதனால் இவர்களுக்கு சிறு தொகை கிடைக்கின்றதை உணராதவர்களாக அற்ப ஆசைக்காக எதிர்கால சமுதாயத்தை அழிக்கிறார்கள்.

வடக்கில் இடம்பெற்று வருகின்ற சமூகபிறள்வுநடவடிக்கைகளை நாம் பட்டியல்படுத்தப் போகின்றோமா அதனை தடுக்கப் போகின்றோமா என்பதே இன்றைய காலத்தில் கட்டாயமாக உள்ளது.

தற்போதைய சூழலில் பொலிஸாரை நம்பிய நிலையில் பொலிஸ் நிலையங்களில் இருந்த பொலிஸாரை நாமாகவே எமது பிள்ளைகளைப் பழக்கத் தூண்டிவிட்டவர்களாக இருக்கின்றோம். எமது பிள்ளைகளை நாம் பாதுக்க முடியாதவர்களாகவும் வாகனங்களில் பிள்ளைகளை ஏற்றி இறக்குவதால் வாகன சாரதிகளின் பழக்க வழக்கங்கள் பிள்ளைகள் மனமாற்றத்திற்குச் செல்கின்றார்கள்.

பிள்ளைகளுக்கு கல்வி தேவை என்பதற்காக தூர இடங்களுக்கு அல்லது நகரங்களுக்கு பிள்ளைகளைச் சேர்ப்பதால் பெற்றோர் தமது பிள்ளைகள் என்ன செய்கின்றார்கள் என்பதை அறிய முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

பெற்றோர்களின் சினிமா, சீரியல் மோகம், சினிமாக்களில் மதுபாவனை, புகையிலை மோகம் இவை மட்டுமல்ல ஆசிரியர்கள் பிள்ளைகள் மட்டில் உள்ள அக்கறை குறைவடைவதும் இத்தகைய நிலைக்குக் காரணமாகவுள்ளது.

அண்மையில் வடக்கில் மதுபாவனைப் பயன்பாடு அதிகரித்து உள்ளது என்ற குற்றச்சாட்டு உள்ள நிலையில் புள்ளி விபரங்களின் அடிப்படையில் குறைவடையும் நிலை காணப்படுவதாகப் புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதேவேளை அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அனுமதி பெற்ற மதுபான நிலையங்களில் இருந்து சட்ட விரோதமான முறையில் அதிகளவான மதுபானங்கள் இறக்குமதி செய்யப்படுவதாகக்கருத்துக் காணப்பட்டது. இதில் எத்தகைய உண்மை பொய் இருக்கின்றது தெரியாதுவிட்டாலும் மதுவரி திணைக்களம் கூறுகிறது. அவ்வாறு நடைபெறுவதற்கு சந்தர்ப்பங்கள் இல்லையென கூறுகிறது. காரணம் மதுவரி திணைக்களத்தின் கடமைகளில் மதுபான விற்பனை நிலையங்கள் மாதத்தில் ஒரு தடவையேனும் சோதனை மேற்கொண்டு அங்குள்ள விற்பனை தொடர்பில் கண்காணித்து வருகின்றது. அது மட்டுமன்றி மொத்தமாகக் கொண்டுவரும்போது வாகனங்கள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இத்தகைய சோதனைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதுமட்டுமன்றி சட்டவிரோத மதுபான விற்பனை போன்றவற்றைக் கண்டுபிடித்து அவர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கின்றார்கள். மாவட்ட அரசாங்க அதிபர் தமது கடமைகளைப்பொறுப்பேற்ற பின்னர் அவரின் கீழுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கும் கண்டிப்பான உத்தரவுகளை பிறப்பித்து சமூகப் பொறுப்போடு கடமையாற்ற வேண்டும் என்கின்ற செய்தியைப் பகிர்ந்து வருகின்றார்.

மத்திய அரசு மட்டுமன்றி மாகாண அரசும் இணைந்து துரிதமான திட்டங்களைத் தயாரித்து தமிழ் மக்களின் கலாசார பண்பாடுகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கத் தவறினால் தேவையில்லை எனக் கூறுபவர்களே வீதிகளில் நடமாடும் நிலையை நாமாக வலிந்து உருவாக்கும் நிலை உருவாகி விடும்.

மத்திய மாகாண அரசாங்கங்கள் மட்டுமின்றி அரச சார்பற்ற நிறுவனங்கள் சமூக அமைப்புக்கள் கிராமிய அமைப்புக்கள் ஒரே திட்டத்தின் கீழ் சமூக பொறுப்புடன் ஒன்றிணைவதன் மூலமே இத்தகைய புறக்காரணிகளை புறக்கணித்து சமுதாயத்தின் நலனைக் காப்பாற்ற முடியும்.

**போதைவஸ்து, மதுபாவனை, புகையிலைப் பொருள் விற்பனை இவை அதிகரித்து வருகின்ற நிலையில் போதைவஸ்து வருகை என்பது இந்தியாவிலிருந்து வருவதாகவே உறுதிப்படுத்தப்படுகிறது.**






தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவரானதை பாராட்டி திருகோணமலையில் நிகழ்வொன்று நடந்தது. தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதில் கலந்து கொண்டனர்.



யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் தனது 10வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய சிறுகதை போட்டியில் வெற்றியீட்டியவர்களிற்கு பரிசளிப்பும், தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளின் தொகுப்பான 'செவ்வரத்தை' நூல் வெளியீடும் வவுனியாவில் அண்மையில் நடந்தது.

# உண்ணாவிரத போராட்டம்

வவுனியா நகரசபை ஊழியர்கள் சம்பள கொடுப்பனவு மற்றும் பதவி உயர்வு கோரி இன்று இரண்டாவது நாள் உண்ணாவிரத போராட்டம் ஆரம்பித்தனர்.

வவுனியா நகரசபை ஊழியர்கள் சம்பள கொடுப்பனவு கொடுக்கப்படாமை, மற்றும் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாமையை கண்டித்து 08-09-2015 இரண்டாவது நாள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இப்போராட்டமானது அகில இலங்கை பொது ஊழியர் சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவர் எஸ்.சித்திரன் தலைமையில் நடைபெற்றது.

வவுனியாவுக்கு வருகை தந்திருந்த வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்களை சந்திக்க மறுத்ததுடன் பத்திரிகையாளர்களையும் சந்திக்க மறுப்பு தெரிவித்திருந்தார்.

இதனைத்தொடர்ந்து எந்த சமரச பேச்சுவார்த்தைக்கும் நகரசபை ஊழியர்கள் உடன்படாத காரணத்தால் நகரசபை நிர்வாகத்தால் பொலிசாரை தொடர்பு கொண்டதையடுத்து வவுனியா பொலிசார் நகரசபை ஊழியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் வவுனியா நகரசபையில் செயலாளர் இல்லாத காரணத்தால் 09-09-2015 நகரசபை நிர்வாகத்துடன் கதைத்து தீர்வு பெற்று தருவதாக பொலிசார் உறுதியளித்ததை தொடர்ந்து உண்ணாவிரத போராட்டம் வவுனியா நகரசபை ஊழியர்களால் கைவிடப்பட்டது.





இப்போராட்டமானது ஊழியர்களுக்கு காலத்திற்கு காலம் அரசினால்விடுவிக்கப்படும்சுற்றுநிருபங்களுக்குஅமையசம்பளம்வழங்கப்பட வேண்டும், ஊழியர்களின் அடிப்படை சம்பளங்கள் குறைக்கப்பட்டு வழங்கப்பட்டமை சீர்செய்யப்பட வேண்டும், போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இன்று உண்ணாவிரத போராட்டம் நகரசபை ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்டது.



பி.சியா
siyapj27@gmail.com

# என்ன விலை உயிரே

## புகையிலையுடன் போராடும் பெண்கள்



புகையிலை என்பது ஒரு உயிர் கொல்லியாகும். அதில் இருந்து நம்மை பாதுகாப்பதற்காகவே புகைத்தலிற்கு எதிராக பலரும் விழிப்புணர்வு குரல்களை எழும்புகிறார்கள்.

ஆனாலும் புகையிலை இல்லாத வாழ்வை கற்பனை முடியாதவர்களாக பெருமளவானவர்கள் உள்ளனர். காற்று, உணவு போல வாழ்தலிற்கு இன்றியமையாததாக அதை பலரும் கற்பனை பண்ணி வைத்துள்ளனர். இதனால் புகையிலை உற்பத்தியும், அதனுடன் தொடர்புடைய தொழில்களும் இன்றும் நம்மத்தியில் உயிர்வாழ்கின்றன.

அப்படியான ஒரு உற்பத்திதுறைதான் சுருட்டு சுற்றலும். சுருட்டு சுற்றும் தொழிற்சாலைகளில் பெருமளவில் பெண்கள்தான் ஈடுபடுத்தப்படுகின்றனர். காரணம், குறைந்த ஊதியம். இதில் துயரம் என்னவென்றால், புகைக்காமலயே, புகைப்பவர்களை தாக்கும் அத்தனை நோய்களையும் அவர்களும் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதே. அது தவிர, புகையிலை சுற்றும் பெண்ளில் பலர், இந்த வாசனைக்கு பழக்கப்பட்டு நாளடைவில் சுருட்டுப் புகைக்கவும் ஆரம்பிக்கின்றனர்.

வறுமை காரணமாக பெருமளவான பெண்கள் இந்த தொழிலிற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு வேலை உணவிற்காக உழைப்பவர்கள்.

இந்த புகையிலை தொழிலை செய்யும் யாருமே அதிக பணத்தை சம்பாதிப்பதற்காக செய்யவில்லை. அன்றாடம் தமது சீவியத்தை கழிப்பதற்காகவே செய்கின்றனர்.

இதில் பலருக்கு தெரிவதில்லை இதனால் தாம் எந்தளவு தூரம் நோயாளர்கள் ஆகின்றோம் என்பது. ஒரு வேளை உணவுக்காக கூலி வேலை செய்யும் பெண்களுக்கு, புகையிலை உற்பத்தி காலம் வழமையான வேலைகளை விட அதிகளவு வருவாயினை ஈட்டி கொடுப்பதால் அவர்கள் பணத்திற்காக இதனை செய்து கொள்கின்றார்கள். வருடத்தின் மற்ற நாட்களில் சிரமமான வாழ்க்கையை நடத்துபவர்கள், புகையிலை சீசனில்த்தான் ஓரளவு பணத்தை பெற்றுக் கொள்கிறார்கள். அந்தப்பணம்தான் எல்லா ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல் இந்த தொழிலில் பெண்களை இறங்க வைத்துள்ளது.

இந்த புகையிலை தொழிலை செய்து வயிற்றை ஆற்றும் பெண்கள் இருவரின் குரல்கள் இவை.

### எஸ். நந்தா

எமக்கு இருக்கிற வறுமையின் மத்தியில் என்ர கணவரும் குடிக்கிறவர். அதோட இவரும் கூலி வேலை தான். சீவியத்துக்கு காணாது. அதனால நானும் கூலி வேலைக்கு போறனான். எனக்கு 3 பிள்ளைகள் 2 பேர் பெண் பிள்ளைகள். படிக்கிறார்கள். ஒருவர் 7ம் வகுப்பு. இன்னொருவர் 8-ம் வகுப்பு. தினமும் நானும் வேலை செய்தா தான் வயிற்று பசிய போக்க முடியும். இவர் நாளுக்கு 700 உழைப்பார். சிலவேளையில அதுவும் கிடைக்காது. அவற்ற செலவு பிள்ளைகள படிப்பிக்கவே காணாது. புகையிலை மிக கடினமான வேலை. தலையிடி, தடிமன் என்று வருத்தம் வரும் தான். ஆனால் புகையிலை காலத்தில் தொடர்ந்து வேலை செய்தால் நாளுக்கு 1000 ரூபா உழைக்கலாம். அது தான் இதை செய்கிறோம் என்றார் குழந்தையையும் மடியில் வைத்தபடி.

### ஜெயரட்ணம் சுபாசினி

எனக்கு 3 பிள்ளைகள். இவரும் கூலி வேலை நானும் கூலி வேலை. இவர் ஒரு நாளுக்கு 500 சம்பாதிப்பார். நான் ஒரு நாளுக்கு 300 சம்பாதிப்பேன். இன்று வேலை செய்து தரும் பணத்தை கொண்டு

> **தமது சந்ததியை புகையிலையில் இருந்து விடுவித்து ஆரோக்கியமாக வாழ வழிசமைத்து கொடுக்க வேண்டியது புகையிலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரின் கடமையாகும். இதனை வழிகாட்ட வேண்டியது அரசதுறைகளின் கடமை.**

தான் நாளைய சாப்பாடு. வெங்காயம் களை புடுங்கிறது, மில் வேலை என்று எல்லா கூலி வேலைக்கும் போவம். ஆனால் எங்களுக்கு கிடைக்கும் வருவாயின் அளவு கூடியது 500 தான். புகையிலை



எஸ். நந்தா



ஜெயரட்ணம் சுபாசினி



விவசாயி கணகம்

# புகையிலை புற்றுநோயை உண்டாக்கும்



**வைத்தியர் ஆர்.சுரேந்திரகுமார்**
பீடாதிபதி
யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம்

புகையிலை என்பது சிகரெட்டாகவோ, பீடியாகவோ, சுருட்டாகவோ குடிப்பதால் மட்டும் உடலில் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. பயிரிட்டு, அறுவடை செய்து, உலர விட்டு, பொருளாக்கி அதன் பிறகும் கூட ஒவ்வொரு கட்டத்திலும் மனிதர்களின் சுவாசத்தில் நிக்கோட்டின் மற்றும் பூச்சி மருந்து கெமிக்கல்ஸ் கலந்து நோயாக செயற்படுகிறது. இது பலருக்கும் தெரிவதில்லை.

புகையிலை உற்பத்தி செய்யும் பொழுது அதில் ஒரு புழு பூச்சி என்பன வந்து விட்டாலும் அதனை பயன்படுத்த முடியாது, எனவே அதனை தடுக்க விவசாயிகள் பல கெமிக்கல் மருந்துகளை பயன்படுத்துவார்கள். இதனால் புகையிவையில் வரும் பாதிப்போடு இந்த கெமிக்கல் பாதிப்பும் மனிதனை ஆட்கொள்கின்றது.

வடமாகாணத்தில் புகையிலை உற்பத்தி என்பது பரம்பரை பரம்பரையாக செய்யப்பட்டு வருவது. அதனால் அதிக இலாபத்தை பெற்று கொள்ளவும் முடிகின்றது. எனவே அதனை கைவிட முடியாத தொழிலாக செய்து வருகின்றனர் நமது மக்கள்.

குறிப்பாக தாவடி, மண்டைதீவு, பலாலி, சுதுமலை போன்ற இடங்களில் புகையிலை அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த உற்பத்தி பரம்பரை பரம்பரையாக செய்து வரப்படுகின்றது. இப்பொழுது இன்னும் அதிகமாக இந்த உற்பத்தி உள்ளது. ஆகவே இந்த தொழிலினை உடனடியாக நிறத்தவும் முடியாது எம்மவர்களால்.

இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் அதிகம் என்பதனை அவர்கள் உணர வேண்டும்.

1 இரசாயணத்தை பயிருக்கு அடிக்கும் பொழுது சுவாசத்தில் கலக்கின்றது.
2 உலர விடும் போது சூழல்வாழ் மக்களின் உடலில் கலந்து தலையிடி, தடிமல், தலைசுற்று என்பவற்றை ஏற்படுத்துகின்றது. இது பெரிய நோய்களின் அறிகுறி கூட.
3 புகையிலை அவிக்கும் போது நிக்கோட்டின் சுவாசம் மூலம் அருகிலுள்ளவர்களால் உள்வாங்கப்படுகின்றது.
4 சுருட்டும் பொழுது கூட அப்படித்தான். இதனால் தலைசுற்று, தலையிடி, தடிமல் தினமும் அவர்களுக்கு ஏற்படும் வாய்ப்புண்டு.
5 மதில்களில் காய விடும் பொழுது அவர்களை மட்டும் இன்றி சுற்றி வாழும் மக்களிடமும் பாதிப்பை ஏற்படுத்தும் வாய்ப்புக்கள் அதிகம்.

இப்படியாக பல பாதிப்புக்களை படிப்படியாக இவர்கள் எதிர்நோக்க வேண்டி வரும். இதுவே எதிர் காலத்தில் புற்றுநோய்களை கொண்டு வரும். நிச்சயமாக புகையிலையோடு வாழ்வை கழிப்போருக்கு 80வீதம் புற்று நோய் வரும் வாய்ப்பு உண்டு.

புகையிலையின் பாதிப்புக்கள் பற்றி அமெரிக்கா தமது தொழிலாளர்களை வைத்து ஒரு ஆய்வை நடத்தியது. அதன் முடிவு, புகையிலை மிகவும் ஆபத்தானது. புற்றுநோயை இலகுவாக கொண்டுவரக் கூடியது என்பதே.

இப்படி ஒரு ஆய்வினை நாமும் எமது நாட்டில் செய்ய வேண்டிய கடமைப்பாட்டில் உள்ளோம்.

இது ஒரு பாதிப்பான தொழில். ஒருவரை, ஒரு குடும்பத்தை என்று இல்லாமல் ஒருவரின் சுயனலத்தால் ஒரு சமூகத்தையே பாதிக்க கூடியது.

இந்த தொழிலை செய்பவர்களுக்கு வருமானத்தை ஈட்ட கூடிய வேறு பல மாற்று வழிகள் உள்ளன. தோட்டத்தில் பயறு, கச்சான் என பல வேறு தானியங்களை எப்படி செய்யலாம் என்ற வழியை விசாய திணைக்களங்கள் விவசாயிகளிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும். இதனை விட மாம்பழம் போன்ற எமது நாட்டு பொருட்களையே மருந்து இல்லாத சிறந்த பழங்களை பெற்றுக் கொள்ள முடிவதில்லை. அதே போன்று அவற்றை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் கூடாக வருவாயை விவசாயிகள் பெற்று கொள்ள முடியும்.

ஆனால் இது உடனடியாக சாத்திப்படும் விடயம் அல்ல. விவசாய திணைக்களம் விவசாயிகளுக்கு படிப்படியாக பயிற்றுவித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களுக்கு புகையிலையினை விட அதிகளவு வருவாயை பெற வழிகாட்டி விடுவதனால் மட்டுமே சிறிது சிறிதாக புகையிலை உற்பத்தியை நிறுத்த முடியும். நிச்சயம் காலப்போக்கில் சிறிதளவு மாற்றத்தையேனும் கொண்டு வந்து புற்று நோய்களில் இருந்தும், போதை அடிமைத்தனத்தில் இருந்தும் எமது மக்களை விடுவிக்க வேண்டும்.

காலத்தில நாளுக்கு 1000 கண்டு உடைச்சா 600 ரூபா கிடைக்கும். நாங்க கூடுதலாக உடைப்பம். ஆனால் என்ன, புகையில வேலை துடங்கிட்டா நீங்க சொல்லுறத போல நிறைய வருத்தம் மாறி மாறி வந்திட்டே இருக்கும். ஆரம்பத்தில தலையிடி, தலைசுற்று இருக்கும். போக போக 8மாதத்திற்கு கிட்ட தொடர் வேலை செய்யிறதால பழகிப் போயிடும். ஆரம்பத்தில தல இடிக்கும் போது, தலசுற்றும் போது பனடோல் போடுவம். பிறகு பழக்கம் ஆயிற்றுது என்றால் தேவையில்ல என்று சலிப்போடு பேசினார்.

உழைப்பாளர்கள் இப்படி சொல்ல, உற்பத்தியாளர்கள் என்ன நினைக்கிறார்கள் என அறிய வேண்டாமா?

### விவசாயி கணகம்

பரம்பரை பரம்பரையாக புகையிலை உற்பத்தி செய்து இவர்களை வைத்து வேலை செய்து அதிகளவில் வருவாயை பெற்று கொள்ளும் புகையிலை விவசாயி கணகத்துடன் பேசிய பொழுது

'எங்களுக்கு இது வருவாயை அதிகமா பெற்று தாற தொழில். ஒரு விவசாயியாக நாங்க ஓரளவு அதிக வருவாயை மிகவும் கஸ்ரப்பட்டு பெற்று கொள்ளுறது இந்த புகையில காலத்தில தான்.

முன்பு 1000 கண்டு நாற்று போட்டு கண்டாக்க 15000 தேவை. ஆனால் இப்ப 30000 வரை தேவை. புரட்டாதி விஜயதசமிக்கு நாற்று போடுவம். பிறகு வளர்த்தெடுத்து கண்டாக்கி, நட்டு, அறுவடையாக்கி அதன் பின்னர் உலர்த்தி, அவித்து, போறனை போட்டு, பொருளாக்கி எடுக்க எப்பிடியும் அடுத்த பங்குனி சித்திரை ஆகும்.

சிலர் அடுத்த புரட்டாதி வரை ஒரு வருடத்திற்கு தொழிலை செய்பவர். இதை செய்வதற்கு செலவு செய்த முதல் கூலி எல்லாம் கழித்தால் ஒரு 60,000 வரை மிஞ்சும். இந்த தொழில் கடவுள் கொடுத்தது போல நிறைய வருமானத்த பெற்று தருது. இதனால சில பாதிப்பு இருக்கென்று தெரியும். அறிஞ் சிருக்கம். தலையிடி எல்லாம் அனுபவிக்கிறம்தான். ஆனால் என்ன பண்றது. தெரிஞ்ச தொழில் பணத்த பெறக்கூடிய தொழிலினை விட முடியாது தானே என்றார் அந்த விவசாயி.

இந்த தொழிலை செய்பவர்கள் ஆண்களின் (தமது குடும்ப) தலைமைக்கு கீழே தான் செய்து வருகின்றனர். இவர்களின் நாட்கள் புகையிலை வாசத்திற்குள்ளேயே கழிகிறது. ஆதனைவிட கொடுமை, குழந்தைகளையும் அந்த வாசத்திற்கு பழக்கப்படுத்தி விடுகிறார்கள். கைக்குழந்தைகளையும் மடியில் வைத்துக் கொண்டு வேலை செய்வதும், வேலை செய்யும் சூழலில் சிறார்கள் இருப்பதும் இங்கு சாதாரண நிகழ்வுகள்.

புகையிலை எமது உயிருக்கு எதிரி என்பதை உணர்ந்து, இனி வரும் சந்ததிக்கு வேறு தொழிலை கற்றுக்கொடுத்து தமது சந்ததியை புகையிலையில் இருந்து விடுவித்து ஆரோக்கியமாக வாழ வழிசமைத்து கொடுக்க வேண்டியது புகையிலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரின் கடமையாகும். இதனை ஊக்குவித்து, வழிகாட்ட வேண்டியது அரசதுறைகளின் கடமை.

---

# வடக்கில் என்ன நடக்கிறது?



1-ம் பக்க தொடர்ச்சி

மாவை.சேனாதிராசா சொன்னார். வடக்கு முதல்வர் பற்றிய உயர்வான அபிப்பிராயத்தைஇழந்துவிட்டேன் என வடமராட்சியில் சரவணபவன் சொன்னார். அமைதியாக இருந்த தமிழ் அரசியலரங்கிற்கு என்ன நடந்தது? இதன் பின்னணி என்ன?

தமிழ்தேசிய கூட்டமைப்பின் கட்சி பிரமுகர்கள், தமிழ்தேசிய அரசியலில் ஈடுபாடானவர்கள், சிவில் சமூகத்தினர் என பலதரப்பினரிடமும் இது பற்றி பேசியபோது, எல்லோரும் எதோ ஒன்று நடக்கப் போகிறது என கவலையுடன் கூறுகிறார்கள். ஒரு விபரீதமான முடிவை நோக்கி தமிழ் அரசியல்களம் சென்று கொண்டிருப்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள். அண்மைய சம்பவங்களை வைத்துப்பார்க்கும் போது அது தெளிவாக தெரிவதாக அவர்கள் கூறுகிறார்கள்.

சரி. அப்படியானால் இதற்கு காரணம் என்ன? அல்லது யார்?

இதுதான் மிக சிக்கலான கேள்வி. எல்லா கட்சிக்காரர்களுடனும் பேசினால், எல்லோரும் 'அவர் பிழை.. இவர் பிழை' என மாறிமாறி கையை நீட்டுகிறார்கள். இதுதான் பலரையும் குழப்பமடைய வைக்கும் விடயம்.

ஏற்கனவே தமிழ்தேசியவாதிகள் இரண்டுபட்டுபோயுள்ளனர்.பெருந் தொகையானவர்கள் தமிழ்தேசிய கூட்டமைப்பை ஆதரிக்கிறார்கள். பல்கலைகழக விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள், சிவில் செயற் பாட்டாளர்கள் என கல்விப்புலத்தின் கணிசமான பகுதி தமிழ் தேசிய மக்கள் முன்னணியை ஆதரிக்கிறது. கடந்த பாராளுமன்ற தேர்தலில் இந்த இரண்டு பகுதியும் தான் பலப்பரீட்சை செய்தது.

எனினும், தேர்தலின் முன்னரே தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள் சிறு முணுமுணுப்பொன்றும் இருந்து வந்தது. 'எங்களோட கதைக்காமல் எல்லாத்தையும் அவையளே செய்யினம்' என்ற முணுமுணுப்பை அப்போது யாரும் பெரிதாக காது கொடுத்து கேட்கவில்லை. இந்த சமயத்தில்த்தான் அனந்தி போன்றவர்கள் அதற்குள் பகிரங்கமாக போர்க்கொடி தூக்கினார்கள். தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள் அண்மைக்காலமாக பகிரங்க அதிருப்தியை வெளியிடுவதில் முதல் அடியை அவர்தான் வைத்தார்.

கடந்த தேர்தல் சமயத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் அனந்தி போன்றவர்கள் இணைந்து கொள்ளலாமென பரவலாக பேசப்பட்டது. எனினும், பின்னர் அனந்தி அதிலிருந்து பின்வாங்கி விட்டார்.

அதன் பின்னர்தான் வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனின் ஆட்டம் ஆரம்பமானது. அவரது அதிரடி அறிக்கைகள் தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள் பூகம்பத்தை கிளப்பியது. அவரது மந்திரிகளே நேரில் சென்று, பாதகமான அறிக்கைகள் விடாதீர்கள் என கட்டுக்கொண்டிருக்க, அடுத்தடுத்த அதிரடிகளை வெளியிட்டு கொண்டிருந்தார். இதன்போதே அவருக்கும் தமிழரசுக்கட்சிக்குமிடையில் மெல்லிய விரிசல் கிளம்பியது. ஏற்கனவே, தேசியப்பட்டியல் நியமனம், அது.. இதுவென பல குடுமிப்பிடிகளுடன் கட்சி ஓடிக் கொண்டிருக்கும் போதுதான் இந்த சம்பவங்கள் நடந்தன. இதனையடுத்து, கூட்டமைப்பின் பங்காளிகளையெல்லாம் அணைத்

> **அரசியலில் பழம் தின்று கொட்டை போட்ட சம்பந்தரிற்கு இதை சொல்லித் தெரிய வைக்க வேண்டியதில்லை. தாங்கள் எடுக்கும் சில முடிவுகளை முதல்வரிடம் சொல்லாமல் செய்வதால் அவர் கோபித்திருக்கலாம்.**

துக் கொண்டு வடக்கு முதல்வர் தனிவழி கிளம்பப் போகிறார். கஜேந்திரகுமார் அணியும் அதில் இணைந்து கொள்ளப் போகிறதென பரவலாக பேச்சடிபட ஆரம்பித்துள்ளது. இது பற்றிய தகவல்களை தேடினால்ஞ் கிணறுவெட்ட பூதம் கிளம்பிய கதையாக பல அதிர்ச்சி தகவல்கள் கிளம்புகின்றன.

கடந்த தேர்தலின் முன்னரே இப்படியொரு கூட்டணி சில தரப்பால் முயற்சிக்கப்பட்டதாகவும், ஆனால் அது சாத்தியமாகவில்லையென்றும் விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால் இப்பொழுது விடயம் விபரீதமான கட்டத்தை எட்டியுள்ளது என்கிறார்கள். தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகளை முதல்வர் விமர்சித்ததை தொடர்ந்து, இரண்டு தரப்பிற்கும் முறுகல் தோன்றியது. இந்த சமயத்தில், கூட்டமைப்பின் எஞ்சிய மூன்று பங்காளிக்கட்சிகளும் ஒதுங்கியி



ருந்து பார்த்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் முதல்வர் அணைத்துக்கொள்ளலாம் என்பது சிலரது கணிப்பு. இந்த சர்ச்சை தற்போது மாகாணசபையையே இரண்டுபட வைத்துள்ளது. சில உறுப்பினர்கள் பகிரங்கமாகவே போர்க்கொடி தூக்கி, முதல்வர் பதவியை விட்டு செல்ல வேண்டுமென கோரியுள்ளனர். வடமராட்சி, சாவகச்சேரி, யாழ் புறகர் பகுதிகளை சேர்ந்த சில மாகாணசபை உறுப்பினர்கள் இதை வெளிப்படையாகவே சொல்லி வருகிறார்களாம். மறுபக்கத்தில் அமைச்சர் ஒருவர் மட்டும்தான் முதல்வரின் அணியில் நிற்கிறார்.

இந்த சர்ச்சைகளின் தொடர்ச்சியாக, முதல்வர் பதவியை விட்டு வெளியில் செல்ல வேண்டிய நிலை வந்தால், அவர் நிச்சயம் மாற்று அணிக்கு தலைமை தாங்குவார் அல்லது மாற்று கட்சியொன்றை ஆரம்பிப்பார் என கூறுகிறார்கள் முதல்வரிற்கு நெருக்கமானவர்கள்.

இவைதான் பூகம்பத்தின் பின்னணி.

### அடுத்து என்ன நடக்கும்?

அதை ஊகிப்பதுதான் மிக கடினமானது. இந்த பிரச்சனையை வளர்த்து செல்லாமல் சமாளித்து

> **முதல்வர் தனிவழியில் செல்வதற்கோ அல்லது ஒதுக்கி வைப்பதற்கோ வாய்ப்புக்கள் குறைவாக உள்ளது. இரண்டு தரப்பும் விட்டுக்கொடுப்புடன் நடக்க வேண்டியுள்ளது. இரண்டு தரப்பும் மக்களிற்கு வொறுப்புக்கூற வேண்டுமல்லவா.**

செல்வதைத்தான் கூட்டமைப்பின் தலைமை விரும்பும். அரசியலில் பழம் தின்று கொட்டை போட்ட சம்பந்தரிற்கு இதை சொல்லித் தெரிய வைக்க வேண்டியதில்லை. தாங்கள் ஏடுக்கும் சில முடிவுகளை முதல்வரிடம் சொல்லாமல் செய்வதால் அவர் கோபித்திருக்கலாம். இனிமேல், முடிவுகளை எடுக்கும்போது அவரையும் கலந்தாலோசிக்கலாமென்ற முடிவிற்கு அவர் வந்துள்ளதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன. ஏற்கனவே அரசியல்தீர்வு நெருக்கடி, தேசியப்பட்டியல் சர்ச்சை உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகள் உள்ள நிலையில் புதிதாக ஒரு பிரச்சனையை வளர்த்துக்கொள்ள அவர் விரும்ப மாட்டார் என்பது எதிர்பார்க்க கூடியதுதான்.

என்றாலும், தமிழரசுக்கட்சியின் சில தலைவர்கள் முதல்வரிற்கு எதிராக பகிரங்கமாகவே கருத்து சொல்லி வருவதுதான் சிந்திக்க வைக்கிறது. குறிப்பாக மாவை சேனாதிராசா அவர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்ற ரீதியிலும் கருத்து சொல்லிவிட்டார்.

இது பற்றி தமிழரசுக்கட்சி பிரமுகர் ஒருவரை அணுகியபோது, பெயரை சொல்ல வேண்டாம் என கேட்டுக் கொண்டு விட்டு பேசினார். "முதல்வர் எங்களிற்கு எதிராக செயற்பட்டவர். நாங்கள் தோற்க வேண்டுமென பகிரங்கமாகவே செயற்பட்டவர். இதற்கு விளக்கம் சொல்லாமல் எப்படி பிரச்சனையை தீர்த்து கொள்வது?" என்று கேட்டார்.

### தீர்வு என்ன?

இப்போதைய நிலையில் முதல்வர் தனிவழியில் செல்வதற்கோ அல்லது அவரை கட்சித் தலைமை ஒதுக்கி வைப்பதற்கோ வாய்ப்புக்கள் குறைவாக உள்ளது. இரண்டு தரப்பும் விட்டுக் கொடுப்புடன் நடக்க வேண்டியுள்ளது.இரண்டுதரப்பும்மக்களிற்கு பொறுப்புக்கூற வேண்டுமல்லவா.

ஆனால் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சில தரப்புக்கள் பலன் அனுபவிக்க துடிப்பது தெரிகிறது. அவர்களின் ஆசைக்கு எண்ணெய் வார்ப்பதைப் போலமைந்த சம்பவங்கள்தான், தமிழ்தேசிய கூட்டமைப்பின் முடிவுகளை சிலர் மட்டுமே எடுப்பது. முடிவுகளை அனைவரும் கலந்துரையாடி எடுத்தால் அனைவரும் சமமானவர்கள் என்ற எண்ணம் ஏற்படுவதுடன், பொறுப்புக் கூற வேண்டியவர்களாகவும் இருப்பார்கள். சர்வதேச விசாரணை விவகாரத்தில் கூட்டமைப்பிலுள்ளவர்கள் இரண்டு வேறுவிதமாக பேசுவது இதற்கு நல்ல உதாரணம். முடிவுகள் தொடர்பில் அனைவரும் அறிந்து வைத்திருந்தால், அனைவருக்கும் கூட்டு பொறுப்புணர்வு இருக்கும். அது இருந்தாலே தமிழர்களின் அரசியல் போராட்டத்திற்கு கணிசமான வெற்றிதான்.

ஆனால் அதற்கெல்லாம் அவகாசமில்லாமல் வெள்ளம் தலைக்கு மேல் சென்றுவிட்டதைப் போல்த்தான் உள்ளது. அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதை சில நாட்கள் பொறுத்திருந்தால் தெரிந்துவிடும்.

வ.ரஜிந்தன்
rajinthan2011@gmail.com



# வீட்டுத்திட்ட திண்டாட்டம்..

“சின்னக் கொட்டில்ல இருந்திருந்தாலும் ஏதோ கிடைக்குறத வைச்சு ஒரு நேர கஞ்சியயாவது குடிச்சிட்டு சந்தோசமா நின்மதியா இருந்தம். ஆனா இந்த கல்வீடு, வீட்டுத்திட்டம் எண்ட ஒண்டு வந்து கைல இருந்த மிச்ச சொச்சம் எல்லாத்தையும் இழந்து அடுத்தவங்களிட்ட கையேந்திற நிலை வந்திட்டு.” முல்லைத்தீவு மாவட்ட வீட்டுத் திட்டப் பயணாளிகள் சிலரின் புலம்பல் இது.

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின் படி இலங்கையின் அதிகூடிய, வறுமையுடைய மாவட்டமான முல்லைதத்தீவில் வாழும்கணிசமான அளவுமக்களின் மன நிலைப்பாடு இப்படித்தான் உள்ளது.யுத்தத்தின் விளைவால் பேரிழப்பைச் சாந்தித்த இந்த மாவட்டத்தில் அதிகளவான மக்கள் இடம்பெயர்ந்து தற்போது மீளக் குடியமர்ந்துள்ளனர்.

தமது சொந்த இடத்தில் சொந்த வீட்டில் உறவுகளுடன் மீண்டும் ஒரு இனிமையான வாழ்க்கையை வாழலாம் என்ற நினைப்பில் குடியேறிய மக்களுக்கு தமது எதிர்பார்ப்புக்கள் ஈடேறவில்லை.

யுத்தத்தின் கோரத்தாண்டவத்தினால்தமதுசொந்தங்கள்,சொத்துக்கள், சுகங்களை அனைத்தையும் இழந்த மக்களுக்கு தமது வாழ்வாதாரத்தினை கொண்டு நடத்துவதற்குத் தோவையான அடிப்படை வசதிகள் தற்போது அரசினாலும் வெளிநாட்டு தொண்டு நிறுவங்கள் மற்றும் வேறு நிதி நிறுவனங்காளாலும் படிப்படியாக பூர்தி செயப்பட்டுக் கொண்டு வருகின்றமை

**பொதுவான விடையமாகும்.**

பெரும்பாலும் நான்கு அங்கத்தவர்களையும் அதிகமாகக் கொண்ட குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கும் பணிகள் முல்லைத்தீவு மாவட்டமெங்கும் இடம்பொற்று வருகின்றது.

ஆனால் வீடமைப்பில் பல்வேறு பிரச்சினைகளை தினம் தினம் அனுபவித்து வருகின்றனர் இம்மாவட்டமக்கள். முல்லைத்தீவில் மட்டுமன்றி வடக்கில் பொதுவாக இவ்வாறான நிலை தான் உள்ளது.

உதவி நிறுவனங்களால் வழங்கப்படும் ஐந்து லட்சம் ரூபாவை வைத்துக் கொண்டு தமக்கான மனையினை அமைத்துக் கொள்வதில் பெரும் சிரமத்தை இவர்கள் எதிர்நோக்குகின்றனர்.

நாளுக்கு நாள் அதிகரித்துவரும் கட்டடப் பொருட்களில் விலையேற்றம் மற்றும் தொழிலாளள்களுக்கான கூலி அதிகரிப்பின் காரணமாக ஒதுக்கப்படும் நிதியில் மனைகளை அமைப்பதில் மக்கள் பெரும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

வீட்டுத்திட்ட நிதி கட்டம் கட்டமாக வழங்கப்படுகிறது. இது சரியான நடைமுறைதான் என்றாலும் அதிகளாவான சந்தர்ப்பங்களில் மக்களை கடனாளியாக்கி இருகின்றமையும் குறிப்டத்தக்கது.

குறித்த நிதி வீட்டுத்திட்டப் பயனாளர்களுக்கு அவர்களது வங்கிக் கணக்கினூடாக வளங்கப்பட்டு வருகின்றது.

முதலாவதாக ஒரு லட்சம் ரூபாய் பயனாளருக்கு வங்கியில் இடப்படும். அதில் ஐம்பது ஆயிரத்தை மாத்திரமே முதலில் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கிடைக்கின்ற ஐம்பதாயிரத்தினை மட்டும் பயன்படுத்தி வீட்டுக்கான அத்திவாரம் அமைக்கப்பட வேண்டும் என்பதோடு ஐந்து வரிகளுக்கு கல்லும் அடுக்கப்படுதல் வேண்டுமாம்.

இவ்வாறு அத்திவாரத்தினை அமைப்பதற்கு திட்டத்தின்படி ஒரு டிப்பருக்கும் அதிகமான மணல் மற்றும் அத்திவரம் கட்டப்பயன்படும் ஒன்பது அங்குல அளவினைக் கொண்ட கல்லும் தோவைப் படுகின்றது. இவற்றிற்கு அண்ணளவாக 25,000 ரூபா தோடக்கம் 30,000 ரூபா வரையில் செலவு ஏற்படுகின்றது.

மேலும் மீதியாக உள்ள 25,000 ரூபாவிலும் குறைந்த அளவு தொகையினைக் கொண்டு சீமெந்து, கல் அரிவதற்கான மண் மற்றும் தொழிலாளிக்கான செலவினையும் ஈடுசெய்ய வேண்டும்.

ஒரு பைக்கற் கட்டுவே... சீமெந்து மற்றும் கல்லரிவதற்கான சீமெந்துகள் முறையே 905 ரூபாய் மற்றும் 680 ரூபாய் விலைகளில் கொள்வனவு செய்யப்பட வேண்டும்.

இவ்வாறன நிலைமையில் வீட்டின் ஆரம்ப வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. எனினும் ஆரம்பிக்கப்பட்ட வேலையை இடைநிறுத்தக் கூடாது என்ற நிவீலயில் மக்கள் தம்மிடம் உள் சொத்துக்களை விற்றோ, நகைகளை அடவு வைத்தோ அல்லது வட்டிக்கு கடன்களைப் பெறறோ் கட்டுமானப்பணிகளை நிறைவு செய்கின்றனர்.

இரண்டாவது படிமுறையாக இரண்டு லட்சம் ரூபாய் வழங்கப்படுகின்றது.இப்பணத்தைக் கொண்டு கட்டுமானப் பணிகளில் 90 வீதத்திற்கும் அதிகமான பகுதி கட்டி முடிக்கப்படல் வேண்டும்.

இறுதியாக வழங்கப்படும் இரண்டு லட்சம் ரூபாவஜினைக் கொண்டு வீட்டிற்க ஓட்டிலான கூரை அமைக்கப்பட வேண்டும். அத்தோடு விட்டிற்கான கதவுகள் மற்றும் ஜன்னல் வேலைகள் என்பன பூர்தியாக்கப்பட்டு வீட்டின் அனைத்து விதமான வேலைகளும் பூத்தி செய்யப்படும் பட்சத்தில் மீதியாக வங்கியில் உள்ள 50,000 ரூபாவினை பயன்படுத்த அனுமதிக்காப்படுகின்றது.

இவ்வாறான கடுமையான விதிகளின் கீழ் வீட்டினை அமைத்துக் கொள்வது சாதாரண குடும்பத்தால் எப்படி சாத்தியமாகும்? அதுவும் போரின் உச்சகட்ட கொடுமையால் அனைத்தையும் இழந்து தவிக்கும் ஒருவரால் இது எப்படி சாத்தியம்?

எனவே இப்படி ஒரு சாதாண மனையினை அமைக்க உதவி புரியும் அமைப்புக்கள் இம் மக்களில் வறுமை மற்றும் மனநிலையினை ஆராய்ந்து அதற்குத் தகுந்காற்போல் தமது திட்டங்களை செயற்படுத்த வேண்டும். புதிய நிரந்தர வீட்டின் வருகையினால் மக்களின் வழ்வில் அமைதியும் சந்தோசமும் ஏற்பட வேண்டுமே தவிர அம் மக்களை கடனாளியாக்கி மன உளைச்சலுக்கு ஆளாக்காது இருத்தல் வேண்டும்.

---

வ.ரஜிந்தன்
rajinthan2011@gmail.com





# ஏகாந்தம்!

பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டு தனிமையில் வாழும் இரு வயோதிபர்களது வாழ்க்கை முறையை எடுத்துச் சொல்லுவதே இந்த ஏகாந்தத்தின் கருப்பொருள்.

செயல் திறன் அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் நல்லூர் நாடகத் திருவிழாவில் மேடையேற்றப்பட்ட பல விதமான நாடகங்களுள் இந்த“ஏகாந்தம்” என்ற நாடகம்யாழ்பாணத்துநாடகமரபில் புதிது என்றே கூற வேண்டும்.

பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டு தனிமையில் வாழும் இரு வயோதிபர்களது வாழ்க்கை முறையை எடுத்துச் சொல்லுவதே இந்த ஏகாந்தத்தின் கருப்பொருளாக அமைந்தது. சதாரணமாக மேடையில் இருந்து முகபாவனையில் உணர்வுகளை வெளிப்படுத்துவதிலும் பார்க்க அதில் இருந்து முற்றிலும் மாறுபட்ட வேட உடைகள் ஒப்பனைகளைக் கொண்டு அரங்கேற்றப்பட்ட நாடகம் தான் இந்த ஏகாந்தம்.

தனிமையில் வாழும் முதியவர்களின் செயற்பாடுகள், அவர்களது எதிர்பார்ப்புக்கள் அவர்களுக்கு உதவிசெய்பவர்கள் என அனைத்து விதமான விடயங்களையும் உள்ளடக்கி தனிமையான குடும்ப வாழ்கையின் உன்மையை சொல்லுவதாக அமைந்த இந்த நாடகம், இன்றைய காலகட்டத்தில் எமது வாழ்க்கை முறையை உணர்ந்து கொள்ளவும், கடந்த நாட்களில் நடந்தவற்றை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்துவதான உணர்பு பூர்வமான நாடகமாக அமைந்தது. இதற்கு இந்த நாடகத்தை பார்த்தவர்கள் சிந்திய கண்ணீரும் அவர்களது இறுக்கமான சொல்லாடல்களுமே சான்று.

மேலும், இந்த நாடகமானது முற்றிலுமாக முகமூடிகளைக் கொண்டு காட்சிகள் அமைக்கப்பட்டதால் பின்னணியில் பல கலைஞ்ஞர்கள் செயற்பட்டனர். இவர்களைளே இந்த நாடகத்தின் வெற்றிக்கு பாரிய பங்களிப்பை செய்துள்ளனர் எனலாம்.

மேடையில் கிழவன், கிழவி, வேலைக்காரன், வைத்தியர், நாய் போன்ற பாத்திரங்களை வேடமுக ஒப்பனைகள் மூலம் சிறப்பாக சித்தரிக்கப்பட்டது. அவசரத்தில் உதவிசெய்பவர்கள் யார். ஒரு தனிநபரை வேலையாள் எவ்வாறு பார்க்கிறார். வைத்தியசாலையில் ஒரு வைத்தியர் நோயாளியை எவ்வாறு கவனிக்கிறார், வயோதிபர்களுக்கு துணையாக அவர்களது இன்ப துன்பங்களில் பங்கெடுக்கும் நாய் எவ்வாறு உள்ளது. அது மட்டுமல்லாமல் ஒரு குடும்பத்தில் கணவனை இழந்து முதுமையில் வாழும் அந்த பெண்ணின் தனிமை. அவரது மனநிலை செயற்பாடுகள் என்ன அனைத்தையும் உருக்கமாக வெளிக்காட்டி விட்டது இந்த ஏகாந்தம்.

இப்படி எம் கதை பேசும் இந்த நாடகத்தை செயற்திறன் அரங்க இயக்கம் தயாரித்து அரங்கேற்றியுள்ளமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். அந் நாடகத்திற்கான எழுத்துருவை தே. தேவானந்த் எழுதி கிழவன் பாத்திரத்தின் அவரே நடித்துள்ளார்.

ஏகாந்தம் ஈழத்து நாடக அரங்கியலில் ஒரு புது வடிவம் என்றே சொல்ல வேண்டும்.

1-ம் பக்க தொடர்ச்சி

பிரபாகரன் பாணி புகைப்படங்கள்.

கடற்புலிகளின் படகில் பயணிக்கும் பிரபாகரன் கையை காட்டிக் கொண்டு நிற்பதைப் போன்ற படமொன்று பிரபலமானது. அண்மையில் ஏதோ ஒரு கடலிற்கு சென்று, அதேபோல அச்சுபிசகாமல் சூட்டிங் செய்திருந்தனர். அதனை அவரது ஆதரவாளர்கள் இணையத் தளங்களில் வெளியிட்டிருந்தனர். சாதாரணமாக வெளியிடவில்லை. பிரபாகரன் படத்துடன் இணைத்து வெளியிட்டிருந்தனர். (இது சமூகவலைத்தளங்களில் சர்ச்சையை கிளப்பியது வேறுகதை. 'கையை காட்டுபவர் எல்லாம் தேசியத் தலைவனாகிவிட முடியாது' என ஒருவர் எழுத லைக்ஸ் அள்ளியது)

ஆரம்பத்திலிருந்தே தன்னை அவர் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவராகவே காட்டி வந்தார். அவரது மனைவியின் சகோதரன் விடுதலைப்புலிகளின் முக்கிய பதவியில் இருந்தவர். அந்த தளபதி தனது சகோதரியின் வீட்டிற்கு சில தடவைகள் வந்து சென்றிருக்கலாம். அவருக்கு தேனீரோ, சாப்பாடோ கொடுத்தது தான் விடுதலைப்போராட்டத்திற்கு சிறிதரன் செய்த பங்களிப்பு. எனினும், விடுதலைப்புலிகளுடன் நெருக்கமானவர் அல்லது அந்த குணாம்சங்கள் நிறைந்தவர் தான்தான் என்பதைப் போன்ற ஒரு பிம்பத்தை அவர் மிக நுணுக்கமாக திட்டமிட்டு ஏற்படுத்தி விட்டார்.

இதற்கு அவருக்கு பேருதவியாக இருந்தது லங்காசிறி, தமிழ் வின் மற்றும் அவற்றின் அன்டகிரவுண்ட் பக்கங்களாக செயற்படும் ஜேவிபி நியூஸ் போன்றவை. அந்த தளங்களை சிறிதரனின் சகோதரர் தான் இயக்குகிறார் என இணையத் தளங்களில் பரவலாக பேசப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதனால்த்தான் வேறெந்த தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவரையும் விட, அவர் அதிகம் மக்கள் மத்தியில் செல்ல வாய்ப் பேற்பட்டது. இந்த நிலையில்த்தான் சிறிதரனது புதிய நகர்வு பற்றிய பரபரப்பாக பேசப்படுகிறது. தமிழரசுக்கட்சியின் தலைமைப் பதவியை குறிவைத்து அவர் காய்களை நகர்த்துகிறார் என பரபரப்பாக கட்சிக்குள் பேசப்படுகிறது.

இதனை உறுதிசெய்யும் விதமான செய்திகளைத்தான் அந்த தளங்களும் அண்மைநாட்களில் வெளியிட்டு வருவது குறிப்பிடத் தக்கது. யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக்கட்சியின் இரண்டாம் மட்டத் தலைவர்கள் பலர் தற்பொழுது சிறிதரனுடன் நெருக்கமானவர்கள். அவரது பகுதியிலிருந்து மாகாணசபைக்கு தெரிவானவர்கள் சிலர், யாழிலுள்ள தமிழரசுக்கட்சியின் சில உள்ளூராட்சிமன்ற பிரதிநிதிகளின் துணையுடன் அவர் காய்களை நகர்த்தி வருவதாக பரவலாக பேசப்படுகிறது. தமிழ்தேசிய கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் உறுப்பினராக தமிழரசுக்கட்சி உறுப்பினர் ஒருவரை நியமிக்க கோரி அண்மையில் பரவலான வலியுறுத்தல்கள் நிகழ்ந்ததும் இந்த பின்னணியில்த்தான் என விடயமறிந்தவர்கள் கூறுகிறார்கள்.



தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தள்ளாத வயதுக்காரராகிவிட்டார். வயது முதிர்ந்தகாலத்தில் விரைவில் அவர் அரசியலிலிருந்து விடைபெறலாமென கருதப்படுகிறது. இதற்குள் எதிர்க்கட்சி தலைவர் பதவி கிடைத்துவிட்டது. இனி அவரது பொறுப்பும், செயற்பாடுகளும் விரிவடையவுள்ளது. இதனால் தமிழ்தேசிய கூட்டமைப்பின் பணிகளை கவனிக்க புதிய தலைவர் நியமிக்கப்படலாமென்ற அபிப்பிராயம் கட்சிக்குள் அரசல் புரசலாக பேசப்படுகிறது. இளையவர்களிற்கு வாய்ப்பு வழங்க வேண்டுமென்ற பரவலாக கோரிக்கைகள் அண்மைக்காலமாக மெலெழுந்து வருகிறது. இளையவர்களிற்கு வாய்ப்பளிக்கப்பட்டால், அடுத்ததாக இருக்கும் 'இளையவர்' மாவைதான். கூட்டமைப்பின்

> **மனைவியின் சகோதரன் விடுதலைப்புலிகளின் முக்கிய பதவியில் இருந்தவர். அந்த தளபதி தனது சகோதரியின் வீட்டிற்கு சில தடவைகள் வந்து சென்றிருக்கலாம். அவருக்கு தேனீரோ, சாப்பாடோ கொடுத்ததுதான் விடுதலைப்போராட்டத்திற்கு சிறிதரன் செய்த பங்களிப்பு.**

பொறுப்பு மாவையிடம் செல்வதையே தமிழரசுக்கட்சி விரும்பும். இதையெல்லாம் கணக்கு பார்த்து விட்டுத்தான் சிறிதரன் காய்களை நகர்த்துவதாக கூறப்படுகிறது. மாவை கூட்டமைப்பிற்கு சென்றால், தமிழரசுக்கட்சி கதிரை காலியாகும், கதிரையில் உட்காரபோட்டியாக உள்ள சுமந்திரனை அகற்றிவிட்டால் எல்லாம் சுபமாகும் என அவரது ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். கடந்த பொதுத்தேர்தலின் தபால் வாக்களிப்பு சமயத்தில் கிளிநொச்சியிலிருந்து இயங்கிய சிலநபர்கள், தொலைபேசியில் அரச ஊழியர்களை தொடர்பு கொண்டு சுமந்திரனிற்கு வாக்களிக்க வேண்டாம், அவர் துரோகியென தீவிர பிரசாரம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. இதையெல்லாம் கூட்டிக்கழித்து பார்த்தால், அவரது நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவே கட்சிக்குள் பேசப்படுகிறது.

ஆனால் தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் வரிசையாக உட்கார்ந்திருக்கிறார்கள். குலநாயகம், சீ.வீ.கே. சிவஞானம் போன்றவர்கள் இருந்தாலும், அவர்களை சுலபமாககடந்து செல்வார் 'நம்ம தல' என்கிறார்கள் அவரது ஆதரவாளர்கள்.

இதேவேளை, தமிழரசுக் கட்சித் தலைமைக்கு வரக்கூடியவர்கள், யாழில் அதிக மக்கள் செல்வாக்கு உள்ள தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர்களை இலக்கு வைத்து சில 'அண்டகிரவுண்ட்' இணையத் தளங்கள் செயற்பட ஆரம்பித்துள்ளதும் கவனிக்கத்தக்கது. அண்மையில் தர்மலிங்கம் சித்தார்த்தனை இலக்கு வைத்து 'அம்புலிமாமா' கதைபாணியில்



ஒரு கதையை அவிழ்த்துவிட்டதும் இந்தவகையானதுதான் என்று கூறுகிறார்கள்.

இணையத்தளங்களினால் தமிழர்களிடம் ஒரு அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த முடியாவிட்டாலும், ஒரு கட்சித்தலைமையையாவது மாற்ற முடியுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## இணைய ஜன்னல்

**Soory Mahendrarajan**
தன்னம்பிக்கையும்
அடுத்தவேளைக்கு கையேந்தாத
குணத்துக்கும் முன்... வயதும்
கௌரவமும் தோற்றுவிடுகின்றது

**Pirasanth Vasanth**
ஒரு கன்னத்தில அடி விழுந்தா
மறு கன்னத்தை காட்ட
நான் ஒண்ணும் கடவுள் இல்ல...
மனுஷன்.. கோவம் வரணும்,
வரத்தான் செய்யும்....

**குகன் குகா**
ஒவ்வொரு பிகரும் தேவை
மச்சான் (ஊறுகாய்க்கு
ஆகல்லன்னா வத்தலுக்கு
ஆகட்டுமே.)

**Bella Dalima**
அடிகளை விட திட்டுகள்
வலிக்கத் துவங்கிய நாளில்
பெரியவர்களாகிப் போனோம்

**Vanna Serr**
சம்பூர்_அனல்மின்_நிலையம்
ஹலோ இன்டியன்ஸ்
நமக்கு அனல்மின்நிலையம்
கட்டித்தாறது இருக்கட்டும்
முதல்ல உங்களுக்கு கக்கூஸ்
கட்டுங்கப்பா!

**Nanda Kumar Dolakya**
இலங்கை தமிழன்
கிரிக்கெட்டில் இந்தியாவுக்கு
சப்போர்ட் பண்றது நம்ம ஊர்
இஸ்லாமியன் பாகிஷ்தானை
சப்போர்ட் பண்ற மாதிரி
இரண்டும் தவறுதான்

**அஷோக்**
நியூட்டனின் மேல் விழுந்ததால்
ஆப்பிள் நியூஸ் ஆகியது. என்
மேல் விழுந்திருந்தால் ஜூஸ்
ஆகியிருக்கும்.

**பாண்டியன்**
சுடுகாடு சுடுகாடுன்னு
கேவலாமா யாரும்
பேசவேண்டாம். அங்கே
போறதுக்காக அவனவன்
உயிரைக் கொடுத்து
செத்துக்கிட்டு இருக்கான்.
க்கும்...க்கும்...

**அமுதா**
கேட்டதெல்லாம் கிடைத்து விடும்
வாழ்க்கை, விஜய் படத்தை விட
மொக்கையானது!

## நிகழ்வுகள்

செப்ரெம்பர் 13: மூளாய் கிழக்கு கம்பிப்புலம் ஆதிவைரவர் மணவாளக்கோலம்

செப்ரெம்பர் 15: நெடுந்தீவு தெற்கு காட்டு முத்துமாரியம்மன் அபிசேகம்
வவுனியா ஆசிக்குளம் பிள்ளையார் கும்பாபிசேகம்
மட்டுவில் பன்றித்தலைச்சி சிவகாமியம்மன் அபிசேகம்

செப்ரெம்பர் 16: புலோலி தென்மேற்கு பத்திரகாளி சமேதர வீரபத்திரசுவாமி ஆலய மகாகும்பாபிசேகம்

செப்ரெம்பர் 19 கீரிமலை நகுலகிரி குலமாதவர் பெருமாள் அபிசேகம்








# மறைந்துபோனதும்! மறந்துபோனதும்!!

செ.கார்த்திகா
sukuna.k@gmail.com

**"கீச்சு மாச்சுத் தம்பலம்
கீயா மாயாத் தம்பலம்
மாச்சு மாச்சுத் தம்பலம்
மாயா மாயாத் தம்பலம்"**

என்னடா இது என்று யோசிக்க தொடங்கிவிட்டீர்களா?. ம்ம்.. இது கிராமத்து விளையாட்டுடன் சேர்ந்த ஒரு நாட்டார் பாடல்.

கீச்சு மாச்சுத் தம்பலம், கண்ணாம் மூச்சி, நுள்ளுப்பிறாண்டி கிள்ளுப் பிறாண்டி, இராசா மந்திரி, கெந்திக்கோடு, மாபிள் (போளை) அடித்தல், கிட்டிப்புள் அடித்தல், கிளித்தட்டு மறித்தல், பேனியும் பந்தும், வண்டிச்சவாரி, கோழிச் சண்டை, நாயும் இறைச்சியும், தாயம், மண்சோறு கறி சமைத்தல், கொக்கான் வெட்டல், மாங் கொட்டை போடுதல், கயிறடித்தல், ஊஞ்சலாடுதல் என சிறுவர்கள், இளைஞர்கள், வளர்ந்தவர்கள் எல்லோரும் வயது வேறுபாடின்றி பொழுபோக்காகவும், மகிழ்ச்சியாகவும் விளையாடிய எம்முடைய பாரம்பரிய விளையாட்டுக்கள்தான் இவை. ஒவ்வொரு விளையாட்டுக்கும் சுவாரஸ்யமாக ஒவ்வொரு நாட்டார் பாடல்களும் உண்டு.

தற்போதய நவநாகரீக உலகத்தில் கிரிக்கெட், கால்ப்பந்து, பட்மின்டன், செஸ் என பல்வேறு புதிய விளையாட்டுக்கள் வந்து விட்டதால் பாரம்பரிய கிராமிய விளையாட்டுக்கள் பலவும் இன்று மறைந்துவிட்டன. இவை பற்றி இன்றைய தலைமுறையினருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றே தான் சொல்லவேண்டும். அதுவும் நகர்ப்புறங்களில் வசிப்பவர்கள் நிச்சயம் அறிந்திருக்கமாட்டார்கள். அவ்வாறானதொரு விளையாட்டுத் தான் கொக்கான் வெட்டுதல். உடல்க் களைப்பின்றி ஓரிடத்தில் இருந்து விளையாடக்கூடிய இந்த விளையாட்டை பெண்கள் தான் அதிகம் விரும்பி விளையாடுவார்கள்.

ஆனால், இவ்விளையாட்டை வீடுகளுக்குள் யாரும் வரவேற்பதில்லை. கொக்கான் வெட்டினால் வீட்டுக்குத் தரித்திரம் பிடிக்கும் எனப் பெரியவர்கள் சொல்வார்கள்.

### நீண்ட காலத்திற்கு பின் கண்டேன்

அண்மையில் தேவையின் நிமித்தம் ஆசிரியர் ஒருவரின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவரின் வீட்டில் தரம் 5ற்கு உட்பட்ட மாணவர்களுக்கான மாலை நேர வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தது. வகுப்பு முடிந்ததும் அவர்களைக் கூட்டிச் செல்ல அவர்களுடைய பெற்றோர் மூத்த சகோதரர்கள் என வந்தார்கள். வந்தவர்கள் எல்லோரும் செல்ல 4, 5 சிறுமிகள் (தரம் 7, 8இல் கல்வி கற்பவர்கள்) மட்டும் அங்கு நின்றார்கள்.

"ரீச்சர் விளையாடுவமா?" என்று கேட்டவாறே கைகளுக்குள் பொத்தி வைந்திருந்த கற்களை நிலத்தில் போட்டார்கள். என்ன விளையாட போறார்கள் என்று மனதுக்குள் கேள்வியுடன் அவர்களைப் பார்க்க, ஆசிரியரும் அவர்கள் அருகில் வந்தமர்ந்து "சரி தொடங்குங்கோ, இன்டைக்காவது ஒழுங்கா சொல்லி தந்த மாதிரி விளையாடுவீங்களா?" என்றார்.

அட எனக்கு பின்னர்தான் புரிந்தது நாம் எல்லாம் மறந்து போன கொக்கான் வெட்டி விளையாடப் போறார்கள் என்று. "அந்தக் காலத்தில இருந்து எனக்கு பிடிச்ச விளையாட்டு இது. வீட்டில விளையாட விடாயினம், தோழிகளோட தோட்டக் காணிகளுக்கதான் விளையாடினன். இப்ப சும்மா பொழுது போக்குக்காக இந்தப் பிள்ளையலுக்கு சொல்லிக்கொடுத்தன்." என்றார் 38 வயதுடைய ஜெயந்தி ஆசிரியர்.

அந்த சிறுமிகள் கற்களை ஏந்திப் பிடிக்கவும், நிலத்தில் வீசவும் அவை தாறுமாறாக சிதிறியமை எனக்கு நகைச்சுவையாக இருந்து.

### விளையாடும் முறை

இந்த ஆட்டத்திற்கு ஒரே அளவில் உள்ள ஐந்து கூழாங் கற்கள் போதுமானது. முதலாவதாக ஒரு கல்லை குறிப்பிட்டளவு தூரத்திற்கு மேலே எறிந்து மீதி நான்கு கற்களை கீழே போட்டு கல்லை எறிந்து எறிந்து ஒவ்வொரு கற்களாக(ஓர்வி) எடுத்தல்வேண்டும். இரண்டாவதாக ஒரே நேரத்தில் இரண்டு கற்களாகவும் (ஈர்வி), மூன்றாவதாக மூன்று கற்களை(மூவி) எடுத்து பிறகு ஒரு கல்லையும், நான்காவதாக நான்கு கற்களையும்(நாவி) எடுத்தல் வேண்டும்.

ஐந்தாவது முறையாக ஒரு கல்லை மேலே எறிந்து மீதி கற்களை கைளுக்குள் வைத்துக்கொண்டு சுட்டு விரலால் நிலத்தை தொட்டு பின் கைகளை மூடிய நிலையில் பெரு விரல், சுட்டுவிரலுக்கு நடுவில் கல்லை (புட்டுக்குழல் ஏந்தல்) ஏந்தல் வேண்டும். ஆறாவது தடவையாக ஒரு கல்லை மேலே எறிந்து ஒரு கல்லை கையில் வைத்துக்கொண்டு மீதி கற்களை நிலத்தில் வைத்து ஒவ்வொரு கற்களாக கையிற்குள் உள்ள கல்லைக் கொண்டு மாற்றி மாற்றி வைக்க வேண்டும். மூன்று கற்கள் மாற்றியதும் எல்லா கற்களையும் ஒவ்வொன்றாக எடுக்க வேண்டும். (எடுக்கும் கற்களை கல்லை எறிந்தேந்தும் கைகளுக்குள்ளேயே வைத்திருக்கவேண்டும்.

ஏழாவது தடவையாக ஒரு கல்லை மேலே எறிந்து மீதிக் கற்களை கீழே வைத்து இரண்டு கற்களாக எடுக்கும் போது இரு தடவை கற்களை நிலத்தில் தட்டி எடுத்தல். எட்டாவது முறை எல்லா கற்களையும் மேல் எறிந்து புறங்கையில் ஏந்தி ஒரு கல்லை வைததுக்கொண்டு மீதிக்கற்களை நிலத்தில் போட்டு எல்லா விரல் இடைவெளிகளிலும் ஒவ்வொரு கற்களை எடுத்து, புறங்கையில் இருக்கும் கல்லை மேலே எறிந்து கையை திருப்பி ஏந்தல் வேண்டும். ஏந்தும்போது விரல்களுக்கு இடையில் உள்ள கற்களை தவறவிடக்கூடாது.(நண்டு பிடித்தல்)

ஒன்பதாவது தடவையும் கற்களை மேலே ஏறிந்து புறங்கையில் ஒரு கல்லை வைத்துக்கொண்டு மீதிக் கற்களை நிலத்திலிருந்து பெருவிரலையும், சுட்டு விரலையும் பயன்படுத்தி ஒவ்வொரு கற்களாக எடுத்தல் வேண்டும். பத்தாவது தடவையாக கற்களை கீழே வீச எதிராளி தனக்குப் பிடித்த கற்களில் மூன்றை வெளியே எடுக்க மீதி இரண்டு கற்களுக்கும் நடுவில் விரலால் கோடிட்டு சுண்டி அடித்தல் வேண்டும்.

> **நிலத்தில் கல்லை வீசுவது, எறிந்து ஏந்துவது என்பது ஒரு கலை, நெருக்கமாக வீசினால் கல்லை அனுங்காமல் பொறுக்குவது கஷ்டம். பரந்து வீசினால் விநாடிக்குள் பொறுக்குவது இயலாது.**

இறுதியாக வெற்றியைத் தீர்மானிக்க எல்லா கற்களையும் மேலே எறிந்து புறங் கைகளில் ஏந்தி, ஏந்திய கற்களை தவறவிடாது உள்ளங்கையில் ஏந்தவேண்டும். கைகளுக்குள் எத்தனை கற்கள் உள்ளனவோ அதற்கு புள்ளிகள் கிடைக்கும். ஒரு கல்லுக்கு பத்து புள்ளிகள் வீதம் ஐந்து கற்களும் பிடித்தால் ஐம்பது புள்ளிகள்.

நிலத்தில் கல்லை வீசுவது, எறிந்து ஏந்துவது என்பது ஒரு கலை, நெருக்கமாக வீசினால் கல்லை அனுங்காமல் பொறுக்குவது கஷ்டம். பரந்து வீசினால் விநாடிக்குள் பொறுக்குவது இயலாது. பொறுக்கிய கற்கள் நழுவி விழும் சந்தர்ப்பமும் உண்டு. இவ்வாறு ஏதும் தவறிழைத்தால் எதிராளியிடம் கற்கள் கைமாறப்படும். இரண்டு அல்லது நான்கு பேர் இவ்விளையாட்டை விளையாடலாம்.

இந்த விளையாட்டு பற்றி தெரியாதவர்களுக்கு தெரிந்து கொள்ளவும், முன்னர் விளையாடிய அனுபவம் உள்ளவர்கள் அந்தநாள் ஞாபகங்களை மீட்டிப்பார்ப்பதற்கும் இந்தக் கட்டுரை நிச்சயமாக வழிசெய்திருக்கும் என நம்புகிறேன். கொக்கான் வெட்டுதல் பற்றி உங்கள் வீட்டில் இருக்கும் பெரியவர்களிடம் கேட்டுப் பாருங்கள்.







## பழஞ் சோற்று வடகம்!

நாம் மறந்து போன அல்லது நினைக்காத உணவுகளில் ஒன்றுதான் பழஞ்சோறு. பழஞ் சோறு என்றவுடன் முகம் சுழிப்பவர்களும் இருக்கின்றார்கள், முகம் மலர்பவர்களும் இருக்கின்றார்கள்.

பழஞ்சோற்றினை சாப்பிட விரும்பாதவர்கள் மிஞ்சிய சோற்றினை வீணாக்காமல் "பழஞ் சோற்று வடகம்" தயாரிக்கலாம்.

மிஞ்சிய பழஞ்சோற்றை மிக்ஷியில் அரைப்பதத்தில் அரைத்து அதனுடன், அளவுக்கேற்ப சிறிது சிறிதாக வெட்டிய வெங்காயம், செத்தல் மிளகாய், பெரும்சீரகம், கறிவேப்பிலை, சிறிதளவு உப்பு, என்பவற்றை ஒன்றாகச் சேர்த், பிசைந்து சிறு சிறு உருண்டைகளாகப் உருட்டி வெயிலில் காயவைக்க வேண்டும். நன்றாகக் காய்ந்த பின்னர் அதனை எண்ணெயில் பொரித்து உணவுடன் சேர்த்து சாப்பிடலாம்.






க.தே. தாசன்

நான் இந்த முறை சைக்கிளை பற்றி எழுதலாம் என்று நினைக்கின்றேன். என்ன நான் சைக்கிளின் தயாரிப்பு பற்றி எழுதவில்லை. இப்போது ஊரில் ஒவ்வொரு வீட்டிலும் மோட்டார் சைக்கிள் நிற்கின்றது.

சைக்கிள் என்றால் கடவுள் மாதிரி இருந்த காலமும் ஒன்று இருந்தது. நான் சின்ன பொடியனாய் இருக்கும்போது மாமா வீட்டுக்குள் ஓடும் சைக்கிள் வாங்கி தந்தார். அதே நேரம் பெரியம்மாவின் மகன் பிரகாஷ் அண்ணாவிடமும் ஒரு சின்ன சைக்கிள் இருந்தது. இரண்டு பேரும் தாத்தாவின் அரிசி ஆலையின் நெல் காய போடும் சீமேந்து மேடையில் இரண்டு சைக்கிள்களிலும் ஓடிய நினைவு.

பின்னர் இரண்டு பேரும் கொஞ்சம் வளர்த்த பின் எங்கள் சைக்கிள்கள் தம்பிமாருக்கு மாற்றப் பட்டது. மாற்றப்பட்டது என்றால் மாற்றி உறுதி பத்திரமும் வழங்கப்பட்டது என்று கூட சொல்லாம். ஏன் என்றால் தம்பிமார் எங்களை அந்த சைக்கிகளில் தொடக்கூட விடவில்லை. அதன் பின் அவர்கள் கூடிய நாட்கள் அந்த சைக்கிளில் ஓடியதாக தெரியவில்லை. அதற்கு பதிலாக அந்த சைக்கிள்களில் கூடிய நாட்கள் திருத்த வேலை தாங்களே செய்யத் தொடங்கினார். சில வேளையில் அதன் தாக்கம் தான் இப்போது ஒரு தம்பி கணிணித் துறையிலும், இன்னொருவன் தொழில் நுட்ப துறையிலும் தேர்ச்சிபெற்றவர்களாக விளங்க காரணம் என நினைக்கின்றேன். ஒரு முறை தம்பிமார் அண்ணா வைத்திருந்த சைக்கிளை எனது சைக்கிளில் கயிற்றினால் கட்டி இழுத்துச் சென்றார்கள். என்ன விசயம் எனக் கேட்ட போது சைக்கிளின் இஞ்சின் பழுதாய் போய் விட்டதாக கூறினார்கள். நான் நினைக்கின்றேன் செல்வ மாமாவின் லாரி இஞ்சின் பழுதாய் போய் விட்டால் சுவேந்திர மாமாவின் உழவு இயந்திரத்தால் இழுத்து செல்வது வழக்கம். இதனை பார்த்து தான் அவர்கள் அப்படி செய்து இருக்க வேண்டும்.

சில வருடங்களுக்கு பின் அந்த சைக்கிளில் இரண்டையும் காணவில்லை. அதன் நினைவாய் ஒரு போட்டோ மட்டும்தான் இருக்கு. சாந்தி அக்காவின் பிறந்த நாளுக்கு நானும் அண்ணாவும் சைக்கிளில் இருந்து போட்டோ எடுத்தோம். அதுதான் இப்ப அதுகளுக்கு ஒரு நினைவுச்சின்னம். அந்த போட்டோவை எங்களின் விருப்பத்திற்க்கு எற்றபடி போட்டோ எடுத்த மனோ அண்ணாவிற்கு ஒரு ஓ...போடலாம். நீங்களும் ஓ...போடுங்கோ ஏன் இப்படி சொல்லுகின்றேன் என்றால் அந்த சமயத்தில் எடுத்த போட்டோ பெரிய விசயம்.

பின்னர் நாங்கள் வளர வளர பல சைக்கிள்கள் வீட்டிற்கு வந்து போன ஞாபகம். பின்னர் அப்பா "சாளி" மோட்டார் சைக்கில் வைத்து இருந்ததாக நினைவு. விடியவேளையில் நான் எழும்பி முதல் வேளையாக "சாளி" மோட்டார் சைக்கிளை துடைத்து, பின்னர் மோட்டார் சைக்கிளில் ஏறி எங்கட வீட்டு கேற்றடி மட்டும் ஓடி போட்டுகொண்டுவந்துகொடுத் தால் தான் அப்பா கந்தோருக்கு போவார். அதற்கு அம்மா பேசத் தொடங்கினால் அதற்கு நான் பல கதைகளை கூறுவேன். "இஞ்சின் கீற் பண்ண வேணும் அது தான் மோட்டார் சைக்கிளை ஓட்டி போட்டு கொண்டு வந்தனான்" என்பது அதில் ஒன்று. அதற்கு "வீட்டிலில் பொறுப்பான பையன்" என்ற பட்டமும் பெற்றேன். ஆனால் இப்போது அந்த "பட்டம்" எனக்கு இருக்கின்றதா என்று தெரியவில்லை.

பின்னர் தம்பி சிவம் அண்ணா வின் மோட்டார் சைக்கிளில் ஓட்டி பழகியது இப்போது யாமஹாவிலும் ஓடுகின்றான். அண்ணாவும் யாருக்கும் தெரியாமல் "டிரைவிங்" பழகி பின்னர் இடம்பெயர்வு நேரம் வீட்டில் இருந்த பொருட்களையும் வீட்டில் நின்ற லொறியை எடுத்து கொண்டு வந்த பின்னர் எங்கள் மாமான்மார்களாளல் "சிறந்த டிரைவர்" என்ற பெயர் பெற்றார். அதன் பின்னர் எல்லோருக்கும் தெரியக் கூடியதாக வாகனம் ஓட்டினார். அதைவிட மகாலிங்கம் தாத்தா தனது பிள்ளைகளிடம் டக்கரை ஓட கொடுக்காமல் அண்ணாவிடமே கொடுத்தார்.

இப்படி எல்லா உறவுகளும் மோட்டார் சைக்கிள், கார் என ஓடிக்கொண்டு இருந்தார்கள். நான் ஒருநாள் அண்ணாவிடம் எனக்கும் 'டிரைவிங்' பழக்கி விடு என்றேன். ஓம் பழக்கி விடுகின்றேன் என்று சொல்லி, சொல்லி கடைசியில் இப்ப லண்டனில் இருக்கிறான். ஆனால் மோட்டார் சைக்கிள் மட்டும் ஓடுவதற்கு பழக்கி விட்டான். நான் கேட்டது பெரிய வாகனம் ஓட்டுவதற்கு. அதற்கு அவன் கால் வளர வேண்டும் என சொல்லி சொல்லி எமாத்தி போட்டான். எனது தம்பி தன்னுடைய சட்டைப் பையில் இருந்து அடிக்கடி தன்னுடைய டிரைவிங் லைசன்சை எடுத்துக் காட்டும் போது, எனது மனதுக்கு காட்டமாக இருக்கும். ஏன் என்றால் இந்த காலத்தில் வாகனம் ஓட்ட தெரிய விட்டாலும், கணிணி இயக்கத் தெரியா விட்டாலும் மக்கற் இல்லையாம். இதனால் மாமாவிற்க்கு தெரியாமல் போய் டிரைவிங் ஸ்கூலில் சென்று விண்ணப்பம் செய்தபோது அங்கு இருந்தவரால் எனது விண்ணப்பம் திருப்பி தரப்பட்டது. காரணமாக "நீங்கள் இந்த மாவட்டமாக இருக்க வேண்டும் இல்லாவிட்டால் பொலிஸ் பதிவு தேவை" என்றார்.

இரண்டு வருடத்திற்கு முன் தம்பி "லைசன்ஸ்" எடுக்கும் போது " டிரைவிங்" ஸ்கூல்கள் போட்டி போட்டு விண்ணப்பகளை எற்றுக் கொண்டதும் தம்பி தனது இறுதிப் பயிற்சியை தலைநகரில் இருந்து பல மைல்களுக்கு அப்பால் உள்ள மாவட்டம் வரை கனரக வாகனத்தை ஓட்டி சென்று சிறந்த டிரைவர் என பெயர் பெற்றான்.

நான் சைக்கிளில் கதை கூறுவ தாக கூறி இப்போது மோட்டார் சைக்கிள், வாகனம் எண்டு வந்திட்டன் மன்னிக்க வேண்டும் எல்லாம் "சின்ன சின்ன ஆசைதான்".

வீட்டிலில் இரண்டு சைக்கில் மட்டும்தான் இருந்தது. அப்பாக்கு ஒரு சைக்கிள் மற்ற சைக்கிள் தங்கைச்சியினுடையது. தம்பி யாமஹாவிற்கு சொந்தக்காரன்.

அப்பா கந்தோர் எண்டு ஓடிக் கொண்டு இருப்பார். தங்கச்சியும் தம்பிக்கு நிகர் சைக்கிள் தரமாட் டாள். ஒரு முறை அவளுக்கு தெரி யாமல் சைக்கிளை பள்ளத்துக்குள் விட்டு உடைத்து பின்னர் அம்மாவிடம் பேச்சு வாங்கியதுடன் ஒரு வாரமாய் கதைக்கவும் இல்லை.

**தங்கச்சியும் தம்பிக்கு நிகர் சைக்கிள் தரமாட்டாள். ஒரு முறை அவளுக்கு தெரியாமல் சைக்கிளை பள்ளத்துக்குள் விட்டு உடைத்து பின்னர் அம்மாவிடம் பேச்சு வாங்கியதுடன் ஒரு வாரமாய் கதைக்கவும் இல்லை.**

வெறும் சைக்கிளுக்கு கூட எங்கள் ஊரில் அந்தளவுக்கு மதிப்பு நம்பினால் நம்புங்கோ.

பின்னர் புதுக்குடியிருப்பில் ஒரு நிறுவனத்தில் வேலை கிடைத்தது. அந்தகடிதம்கொண்டுவந்தபியோன் அருந்தவலிங்கம் அண்ணாவிற்கும் ஒரு ஓ...போடலாம். ஏன் என்றால் நானும் சைக்கிள் வாங்குவன் என்ற கனவை நிஜமாக்கியது அந்த வேலை என்பதற்காக அப்படி சொன்னேன்.

அப்ப சம்பளம் எவ்வளவு என்று கேட்டாள் சிரிப்பியள். வெறும் 1,500 ரூபாதான். ஆனால் இப்போது நல்ல சம்பளம் எடுக்கின்றேன். அப்போது அந்த நிறுவனம் எனக்கு பிடித்தபடியினாலும், அதனால் எனக்கு பல நன்மையும் கிடைத்தது. நான் விரும்பி சென்ற துறைக்கு அந்த நிறுவனம் ஒரு வழிகாட்டியாகவும் அமைந்தது.

மூன்றாவது ஆள் பாவித்த சைக்கிளை 1000 ரூபாவிற்கு வாங்கினேன். பிரேக் இல்லை. காலால் தான் பிரேக் பிடிக்க வேண்டும். சீற்றுக்குள் இருக்கும் கம்பி குண்டியில் குத்த குத்த ஓடி வேலைக்கு போவேன். நான் செய்த பாவம் எனக்கு வெளி வேலைதான் தந்தார்கள். இப்போது நான் செய்த வேலையை செய்யும் இன்னுமொருவருக்கு நிறுவனத்தால் மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது. அது நிறுவனத்தின் வளர்ச்சியாக இருக்கலாம். அல்லது அவன் அதிஸ்கரனாய் இருக்க வேணும்.



போன கிழமைதான் அப்பா போனில் கதைக்கும் போது சொன்னார், இப்ப புதுசா ஒரு மோட்டார் சைக்கிள் வந்திருக்காம். பழைய மோட்டார் சைக்கிளை விற்று போட்டு புதுசா எடுக்க போறம். தங்கைச்சியும் புதுசா லேடிஸ் மோட்டார் சைக்கிளும் எடுக்க போறளாம். அப்பாவிடம் எனது அன்பான வேண்டுகோள். அந்த சைக்கிளுக்கு அடிக்கடி ஒயில் போட்டு துடைக்க சொல்லுகின்றேன். ஏன் எண்டால் அதுவும் இல்லை என்றால் இந்த ராசனுக்கு நடராசாதான்.



## விஜயின் தள்ளாட்டத்தால் பறக்கும் பொறி

விஜய் ரசிகர்களை இப்பொழுது தொட்டாலே ஷொக் அடிக்கும். அப்படியொரு கொதிப்பில் இருக்கிறார்கள். பின்ன இருக்காதா தளபதி 'மப்பில்' இருக்கும் புகைப்படங்கள் வட்ஸ் அப்பில் காட்டுத்தீயாக பரவும் கடுப்ஸ் அவர்களிற்கு.பிரேம்ஜியின் பிறந்ததினத்தில் கலந்து கொண்ட விஜய் நல்ல போதையில் தள்ளாடும் படங்கள் அண்மையில் வேகமாக பரவி வருகின்றன. இதுவரை விஜய் பற்றி இருந்து வந்த இமேஜை இந்தப்படங்கள் வெகுவாக உடைத்து விட்டன. இதுதான் ரசிகர்களின் கொதிப்பிற்கு காரணம். அவர்கள் சொல்கிறார்கள், 'இந்தப்படங்கள் இப்பொழுது எடுக்கப்பட்டவையல்ல. 2011 இல் எடுக்கப்பட்டவை. இவ்வளவு நாள் கழித்து இப்பொழுது ஏன் வெளியிடப்படுகிறது? விஜயின் வளர்ச்சியை பொறுக்க முடியாதவர்கள் செய்யும் வேலை' என.



## பீப்பாவாகும் பாப்பா

அஞ்சலிக்கும் சினிமாவிற்கும் ஏதாவது ஜென்மப்பகையோ தெரியவில்லை. நல்ல அழகு நடிப்பு இருந்தும் அவரால் முன்னுக்கு வர முடியவில்லை. ஏதாவது பிரச்சனை இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆரம்பத்தில் குடும்பப்பிரச்சனை. சென்னையை விட்டே தலைமறைவானார். கல்யாணமாகி குழந்தையும் பெற்றுவிட்டார் என்ற கதைதான் வராத பாக்கி. அதற்குள் திரும்பி வந்தார். மீண்டும் நடிக்க ஆரம்பித்தார். நன்றாகத்தான் போய்க் கொண்டிருந்தது இப்பொழுது மீண்டுமொரு பிரச்சனை. இது அஞ்சலியின் பிரச்சனை. பார்ட்டி என்றால் அஞ்சலி என்று அகராதியில் மாற்ற வேண்டும் என்கிறார்கள். எல்லா பார்ட்டிக்கும் அஞ் சலியை அழைக்கிறார்களாம். பார்ட்டிகளில் அஞ்சலி நன்றாக உடைச்சிக்கனம் காட்டுகிறாராம். கொஞ்சம் 'ஏறினால்" பேயாட்டமும் போடுகிறாராம். பிறகென்ன, அஞ்சலிக்கென்று ஒரு கூட்டமே உள்ளதாம். எல்லாம் முடிய மறுநாள் காலையில் சூட்டிங்கிற்கு கொழுக்கட்டை சைசில் கண்வீங்க, உப்பிய முகத்துடன் போகிறாராம். இந்த முகத்தை என்ன பண்ணினாலும் அழகாக காட்ட முடியாதென கமராக்காரர் தலையிலடித்து அழுகிறார்களாம். இப்படியே போனால் பாப்பா பீப்பாவாகி, காணாமல் போய்விடும் என்கிறார்கள்.



## அடுத்த ரேவதி ரெடி

தமிழ்திரையுலகில் ரேவதியின் இடத்தை யாரும் இன்னும் பிடிக்கவில்லை. சிவாஜி, ரஜினி, கமல் என அத்தனை முன்னணி நாயகர்களுடனும் நடித்தவர். தனக்கென தனிப்பாணியமைத்தவர். நீண்டகாலத்தின் பின்னர் இன்னொரு ரேவதி வந்துள்ளார் என குதூகலிக்கின்றனர் சிலர். சமீபத்தில் விக்ரம் பிரவுவின் 'இது என்ன மாயம்' படம் வந்தது. இதில் நாயகி கீர்த்தி சுரேஷ். இதையடுத்து வரிசையாக அவருக்கு வாய்ப்புக்கள் வந்தன. சிவகார்த்திகேயனுடன் நடித்த 'ரஜினி முருகன்' விரைவில் வருகிறது. தற்போது பிரபு சாலமன் இயக்கத்தில் தனுஷ் ஜோடியாக நடித்து வருகிறார். இந்த படத்தில் கீர்த்தி சுரேஷின் நடிப்பை பார்த்து படக்குழு அசத்து விட்டதாம். அப்படியொரு உணர்வுபூர்வ நடிப்பாம். அடுத்த ரேவதி ரெடியென பிரபு சாலமனும் சொல்லித் திரிகிறாராம். இதையெல்லாம் பார்த்த கீர்த்தி, இனி அழுத்தமான பாத்திரங்களில்த்தான் நடிப்பதென முடிவு செய்துள்ளாராம்.

## கார்த்திக்கின் புதிய படம்

இரண்டாவது இன்னிங்சை கார்த்திக் ஆரம்பித்து விட்டார். 'அமரன் 2' படத்தில் தற்போது நடித்துக் கொண்டிருக்கிறார். அடுத்து இன்னொரு படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். எஸ்.கே.வெற்றிச்செல்வன் இயக்கும் 'ஜிந்தா' என்ற படத்திலேயே ஒப்பந்தமாகியுள்ளார். இதில் வைபவ், சுஷ்மா ராஜ் நடிக்கிறார்கள். ஏ.ஆர்.ரஹ்மானின் சகோதரி மகன் ஹசார் காசிப் இசையமைக்கிறார். இளமைத்துள்ளல் நிறைந்த கதையாக இது இருக்கும். நாயகன் வைபவ் இற்கு நிகராக முக்கியத்துவம் மிக்க பாத்திரத்தில் கார்த்திக் நடிப்பார் என பட வட்டாரங்கள் கூறுகின்றன.



# டூரிங் டாக்கீஸ்



## டாப்ஸியின் புது பாய்பிரண்ட்

டாப்ஸிக்கு தமிழ் மற்றும் இந்தியில் ஒருசில படங்கள் மட்டுமே கைவசம் உள்ளது. நிறைய படங்களுக்கு கொடுக்கும் அளவுக்கு இன்னும் கால்ஷீட் தேதிகள் காலியாகவே உள்ளன. இதையடுத்து தனது கவனத்தை வெவ்வேறு வகையில் திருப்பி வருகிறார். ஏற்கனவே திருமண நிலையம் தொடங்கி நடத்தி வருகிறார். தவிர நைட் பார்ட்டிகளில் பங்கேற்கிறார். இந்நிலையில் 'லார்ட் ஆப் த ரிங்க்ஸ்' ஹாலிவுட் படத்தில் நடித்தவரும், பாடகருமான எலிஜா உட் சமீபத்தில் மும்பை வந்தார். அவரை பார்ப்பதற்காக நேரம் ஒதுக்கி சந்தித்தார் டாப்ஸி. இது பற்றி அவர் கூறும்போது, 'எலிஜா எனக்கு மிகவும் பிடித்த ஸ்டார். எந்நேரமும் சிரித்த முகத்துடன் எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். அவரது தீவிர ரசிகை நான். நான் மட்டுமல்ல அவரை சந்திக்க ஏராளமானவர்கள் வந்திருந்தனர். ஆனால் முகம் சுழிக்காமல் எல்லோரையும் சந்தித்தார்' என்றார். நிகழ்ச்சி முடிந்தபிறகு எலிஜாவை தனிமையில் சந்தித்த டாப்ஸி அவருடன் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார்.



## ஈயோட்டும் இலியானா

இலியானா கதைதான் மிக பரிதாபமாகிவிட்டது. அவரை யாரும் இப்பொழுது திரும்பியே பார்ப்பதில்லையாம். ஒருகாலத்தில் தெலுங்கின் அசைக்க முடியாத நாயகியாக இருந்தார். தமிழ், இந்தி திரையுலகங்கள் தங்கத்தாம்பாளம் விரித்து அழைத்தன. யாரையும் கண்டுகொள்ளாமல் இருந்தவர், திடீரென மூட்டைமுடிச்சுக்களுடன் இந்திப்பக்கம் போனார். 2012இல் 'பர்பி' இல் அறிமுகமானார். கடைசியாக 2014 இல் 'ஹப்பி என்டிங்' படத்தில்த்தான் இறுதியாக நடித்தார். அதன் பின்னர் வீட்டிலிருந்து ஈயோட்டிக் கொண்டிருக்கிறார். யாரும் கேட்டால் 'நல்ல கதைக்காக காத்திருக்கிறேன். இப்பொழுதுதான் ஒன்று கிடைத்தது. நடிப்பது பற்றி யோசிக்கிறேன்' என்கிறாராம் பந்தாவாக. அசினின் கதையும் இப்படித்தான் முடிந்தது. இறுதியில் தொழிலதிபருடன் திருமணத்தில் முடித்தார். இலியானாவிற்கு எந்த தொழிலதிபரோ என இந்திக்காரர் பேசிக்கொள்கிறார்களாம்.



## மகளின் கவர்ச்சியால் சங்கடமான அப்பா

இந்தி திரையுலகம் என்றாலே கவர்ச்சி கரைபுரண்டு ஓடுவது. அதில் இழுத்துப் போர்த்துக் கொண்டுதான் நடிப்பேன் என அடம்பிடித்தால், அன்னை திரேசா வேடங்கள் மட்டும்தான் கொடுப்பார்கள். அப்படித்தான் நடந்தது சோனம் கபூருக்கும். ஆரம்பத்தில் நன்றாக இழுத்துப் போர்த்துக் கொண்டு நடித்தார். யாருமே திரும்பிப்பார்க்கவில்லை. பின்னர், சுதாகரித்துக் கொண்டு சூடான அல்பமொன்றை ரிலீஸ் செய்தார். இந்தித்திரையுலகமே அவரது காலுக்குள் வந்தது. சல்மான் கானுடனும் ஜோடி போட்டு விட்டார். சோனம் கபூரின் தந்தையும் பிரபல நடிகர்தான். அனில் கபூர். நீண்டநாளின் பின்னர் அவர் திரையுலகில் இரண்டாம் இன்னிங்சை தொடங்கினார். 'வெல்கம் பக்' என்ற படத்தில் நடிக்கிறார். இதன் பிரீமியர் காட்சி சிலதினங்களின் முன் திரையிடப்பட்டது. இதில் பல பிரமுகர்கள் வந்தனர். சோனம் கபூரும் வந்தார். சும்மா வரவில்லைஞ் மன்னிக்கவும்ஞ் சும்மாதான் வந்தார். பார்ப்பவர்கள் மூச்சுமுட்டுமளவு கவர்ச்சியில் வந்தார். கூட்டமே அவரை மொய்த்துள்ளது. மகளின் கவர்ச்சியினால் தர்மசங்கடப்பட்ட அனில் கபூர், மகள் சோனம் வந்த பக்கத்தையே பார்க்காமல் மறுபக்கம் திரும்பி உட்கார்ந்து விட்டாராம்.



செ.கார்த்திகா
sukuna.k@gmail.com

# பரந்து கிடக்கும் வாய்ப்புக்கள்



இன்றைய காலகட்டத்தில் நாம் வேலைவாய்ப்பொன்றைப் பெற்றுக் கொள்ளவோ அல்லது சுயமாக தொழில் ஒன்றை ஆரம்பித்து அதில் முன்னேறவோ நாம் ஏதோ ஒரு துறையில் கற்றுத் தேர்ந்திருப்பது அவசியமானதாகும்.

பொதுவாகவே நாம் க.பொ.த சாதாரண தரத்தைக் கடந்தால் உயர்தரம், உயர்தரத்தில் சித்தி பெற்றால் பல்கலைக்கழகம் என்ற இரண்டு தெரிவுகளைத் தவிர எது குறித்தும் சிந்திப்பதில்லை. க.பொ.த உயர்தரத்தில் தோற்றுவோர் அனைவருக்கும் பல்கலைக்கழக அனுமதி கிடைத்து விடுவதில்லை. இருப்பினும், பல்கலைக்கழகத்துக்குள் நுழையவேண்டும் என்ற கனவுடன் இரண்டாம், மூன்றாம் தடவை என மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றுகின்றனர். பரீட்சையில் தோற்றுவிட்டால் உயர்கல்விக் கனவுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுகின்றனர். அவ்வாறன்றி, எமது எதிர்காலத்தைச் சிறப்பாக அமைத்துக் கொள்வதற்கு இருக்கக்கூடிய அனைத்து வசதி வாய்ப்புக்கள் பற்றியும் அறிந்து கொள்ளவேண்டும்.

### ஏராளம் வழிகள்!

இன்று அரச மற்றும் தனியார் பல்கலைக்கழங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்பக்கல்லூரிகள், தேசிய கல்வியியற் கல்லூரிகள், விவசாயக் கல்லூரிகள், உயர்தொழில்நுட்ப நிறுவகம், வாழ்க்கை தொழில் கல்வி அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் தொழிற்கல்வி பயிற்சி மையங்கள் மற்றும் கணினி கற்கை நிறுவனங்கள் என இன்னும் பல நிறுவனங்கள் பட்டக் கல்வியை மட்டுமன்றி தொழில்வாய்ப்புக்கு உத்தரவாதமான குறுகிய காலக் கற்கைநெறிகளையும் வழங்கு கின்றன. அரசாங்க பல்கலைக்கழகங்கள் இலவசமாகவும், தனியார் பல்கலைக் கழகங்கள் கட்டணம் அறவிட்டும் பட்டக்கல்வியை வழங்குகின்றன.

சாதாரணதரச் சித்தியுடன். ஆரம்பத்தில் சான்றிதழ் கற்கைநெறி அதன் பின்னர், டிப்ளோமா, அடுத்து பட்டக்கல்வி என பட்டக்கல்வியைப் பெற இன்று ஏராளம் வழிகள் உள்ளன. இவ்வாறு வெளிவாரிக்கல்வியைக் கற்று BA பட்டம் பெற்ற பலர் பல்கலைக்கழகங்களிலும் வேறு பல உயர்மட்டங்களிலும் பணிபுரிகின்றனர்.

### திறந்த பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம் உட்பட, நாடு முழுவதும் 6 பிராந்திய நிலையங்களையும், 19 கற்கை நிலையங்களையும் கொண்டுள்ள திறந்த பல்கலைக்கழகத்தில் 18 வயதிற்கு மேற்பட்ட எவரும் தமது கல்வித் தராதரத்துக்கு ஏற்ற மேற்படிப்பை தொடர முடியும். வார இறுதி நாட்களிலேயே இங்கு கல்வியைத் தொடரவும் முடியும்.

கல்விப்பீடம், பொறியியற்துறை, மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம், இயற்கை விஞ்ஞானம் என நான்கு பீடங்களில் சான்றிதழ், டிப்ளோமா, இளமாணி, முதுமானி பட்டக்கல்வி வரையில் இங்கு பாடநெறிகளுடன், தொடர்கல்விப் பாட நெறிகள், ஆரம்பப் பாடநெறிகள் என்பனவும், ஆராய்ச்சியினூடாக பட்டத்திற்குப் பின்னரான முதுமானி (MPhil), கலாநிதி (PhD) பட்டங்களுக்கான கற்கைநெறிகளும், ஆராய்ச்சி வளாகங்களும் திறந்த பல்கலைக் கழகத்தில் உண்டு.

**கற்கைநெறிகளுக்கும் க.பொ.த சாதாரணதரத்தில் 6 பாடச்சித்தி, உயர்தரத்தில் 3 பாடங்களிலும் சாதாரணச் சித்தி, திறமைச் சித்தி, இரண்டு பாடங்களில் சித்தி ஒவ்வொரு தகைமைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

### மேலும் சில...

- இலங்கையில் மருத்துவ தாதியாவதற்கு விருப்பமுள்ளவர்கள் மருத்துவ தாதி கல்லூரியில் இணைந்து சிறந்த மருத்துவ தாதியாக வர முடியும். மருத்துவ தாதிகள் பயிற்சிக் கல்லூரிகள், ஹம்பாந்தோட்டை, களுத்துறை, ராகம, அனுராதபுரம், பதுளை, காலி, யாழ்ப்பாணம், கண்டி, முல்லேரியா, தேசிய மருத்துவ கல்லூரி ஸ்ரீஜயவர்த்தனபுர ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. கொழும்பு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய சில தேசிய பல்கலைக் கழகங்களும்கூட தாதியர் கற்கைநெறியை வழங்குகின்றன. க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். கற்கைநெறியைப் பூர்த்தி செய்தால் BSc Nursing சான்றிதழைப் பெற முடியும்.
- தொழில்முறைச் சட்டக் கல்வியை வழங்கி வரும் இலங்கை சட்டக்கல்லூரியின் நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றி தேர்ச்சி பெறுவோர் சட்டக்கல்லூரியில் இணைந்து சட்டக்கல்வியைத் தொடர முடியும். எனினும். க.பொ.த. உயர்தரத்தில் நான்குபாடங்களிலும்சித்தி இருப்பதுடன், க.பொ.த. சாதாரணதரத்தில் தமிழ் அல்லது சிங்கள மொழியில் திறமைச்சித்தி பெற்றிருப்பதும் அவசியமாகும். இப்போது கொழும்பு பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், யாழ் பல்கலைக் கழகம் ஆகியவற்றிலும் சட்ட பீடங்கள் உருவாக்கப்பட்டு சட்டக்கல்வி போதிக் கப்பட்டு வருகிறது. பல்கலைக் கழகத்தில் Bachelor of Law முடித்தவர்கள், முதலாம் இரண்டாம் வருட விலக்குடன் நேரடியாக சட்டக்கல்லூரியில் இணைந்து மூன்றாம் ஆண்டிலிருந்து கல்வி கற்க முடியும்.
- பாடசாலைக் கல்வியுடனேயே குறுகிய காலத்தில் தொழில்மையப் பயிற்சியைப் பெற்று விரைவில் தொழில் வாய்ப் பொன்றைப் பெற்றுக்கொள்ள இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் தொழில்நுட்பக் கல்லூரி வழிகாட்டுகிறது. இங்கு முழுநேர பாடநெறிகள் முற்றிலும் இலவாசமாகவே நடத்தப்படுகின்றமை மாணவர்களுக்கு மற்றுமொரு வரப்பிரசாதம்.
- யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம், பாடசாலைவீயைவிட்டு விலகியவர்கள் மற்றும் தொழில்நுட்ப மற்றும் தொழில்திறன்களை வளர்த்துக் கொள்ள விரும்புவோருக்கு மூன்றாம் நிலைக்கல்வியை வழங்குகின்றது. இங்கு நடாத்தப்படும் தொழில்மையக் கற்கைகள் அனைத்தும் டிப்ளோமா மட்டக் கற்கைநெறிகளாகும்.
- தொழிற்பயிற்சி அதிகாரசபையும் (VTA) பல்வேறு தொழிற்கல்விகளை வழங்குகின்றது. இங்கு தொழிற் பயிற்சிகளைப் பெறுபவர்களுக்கு இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடு களிலும் தொழிலவாய்ப்புக்களை சுயதொழிலுக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கின்றது.
- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (SLIIT), IDM, Asian கணினி நிறுவனம், E-Soft, MCAI Campus, Informatics Institute of Technology (IIT), IIS என பல தனியார் கற்கைமையங்கள் கல்வித்தகைமைக்கேற்ப தொழில்நுட்பத்துறையில் கற்கைநெறி களை வழங்குகின்றன.
- இவை தவிரவும் பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா, கனடா உள்ளிட்ட விரும்பிய நாடுகளில் வெளி நாட்டுப் பட்டக்கல்வியைத் தொடர முடியும். நேபாளம், ரசியா, பங்களாதேசம், சீனா, இந்தியா, மலேசியா உள்ளிட்ட நாடுகளில் உயர்தரத்தில் சாதாரண சித்தியுடனேயே விரும்பிய பட்டக் கல்வியைத் (மருத்துவக்கல்வி உட்பட)

தொடரமுடியும். (ஆங்கில அறிவு அவசியம்)

**பொருத்தமானதை தெரிவுசெய்யுங்கள்!**

ஒவ்வொரு கற்கைநெறிகளுக்கும் க.பொ.த சாதாரணதரத்தில் 6 பாடச்சித்தி, உயர்தரத்தில் 3 பாடங்களிலும் சாதாரணச் சித்தி, திறமைச் சித்தி, இரண்டு பாடங்களில் சித்தி ஒவ்வொரு தகைமைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இவற்றில் பொருத்தமான பல்கலைக்கழகத்தையோ, உயர்கல்வி,தொழிற்கல்வி நிறுவனங்களையோ நீங்கள்தான் தெரிவுசெய்ய வேண்டும்.

**தெரிவிற்கு முன்னர்**

1. என்னுடைய கல்வித்தகைமை என்ன முதலில் யோசியுங்கள். (க.பொ.த சாதாரணதரமா?, உயர் தரமா? என்ன தரம்)
2. எனது தகைமைக்கு ஏற்ற கற்கைநெறிகள் எங்கெங்கு உள்ளன? உள்ளூரா வெளியூரா அல்லது வெளிநாடா?



3. அங்கு என்னென்ன கற்கைநெறிகள் உள்ளன?
4. எந்தத்துறையில் எந்த கற்கைநெறியைத் தொடரவுள்ளேன்? எனக்கு பொருத்தமானது எது? தொழிற் கல்வியா அல்லது உயர்கல்வியா?
5. தெரிவுசெய்யும் கற்கைநெறி எவ்வளவு காலப்பகுதிக்கு உட்பட்டது, கட்டணம் செலுத்த வேண்டுமா? ஆம் எனில் எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும்?
6. தெரிவுசெய்த கற்கைநெறியைத் தொடர்வதால் எதிர்காலத்தில் தொழில்வாய்ப்புக்கள் கிடைக்குமா? என்பன பற்றி நன்கு சிந்தியுங்கள்.
7. கற்கைநெறி மற்றும் அந்தக் கற்கைநெறியை வழங்கும் கல்வி நிறுவனம் அல்லது பல்கலைக்கழகத்தை தெரிவுசெய்ததும். அந்த கல்வி நிறுவனத்தில், பல்கலைக் கழகத்தில் என்னென்ன வசதிகள் உள்ளன என்பதைக் கண்டறியுங்கள்.
8. கடந்த ஆண்டுகளில் அங்கு கற்றவர்களின் பெறுபேறுகள் என்ன என்பதை அறியுங்கள்.
9. கல்வி நிறுவனத்திற்கான அங்கீகாரம், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வித்துறை சார்ந்த நிறுவனங்களுடன் அதற்குள்ள தொடர்பு ஆகியவற்றை அறிந்துகொள்ளுங்கள்.
10. நிறுவனம் வழங்கும் பட்டத்திற்கான அங்கீகாரம் மற்றும் சான்றிதழுக்கான மதிப்பு என்ன?
11. கல்வி நிறுவனத்தின் இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்
12. நிறுவனத்தின் வரலாற்றை வாசித்தறிந்து நிறுவனம் பற்றி அதன் தலைவர் அல்லது பொறுத்தமான அதிகாரியுடன் உரையாடி முழுமையாக அறிந்துகொள்ள முனையுங்கள்.

இவ்வாறு எல்லா வழிகளிலும் ஆராய்ந்து, திட்டமிட்ட பின்னரே உங்களுக்கு பொருத்தமான கற்கைநெறி, அவற்றை வழங்கும் நிறுவனத்தை தெரிவுசெய்யுங்கள். காலத்தை வீணாக்கமல் க.பொ.த சாதாரண தரம், உயர்தரம் முடித்த பின்னர் ஏதேனும் ஒரு துறையில் பொருத்தமான, விரும்பிய கற்கைநெறியை தொடர்ந்து உங்கள் உயர் கல்விக் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள்.

# ‘பளார்’ கொடுக்கும் பாடம்

பேருந்து நிலையங்களில் நின்று'ரொமான்ஸ்' விட்டுக் கொண்டு நிற்கும் மன்மத குஞ்சுகளிற்கு எச்சரிக்கை மணியடிக்கிறது இந்த செய்தி.

நீங்கள் ரொமான்ஸ் என்ற பெயரில் எக்குத்தப்பாக நடப்பீர்களாம்... பாரதிராஜா பட ஹீரோயின்ஸ் மாதிரி பெண்கள் தலையை குனிந்து கொண்டு போக வேண்டுமாம் என்றெல்லாம் கற்பனை குதிரையை தட்டிவிட்டு கொண்டிருப்பீர்களென்றால், செல்வா மாதிரி நீங்களும் கம்பி எண்ண வேண்டி வரும்.

வாரியப்பொல பஸ்நிலையத்தில் நடந்தது இது. திலினி என்ற பெண், செல்வா என்ற வாலிபனிற்கு திடீரென பளார் கொடுத்தார். இதை யாரோ வீடியோவாக பிடித்து விட, இணையத்தில் வைரலானது. 'சிவனேயென நின்ற பையனை அடித்துவிட்டார்... இப்பத்தையான் பெண்களே இப்படித்தான். பையனின் கடைவாய் பல்வேறு கழன்றுவிட்டது' என வழக்கமான கலாசார காவலர்கள் உச்சுக்கொட்டிக்கொண்டிருக்க, திலினி கைதானார்.

அவர் சாதாரண பெண்ணல்ல. பெண்கள் அமைப்புக்களுடன் இணைந்து போராடினார்.

நீதிமன்றத்திற்கு சென்றது. பினனர் நடந்த விசாரணைகளில் பஸ்நிலையத்தில் நின்று தொல்லைகொடுப்பதே அந்த பையனின் தொழில் என்பதை பொலிசார் கண்டறிந்தனர். திலினிக்கும் தொல்லை கொடுத்துள்ளான். நீதிமன்றம் வழக்கிலிருந்து திலினியை விடுதலை செய்தது. வாலிபனிற்கு ஆறுமாத கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது.





# ‘பிடிச்சு ஜெயில்ல போடுங்க சார்’

யாழ்ப்பாணத்தில் பொது இடத்தில் 'உச்சா' போவது மிக சாதாரண நிகழ்வு. பலபேர் பார்க்கிறார்கள்... பொதுஇடத்தை அசிங்கம் செய்கிறோம் என்ற விவஸ்தையே இல்லாமல், தீக்கோழிபோல முகத்தை புதைத்துக்கொண்டு சாரத்தை தூக்கிக் கொண்டு நிற்கும் காட்சிகள் சர்வசாதாரணம். அண்மையில் இப்படி நின்ற இரண்டு பேரை யாழ்ப்பாண பொலிசார் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தியுள்ளனர். இப்படியானவர்களள் திருந்தும் வகையான செயற்பாடுகளை பொலிசார் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும்.

# ஆள்பாதி ஆடைபாதி

ஒரு புகழ்பெற்ற அறிஞர் ஒருவர் தன் நண்பன் ஏற்பாடு செய்திருந்த விருந்திற்கு சென்றார். அறிஞர் வசதி படைத்தவர் இல்லையென்பதால் தான் வழக்கமாக அணியும் கிழிந்த ஆடைகளையே அணிந்துசென்றார். விழா மண்டப வாயிலுக்கு சென்றவருக்கு அதிர்ச்சி. அங்கு அவரை வாயில் காப்பாளர்கள் உள்ளே விடவில்லை. அங்கு ஆடம்பரமான விலையுயர்ந்த ஆடை அணிகலன்கள் அணிந்த பணக்காரர்கள் உள்ளே சென்று கொண்டிருந்தார்கள். அறிஞரின் கிழிசல் உடையைக் கவனித்த காவலர்கள் அவர் யாரோ பிச்சை எடுப்பவர் என நினைத்து உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

மனம் நொந்து வீடு திரும்பிய அறிஞர் தனது மற்றொருநண்பரிடம் விலையுயர்ந்த ஆடையை இரவல் வாங்கி போட்டுக்கொண்டு விழா மண்டபத்திற்கு சென்றார். இப்போ இவர் உள்ளே செல்ல எவ்வித தடையும் இல்லை.

விருந்துண்ணும் நேரம் வந்தது அறிஞரும் விருந்துண்ண அமர்ந்தார். ஆனால் அவர் விருந்துண்ணவில்லை. மாறாக தான் அணிந்திருந்த ஆடைகளை களைந்து இருக்கையில் வைத்து ஆடைகளைப் பார்த்து சாப்பிடு சாப்பிடு என அரற்ற ஆரம்பித்தார். இதைப் பார்த்த யாருக்கும் எதுவும் புரியவில்லை. நண்பர் விரைந்து வந்து அறிஞரிடம் பரபரப்புடன் என்ன நடந்தது எனக்கேட்டார். சற்று முன்பு தனக்கு நடந்த அவமானத்தையும் பிறகு தான் விலையுயர்ந்த ஆடை அணிந்தவந்ததையும் அறிஞர் நண்பரிடம் கூறினார்.

உமது விருந்தில் உமக்கு மதிப்பில்லை நான் அணிந்து வந்த ஆடைகளுக்குத்தான் மதிப்பு, மரியாதை எல்லாம். எனவே விருந்து உணவுகளும் அதற்குத்தான் சேரவேண்டும். எனவேதான் இவ்வாறு செய்தேன் என்று கூறினார். தம் பணியாட்கள் செய்த தவறை அறிந்த நண்பர் அதற்காக அறிஞரிடம் மன்னிப்பு வேண்டினார்.

உண்மைதான்! நாம் எவ்வளவு புத்திசாலிகளாய், திறமையானவர்களாய் இருந்தாலும் நம்மைப் பார்ப்பவர்கள் நாம் அணியும் ஆடைகளை வைத்தும், நமது செயல்களை வைத்தும்தான் நம்மை மதிப்பிடுவார்கள். இதை அறிந்துதான் எம்முன்னோர்கள் ஆள்பாதி ஆடைபாதி என்றார்கள் போலும். சரி உடை உடுப்பதில் நீங்கள் எப்படி?



- எப்போதும் தூங்கி வழியாமல் சுறுசுறுப்புடனும், நல்ல அழகிய ஆடையுடன் திகழும்போது நம்மை அறியாமல் ஒருவித புத்துணர்ச்சி ஏற்படுபதை நாம் அறியலாம்.
- தினந்தோறும் சலவை செய்த தூய ஆடைகளையே விரும்பி அணிந்து பழகுங்கள்
- நாள்தோறும் இப்படி நீங்கள் தூய ஆடையுடன் செல்லும்போது பிறர் மத்தியிலும், உங்கள் நண்பர்கள் மத்தியிலும் உங்களுக்குள்ள மதிப்பு வெகுவாக உயரும்.
- அழுக்கான உடைகளையோ துவைக்காத உடைகளையோ நீங்கள் அணிந்துசெல்லும்போது பொது இடங்களில் உங்களை அறியாமலையே உங்களிடம் தாழ்வு மனப்பான்மை தோன்றக்கூடும். புதுப்பொலிவோடு உடையணிந்துவரும் உங்கள் நண்பர்களிடமோ அல்லது மற்றவர்களிடமோ பழக உங்களுக்கு கூச்சம் ஏற்படும்.
- எல்லோரிடமும் மதிப்பு பெற வேண்டும் என்பதற்காக புது உடைகள்தான் அணிய வேண்டும் என்றும் பெற்றோரிடம் அடம்பிடிக்க கூடாது. விழாக்காலங்களிலும் சிறப்பு நாட்களின் போதும் அவர்கள் உங்களுக்கு வாங்கித்தரும் புத்தாடைகளை பராமரிக்க பழகிக்கொள்ளுங்கள். மேற் கண்டவாறு நீங்கள் பேணி பாதுகாக்கும் ஆடைகளை நீங்கள் அணிந்துகொள்ளும் அது நீண்ட நாள் பயன் தருவதோடு தினமும் புத்தாடை அணிவது போன்ற மகிழ்ச்சியையும் தரும்.



திரு.ஜெ. சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்,
தென்னைப் பயிர்ச் செய்கைச்சபை
கிளிநொச்சி



# தெங்கு உறபத்தியில் காலநிலை மாற்றம் செலுத்தும் தாக்கம்

“காலநிலை மாற்றம் காரணமாக வெப்பநிலை அதிகரிப்பதும் நீர்ப்பற்றாக்குறை ஏற்படுவதும் தேங்காய் அறுவடையில் அதிக தாக்கம் செலுத்தும். அதே நேரம் சூழல் வெப்பநிலை அதிகரிப்பதும் நீர்ப்பற்றாக்குறையும் தென்னையின் இனவிருத்திச் செயற்பாட்டில் அதிக தாக்கம் ஏற்படுத்தும்.”

அண்மைக்காலமாக இலங்கையில் சகல பிரதேசங்களிலும் வெப்பநிலை அதிகரித்தலும், இடத்துக்கிடம் வேறுபட்ட வானிலை நிலைமை ஏற்படுவதும் இதற்கு தெளிவான சான்றுகளாக விளங்குகின்றன. அதனால் எமது நாலீட்டின் பெருந்தோட்டப்பயிரான தெங்கு கைத்தொழிலை முன்னெடுப்பதாயின் காலநிலை மாற்றம் தெங்கு உற்பத்தி திறனில் செலுத்தும் தாக்கத்திற்கு ஈடுகொடுக்கக்கூடிய ஒழுங்கமைப்புக்களையும் விஞ்ஞானபூர்வமாககண்டறிவதுமிகவும் அவசியம். சிறந்த தெங்கு உற்பத்தி திறனுக்கு 27 29 பாகை செல்சியஸ் இடையிலான வெப்ப நிலையையும் 1250 2500 மீற்றர்களுக்குஇடையிலான பரவலான வருடாந்த மழைவீழ்ச்சி அவசியமானது.

இலங்கை போன்ற உலர்வலய நாடுகளில் தற்போது நிலவுகின்ற சாதாரண வெப்பநிலை தெங்குச் செய்கைக்கு பொருத்தமானதாக காணப்படுகிறது. அது சில மாதங்களில் மாத்திரம் அதிகரித்துக் காணப்படும். காலநிலை மாற்றம் காரணமாக வெப்பநிலை அதிகரிப்பதால் நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டு தேங்காய் விளைச்சலில் மிகவும் தாக்கம் ஏற்படும். சுற்றாடல் வெப்பநிலை அதிகரிப்பதும் நீர்ப்பற்றாக்குறை ஏற்படுவதும் தென்னை மரத்தின் இனவிருத்தி தேங்காய் உருவாக்கும் செயற்பாட்டில் பற்றாக்குறை ஏற்படுத்தும். அது மரத்தின் ஏனைய பாகங்களின் வளர்ச்சியில் ஏற்படுகின்ற தாக்கத்தை விடவும் உயர்வானது. இதனால் அதிக பாதிப்புக்கு உள்ளாவது தேங்காய் குலை உருவாவதற்கு பிரதான காரணியாக விளங்குகின்ற சிறிய பெண்பூவே (குரும்பட்டி).

இத்தென்னம்பூ விரிந்து முதல் 2 3 மாதங்களுக்கிடையில் 33 பாகை செல்சியஸ் விடவும் அதிக வெப்பநிலைக்கும், நீர்ப்பற்றாக் குறைக்கும், வரண்ட சுற்றாடல் நிலைமைக்கும் முகங்கொடுக்க நேருமாயின் அத்தென்னம்பூவில் உருவான குரும்பட்டிகள் வளர்ச்சி குன்றி, வளர்ச்சி குன்றிய காய்கள் உருவாகும். அத்தோடு குரும்பட்டிகளின் எண்ணிக்கையும் குறையும். அப்படியான தென்னங்குலைகள் உருவாகும் மாதங்களில் தேங்காய் உற்பத்தியும் வீழ்ச்சியடையும். தற்போது தெங்கு பயிர்ச்செய்கை செய்யப்படும் பிரதான பகுதிகளில் சில மாதங்களில் குறிப்பாக (வரண்ட வலயம்) வடமாகாணம் போன்ற பிரதேசங்களிலும் இந்த பெண்பூ குரும்பட்டி உலர்ந்து போவதை பரவலாகக் காணமுடிகிறது. இப்பலவீனமான மகரந்தச்சேர்க்கை இரு காரணங்களால் நிகழுகிறது. அதாவது அதிக வெப்பநிலை காரணமாக ஒன்றில் குறைந்த மகரந்கச்சேர்க்கை இடம் பெறும். இல்லது உரிய முறைப்படி மகரந்தச்சேர்க்கை இடம்பெறுவதில்லை.



இது தொடர்பாக விரிவாக நோக்கினால் தென்னை மரமொன்றில் ஒரு மாத்தில் ஒரு பூவாவது உருவாகின்றது. (மே, ஒகஸ்ட் மாதங்களில் இரு பூக்கள் வெளியாகும்) அப்படியாயின் வருடத்திற்கு 12 14 வரையான பூக்கள் வெளிப்படுகிறது. தென்னம்பூ விரிவடைவதற்கு ஒரு மாதாலத்திற்கு முன்னர் மகரந்தச் சேர்க்கை இடம்பெறும்.

இந்த மகரந்தச்சேர்க்கை சிறந்த முறையில் இடம்பெறுவதற்கு தேவையான உள்ளகக் காரணியாக விளங்குவது காபோஹைதரேற்றின் (சுக்கோஸ்) அளவாகும். மகரந்தச்சேர்க்கை நிகழும் காலங்களில் உயர்வெப்பநிலைக்கும், நீர்ப்பற்றாக்குறைக்கும் முகம் கொடுக்க நேருமாயின்

**காபன்டயக்சைட் வெளியேற்றுவதற்கும் தெங்குச் செய்கையை பயன்படுத்தலாம். 60 வருடங்கள் வரையான ஆயுள் காலத்தை கொண்ட தென்னைமரம் சுழற்சி செயற்பாட்டின் மூலம் காபன்டயக்சைட்டை உறிஞ்சி ஒட்சிசனை வழங்குகிறது.**

காபோஹைதரேற்றின் அளவும் குறைவடையும். அதனால் மகரந்கச் சேர்க்கைக்குத் தேவையான பிரதான சக்தி வளத்தில் பற்றாக்குறை ஏற்படும். இதன் காரணத்தினால் சிறந்த முறையிலான மகரந்தச்சேர்க்கை இடம்பெறுவது குறையும்.

மகரந்தம் காற்றின் மூலமோ அல்லது வண்டுகள் மூலமோ பெண் பூவில் (குரும்பட்டி) மீது விழுந்ததன் பின்னர் மகரந்தச்சேர்க்கை ஆரம்பமாகிறது. இச்செயற்பாடு பூவிரிந்த முதல் மாதத்திற்குள் நிகழுகின்றது. மகரந்தச்சேர்க்கைக்கு மிகவும் பொருத்தமான வெப்பநிலை 28 பாகைசெல்சியஸ் ஆகும். என்றாலும் 33 பாகை செல்சியஸுக்கு வெப்பநிலை அதிகரிக்குமாயின் மகரந்தச் சேர்க்கை இடம்பெறுவது மிகவும் குறைவு. அத்தோடு அதிக வெப்பநிலை, சுற்றாடல் உலர்தல் போன்ற காரணங்களாலும் மகரந்தச் சேர்க்கை சிறந்த முறையில் இடம்பெறாது. குரும்பட்டிகளும் உலர்ந்து போகும். இந்நிலைமை காரணமாக மகரந்தச் சேர்க்கைக்குள்ளான குரும்பட்டிகளின் எண்ணிக்கை குறைவடையும். தற்போது ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் மலரும் தென்னம்பூக்களின் இந்நிலைமையை அவதானிக்க முடிகிறது. மகரந்தச்சேர்க்கைக்கு பொருத்தமான வெப்பநிலைக்கும் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய வெப்பநிலைக்கும் இடையிலான வேறுபாடு தென்னங்கன்றுகளுக்கு ஏற்ப வேறுபடும்.

தற்போது இது தொடர்பான ஆய்வுகள் தெங்கு ஆராய்ச்சி நிலையத்தில் வெற்றிகரமாக இடம் பெறுகிறது. உலர்வலயத்தில் மேற்கொள்ளபடுகின்ற தெங்கு செய்கையில் தென்னையுடன் பயிரிடக் கூடிய பொருத்மான ஏனைய பயிர் வகைகள் யாவை என்பதையும் அதனை நுண் சூழல் நிலைமைக்கு எவ்வளவு துலீரம் பொருத்தமானதாக மாற்ற முடியும் என்பது தொடர்பாகவும் தற்போது ஆராய்ச்சி இடம்பெறுகிறது. இந்தப்புதிய ஆராய்ச்சியினுலீடாக அதிக வெப்பநிலை, வரட்சி, நிலைமைகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய தென்னங்கன்றுகளை அறிமுகப்படுத்தவும் பொருத்தமான கலப்பு பயிர்செய்கையை தெரிவு செய்யவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் மூலம், காலநிலை மாற்றத்திற்கு பொருத்தமான வகையில் தெங்குச் செய்கையை முகாமைத்துவம் செய்வது குறித்து விஞ்ஞானபூர்வமாக சிபார்சு செய்யலாம். அதே போல் காலநிலை மாற்றத்திற்கு பிரதான காரணியாக விளங்கும் காபன்டயக்சைட் வாயுவை சுற்றாடலிலிருந்து வெளியேற்றுவதற்கும் தெங்குச் செய்கையை பயன்படுத்தலாம். 60 வருடங்கள் வரையான ஆயுள் காலத்தை கொண்ட தென்னைமரம் சுழற்சி செயற்பாட்டின் மூலம் காபன்டயக்சைட்டை உறிஞ்சி ஒட்சிசனை வழங்குகிறது.

உலக வானிலை விஞ்ஞான அமைப்பின் யோசனைக்கு அமைய CDM மற்றும் TEDD இயந்திரங்களுக்கு ஏற்ப காபன் வியாபாரத்திற்காகவும் எம்மை போன்ற அமைப்புகளுக்கு வெளி நாடுகளில் சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இது தொடர்பான ஆரம்ப ஆராய்ச்சிகளின்படி 25 வயதைக் கொண்ட உயர்வகை தென்னை பயிர்ச்செய்கை அடங்கிய ஹெக்டேயர் ஒன்றின் மூலம் வருடத்திற்கு 17 80 மெற்றிக்தொன் காபன்டயக்சைட் அளவில் ஸ்திரமாக அப்புறப்படுத்த முடியும் என்பது தெரியவந்துள்ளது. இந்த அளவு மரத்தின் வயது கன்று காலநிலை வலயம் மற்றும் மண்வள நிலைமை என்பவற்றுக்கு ஏற்ப மாறுபடமுடியும்.



# ‘வாஸ்து’ தரும் மனை அமைப்பு சோதிடம்



சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392

“வாஸ்து” என்பது பஞ்சபூதங்களின் சக்திக்கு ஏற்புடையதாக வீடு அமைக்கும் நிலம் அல்லது வசிக்கும் இடம் என்பதாகும். இதனை மனையடி சாஸ்திரம்என்றும்வாஸ்துசாஸ்திரம் என்றும் அழைக்கப்படுகிறது. சாதாரணமாக இயற்கையின் நியதிகளுக்கு நாம் உட்பட்டு வாழும் போது பலவகையான நன்மைகள் முன்னேற்றங்கள் என்பவற்றை அடையமுடிகின்றது. இதனை மீறுவோமாயின் பல துன்ப துயரங்களை சந்திக்க நேரிடுகின்றது. எனவே நாம் ஒவ்வொருவரும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்கிற பஞ்சபூதங்களின் தத்துவத்தை உணர்ந்து மதித்து மாசுபடுத்தாமல் வாழப்பழகிக் கொள்ளல் கட்டாயமானதாகும். எனவே நாம் வசிக்கப்போகும் மனையை வாஸ்து சாஸ்திரம் கூறும் அடிப்படையில் வகுத்துக் கொள்ளல் வேண்டும்.

மண்ணினால், சுண்ணாம்புக் கற்களால், செங்கற்களால், சல்லி சீமெந்துக் கற்களால், கருங்கற்களால் என வீடுகளை அவரவர் வசதிக்கேற்ப அமைக்கும் நிலை இருந்து வருகிறது. அன்று குப்பை மேடு இன்று மாடமாளிகை அன்று குளக்கரை இன்று மாடமாளிகை அன்று வயற்பூமி இன்று மாடமாளிகை அன்று மேய்சசல் தரை இன்று மாடமாளிகை என காட்சி தருவதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். ஆயினும் அமைக்கப்படும் மனைகள் யபவும் கட்டுமானப் பொறியியளார்களால் அல்லது பிரதான மேஸ்திரிகளால் மனை சாஸ்திர முறைகளைக் கடைப்பிடித்தே அமைக்கப்பட்டு வருகின்றன என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஆலயங்கள் அமைவதற்கும் மனைகள் அமைவதற்கும் வெவ்வேறான விதிமுறைகள் உள்ளன என்பதை நாம் அறிந்து வைக்க வேண்டும். ஆலயங்கள் “சிற்பசாஸ்திரம்” விதிமுறைகளிலும் நாம் வசிக்கும் மனைகள் மற்றும் கட்டிடங்கள் “மனையடி சாஸ்திரம்” விதி முறைகளிலும் அமைக்கப்பட்டு வருகின்றன.



### வாஸ்து புருஷன் எங்கே எப்போது இருப்பார்?

நல்ல மனை அமைவதற்கு பூமாதேவியின் அருட்கடாட்சம் நமக்குத் தேவைப்படுகிறது. அதற்கு “வாஸ்து புருஷன்” என்று சொல்லப் படுகின்ற நித்திரா தேவனின் துணை முக்கியப்படுகிறது. அந்த “வாஸ்து புருஷனின்” அருள் துணைக்கும் மனையடி சாஸ்திரத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது. இந்த வாஸ்து புருஷன் மாதம் ஒரு தடைவ நித்திரையிலிருந்து விழித்தெழுந்து 5 நாழிகை தமக்குரிய அன்றாட முக்கிய கருமங்களை மலசலம் கழித்தல், தந்த சுத்தி, ஸ்நானம் செய்தல், பூஜை நமஸ்காரம் செய்தல், போசனம் செய்தல், தாம்பூலம் தரித்தல் அரசாட்சி நிலையில் இருத்தல் ஆகிய கடமைகளை முடித்துக்கொண்டு மீண்டும் 12 இராசிகளில்சூரியன் எந்தஇராசியில் இருக்கினன்றாரோ அதில் காலை நீட்டிக்கொண்டும் அதற்கு நேர் எதிராக சப்தமஸ்தானத்தில் உள்ள இராசி வீட்டில் தலையை வைத்துக் கொண்டும் தலையின் கீழ் தனது இடது கரத்தை தலையணை போல் வைத்துக் கொண்டும் வலது கரத்தை தமது தொடை வரையில் நீட்டி வைத்துக் கொண்டும் ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கிடுவார்.

மேலே சொல்லப்பட்ட 5 நாழிகையில் கடைசி 2 நாழிகை நேரத்தில் அத்திவாரமிட்டு வீட்டு வேலைகளை ஆரம்பிப்பது தான் சிறப்பு என மனையடி சாஸ்திர நூல்கள் விளம்பி நிற்கின்றன. ஆயினும் இது மனிதர்களுக்கு தற்காலம் இந்நாளில் வீட்டை ஆரம்பிப்பதற்கு மிகக் கஷ்டமானதென்றே கூறமுடியும். காரணம் எல்லோரும் இயந்திரம் போல இயங்கினால் தான் தமது அன்றாட வாழ்க்கையை கொண்டு நடாத்தலாம் என்ற நியதிக்குள் வந்துவிட்டார்கள். எனவே வாஸ்து சோதிட நூல்களுக்கு ஏற்றதாய் பஞ்சாங்கங்கள் ஒவ்வொன்றும்

> **ராகு கேது மாற்றம், சூரிய பாதசரம், செவ்வாய் இருக்கும் நிலை இவற்றை சோதிடர்மூலம் அறிந்து மனத் திருப்தி கொண்டு வீட்டுத் தலைவன் தலைவி வீடு கட்ட ஆயத்தப் பணிகளில் இறங்க வேண்டும்.**

வருடத்தின் 12 மாதங்களிலும் மிக நல்ல சுப நாட்களை “வீடு கட்டுதலும் குடிபுகுதலும்” என்ற வகுதியில் உள்ளடக்கி அச்சிட்டு பிரசுரித்து வருடாவருடம் வெளியிட்டு வரப்படுகின்றன என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். அத்தகைய பஞ்சாங்களில் எந்த இராசியினருக்கு எந்த வாசல் மனை பொருந்தும் என்பதை நாம் தெரிந்து கொள்வது மிக மிக முக்கியமானதொன்றாகும்.

### எந்த வகையில் எந்த இராசிக்கு மனை?

**கிழக்கு வாயில் மனை (விருச்சிகம் மனை):**
இடபம் மிதுனம் கடகம்
சிங்கம் கன்னி துலாம்

**வடக்கு வாயில் மனை (சிங்கம் மனை):**
இடபம் மிதுனம் கடகம்
கும்பம் மீனம் மேடம்

**தெற்கு வாயில் மனை (கும்பம் மனை):**



சிங்கம் கன்னி துலாம்
விருச்சிகம் தனு மகரம்

**மேற்கு வாயில் மனை (இடபம் மனை):**
விருச்சிகம் தனு மகரம்
கும்பம் மீனம் மேடம்

மேலே சொல்லப்பட்டவற்றைக் கொண்டு ஒரு இராசிக்காரருக்கு இரண்டு வாயில்கள் மனை அமைப்பதற்கு பொருந்திக்காணப் படுகிறது.

### எந்த நாளில் மனை கோலலாம்?

ஒவ்வொரு வருடமும் பஞ்சாங்களில் குறிப்பிடப்படும் சுபநாள்கள் ஒன்றில் மனை அமைப்பவர்கள் தமது அத்திவார வேலைகளை ஆரம்பிக்கலாம். அவ்வாறு தெரிவு செய்யும் சுபநாள் வீடு அமைக்கும் தலைவன் தலைவிக்கு குற்றமற்ற பொருத்தமான நாள்தான் என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும். மேலும் ஆனி புரட்டாதி மார்கழி பங்குனி மாதங்கள் தவிர்ந்த மற்றைய எட்டு மாதங்களிலும் பஞ்சாங்களில் “வாஸ்து புருஷன்” எழுகின்ற காலம் போடப்பட்டிருக்கும். துமிழ் மாதமும் தமிழ் திகதியும் நேரமும் பின்வருமாறு அமையும். இதில் மாற்றம் எதுவும் இராது.

சித்திரை 10ம் நாள் காலை 8.00 முதல் 9.30 வரை
வைகாசி 21ம் நாள் காலை 9.12 முதல் 10.42 வரை
ஆடி 11ம் நாள் காலை 6.48 முதல் 8.18 வரை
ஆவணி 6ம் நாள் பிற்பகல் 2.24 முதல் 3.54 வரை
ஐப்பசி 11ம் நாள் காலை 6.48 முதல் 8.18 வரை
கார்த்திகை 8ம் நாள் முற்பகல் 10.00 முதல் 11.30 வரை
தை 12ம் நாள் காலை 9.12 முதல் 10.42 வரை
மாசி 22ம் நாள் காலை 9.12 முதல் 1042 வரை

பெரும்பாலானோர் இந்த விஷேடித்த நாட்களையே விரும்புவர்.

“கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.”

“மனை அமைவது போல்மனைவி மக்களும் அமையமாட்டார்.”

“இடம்பட வீடு எடேல்.”

இவற்றை நாம் ஒவ்வொருவரும் மனதிற் கொள்ள வேண்டும்.

### மனை அமைக்கவுள்ள நிலம்

மனை அமைக்கும் நிலம் குறித்து நன்கு அறிந்து கொள்ள வேண்டும். பஞ்சபூதங்களால் பாதிப்புக்குள்ளானதா? அவ்வாறாயின் மாற்று நடைமுறைகள் என்ன? முக்கோண நிலமா? வளைவு நெளிவு கொண்டதா? நீள் சதுரமா? வட்ட வடிவானதா? சற்சதுர வடிவானதா? ஏன்பவை குறித்து மனை அமைக்கும் நிபுணத்துவமான “வாஸ்து” சோதிடர்கள் மூலம் மனை அமைக்கக்கூடிய நிலமாக உள்ளதா? என்பதை அற்ந்து தெரிந்து புரிந்து மனை அமைக்க முயற்சிக்க வேண்டும். நீள்சதுரமான நிலமே வீடு அமைக்க உகந்ததாகும் எனச் சோதிட நூல்கள் கூறுகின்றன. இலங்கை வாழ்மக்கள் குறைந்த பட்சம் 80 முழம் நீளமுடையதும் 76 முதல் 78 வரையுள்ள முழம் அகலமுடையதாயும் உள்ளவாறான நிலத்தைத் தேர்வு செய்வது பொருத்தமானதாகும். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் மக்களின் வாழ்வாதாரங்களைப் பொறுத்தமட்டில் 1 பரப்புக் காணி முதல் 16 பரப்புக் காணி அளவு கொண்ட வரையறைக்குள் மனை அமைக்கும் நிலையை மக்கள் கொண்டுள்ளதை நாம்அறியமுடியும்.மகாலட்சுமியின் அருளால் எல்லோரும் நலம் பெற்று வாழ்வர்.

### மனை அமையும் பலன் உண்டா?

சாதக கிரக அமைப்பில் லக்கின அதிபதி, 4ம் வீட்டு அதிபதி 12ம் வீட்டு அதிபதி இவற்றை ஆராய்ந்து இவை பெற்றுள்ள கிரகபலம் அறிந்து வீட்டைக் கட்ட முயற்சிக்க வேண்டும். தெசாபுத்திப் பலாபலன்கள், வியாழமாற்றம் சனி மாற்றம் ராகு கேது மாற்றம், சூரிய பாதசரம், செவ்வாய் இருக்கும் நிலை இவற்றை சோதிடர்மூலம் அறிந்து மனத் திருப்தி கொண்டு வீட்டுத் தலைவன் தலைவி வீடு கட்ட ஆயத்தப் பணிகளில் இறங்க வேண்டும். அதை விட தலைவன் தலைவி குற்றத்திற்கு ஆட்பட்டுள்ளனரா? நோய்பிணிக்கு ஆட்பட்டுள்ளனரா? நான்கு பக்கமும் திருப்தியாய் சந்தோசமனநிலை கொண்டுள்ளவர்கள் உள்ளனரா? ஏன்றெல்லாம் பார்க்க வேண்டும். அத்துடன் வீடு வேலைகள் ஆரம்பிக்கும் முன்னர் குலதெய்வவழிபாடு செய்து கொண்டு தலைவன் தலைவி மனை அமைக்கும் தீர்மானத்திற்து வர வேண்டும். பலரது பலாபலன்களை ஆராய்தல் போதியளவு பணம் இருந்தும் வீடு கட்டும் பலன் அமையாது. சிலருக்கு சிறிதளவேனும் பணம் இருக்காது ஆனால் வீடு அமையும் பலன் கிடைக்கும். சிலர் இரண்டு மூன்று வீடு கட்டி வாழ்வர். சிலர்ஒரு வீடும் சொந்த மனையின்றி பிறர்மனைகளிவ் குடியிருக்கும் வாடகை ஒப்பந்த நிலையையும் பலன்களில் பெறுவர். இன்னும் சிலர்வீடு இருந்தும் அதில் வாழப்பலனற்றவராய் உள்ளனர்.

**மேலும் விபரங்களை அடுத்த பதிப்பில் அறியலாம்.**

# சின்னசின்ன வீட்டு குறிப்புக்கள்

பெண்கள் என்பவர்கள் பக்குவப்பட்டவர்கள். அதனால் தான் பெண்களின் கை பட்ட சமையல் அதிக சுவை மிக்கது என்பார்கள் நம் மூதாதையர்கள். ஆனால் இன்று பல வீடுகளில் ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் கூட ஹோட்டலை தான் விருப்பத்தோடு நாடுகின்றனர். அந்த அளவிற்கு சமையல் என்பது ஒரு கலை என்பதை பெண்கள் மறந்து விட்டனர். போன் பண்ணினால் வீட்டிற்கு பார்சல் இப்படி ஆயிற்று இன்றய பல குடும்பங்களின் நிலை.

அப்படி இல்லாமல், நாங்களே சூப்பரா சமைக்க வேணும் என்று நினைக்கும் பெண்கள் எல்லோரும் சமையல் புத்தகங்களை வைத்து சமைத்து பழகினாலும் ஏதோ ஒரு வகையில் சுவை குறைவது மட்டும் இன்றி ஏதோ ஒரு தவறு நம்மால் அறியாமலே வருகிறது என்று பல பெண்கள் புலம்புகின்றனர்.

நீங்களும் சமைக்கும் போது 'இப்படி ஆச்சுதே.. என்ன செய்வதுஞ் அநியாயம் ஆக்கீற்றம் என்று பேச்சு வாங்க போறமே' என்று களவாக குப்பை வாளிக்குள் சமைத்துப்பார்த்ததை அடிக்கடி கொட்டுபவர்களா?

அப்படி ஆயின் இந்த டிப்ஸ் உங்களுக்கு ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் உதவும். படித்து பாருங்கள்.

1. முட்டையை வேக வைக்கும் போது அதனுள் இருப்பவை வெளியில் வராமல் இருப்பதற்கு வேக வைக்கும் தண்ணீரில் ஒரு டீஸ்பூன் வினிகரை விடவும். அவ்வாறு விட்டால் முட்டையின் ஓடு வெடித்தாலும் கூட உள்ளே இருப்பவை வெளியில் வராது.
2. பாலை காய்ச்சுவதற்கு முன், அந்த பாத்திரத்தை நன்கு தண்ணீரால் சுத்தம் செய்த பின்னர் காய்ச்சினால் பால் பாத்திரத்தில் அடிப் பிடிப்பதை தவிர்க்கலாம்.
3. பால் புளிக்காமல் இருப் பதற்கு, ஏலக்காயை பால் காய்ச்சும் போதே அதனுடன் சேர்க்கவும். அவ்வாறு செய்தால் நீண்ட நேரத்திற்கு பால் புளிக்காமல் இருக்கும்.
4. தோல் உரித்த உருளைக் கிழங்குகளை கெடாமல் வைப்பதற்கு சில துளிகள் வினிகரைத் தெளித்து ஃப்ரிட்ஜில் அதை வைக்கவும்.
5. எண்ணெய் கறையை அழிப் பதற்கு எலுமிச்சம் பழத்தை இரண்டு துண்டாக வெட்டி அதை உப்பில் வைக்கவும். பின்னர் அந்த துண்டுகளை வைத்து தேய்க்கவும்.
6. காளான்களை அலுமினியம் பாத்திரங்களில் சமைக்கக் கூடாது. ஏனென்றால் அவை பாத்திரத்தை கருமையாக மாற்றிவிடும்.

என்.நித்தியா
(அழகுக்கலைநிபுணர்)
Yarl Beauty Academy
Oriflamme (spo)

# கூந்தல் அழகை மெருகூட்டும் "ஸ்ரைட்டிங்"



பெண்களின் அழகில் கூந்தல் மிக முக்கியம் பெறுகின்றது. இந்த கூந்தல் முகத்தின் தோற்றத்திற்கு ஏற்ப மாறுபட்ட அழகை கொடுக்க கூடியது. அதனால் தான் நாம் தலை சீவும் பொழுது மேவி இழுத்தால் முகத்திற்கு நன்றாக இருக்குமா? இல்லை சரித்து இழுக்க வேண்டுமா? இல்லை வேறு வகையில் இழுத்தால் நன்றாக இருக்குமா? என்று மாறி மாறி இழுத்துப் பாக்கின்றோம் அல்லவா?

ஆனால் சாதாரணமாக எல்லோருக்கும் அழகாக முடி அமைந்து விடுவது இல்லை. அனேகமாக நீளமான முடி இருந்தால் ஒன்று கம்பியாக தும்பு போல் இருக்கும். இல்லை சுருட்டையாக கத்தையாக ஒரு சீரமைப்பு இன்றி காணப்படும். அதனை முகத்திற்கு ஏற்றால் போல் சீராக வடிவமைக்கும் பொழுது தான் முடியின் அழகும் முகத்தின் அழகும் மெருகூட்டப்படுகின்றது.

இப்படி அழகூட்டுவதைதான் நாம் முடி கெயாஸ்ரைல் என்கின்றோம். இந்த முடி கெயாஸ்ரயிலில் ஸ்ரேய்ட்னிங் முறை கேளிங் முறை என இரண்டு வகை உள்ளது.

அந்த வகையில் இந்த வாரம் ஸ்ரேய்ட்னிங் முறை பற்றி பார்ப்போம்.

இந்த ஸ்ரேய்ட்னிங் முறையில் இரண்டு வகையுள்ளது.

1 தற்காலிகமானது.

2 நிரந்தரமானது.

கூந்தல் என்பது 'கெராட்டின்" என்கின்ற புரோட்டினால் ஆனது. கெராட்டின் இணைப்பகங்;களுக்கு இடையில் கந்தகம் வைஹட்ரயன் காபன் நைட்ரஜன் ஆகியவை இருக்கும். இவற்றில் வைஹட்ரயன இணைப்பை மட்டுமே சுலபமாக தகர்த்த முடியும்.

அதை அடிப்படையாககொண்டு செய்யப்படுவதே தற்க்காலிக ஸ்ரேய்ட்டிங். கூந்தலில் தண்ணீர் பட்டால் மீண்டும் பழய நிலமைக்கு மாறிவிடும். இது ஒரு நாள் ஸ்ரேய்ட்டிங். நிரந்தர ஸ்ரேய்ட்டிங் எனப்படுவது சுருட்டையாக வைரமாக இருக்கும் முடியினை ஸ்ரைய்ட்டிங் செய்வதன் ஊடாக நிரந்தரமாக தக்க வைத்து கொள்வது. இதில் மூன்று வகை உண்டு.

1. ஸ்மூத்திங்
2. ஸ்ரைட்டிங்
3. ரிபான்டிங்

மூன்றிற்கும் வேறு வேறு பொருட்களை கொண்டு செய்ய வேண்டும்.

**ஸ்மூத்திங்:**

இதனை செய்வதன் மூலம் 80மூ முடியை நேராக்க முடியும். மிருதுவாகவும் அடர்த்தியாகவும் கூந்தலை வைத்திருக்க முடியும்

**ஸ்ரேய்ட்னிங்:**

இதனை செய்வதன் மூலம் 90மூ நேராக வைத்திருக்க முடியும்.

இம் முறை மூலம் ஓரளவுக்கு அடர்த்தியன கூந்தலை மட்டுமே வைத்திருக்க முடியும்.

இதனை செய்ய முன்பு கத்தையான முடியை வைத்திருப்பவர்களுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும். அடர்த்தி இல்லாத கூந்தலுக்கு இதனை பயன்படுத்தினால் மிகவும் மெல்லியதாக மாறிவிடும்.

**ரிபான்டிங்:**

இதனை செய்வதன் மூலம் முடியை 99% நேராக வைத்திருக்க முடியும். இதனை செய்வதற்கு அரை நாளுக்கு மேல் தேவைப்படும்.

**செய்முறை:**

முதலில் கூந்தலை அயன் செய்ய வேண்டும். பிறகு அதன் சொர சொரப்பை நீக்கும் படி கிறீம் தடிவி குறிப்பிட்ட நேரம் காத்திருந்த பின்னர் கழுவிக் கொள்ள வேண்டும். பின்பு ஒரு முறை நன்றாக அயன் செய்ய வேண்டும். இது மிக முக்கியமானது. ஏனெனில் இது தான் நிரந்தர தன்மையை கொண்டது.

அடுத்து நியூட்ரலசன் எனபதை உபயோகித்து குறிப்பிட்ட நேரம் கழித்து மறுபடியும் கூந்தலை நீரில் கழுவி காய வைத்து இன்னொரு முறை அயன் செய்ய வேண்டும். இந்த முறையில் கூந்தலில் உள்ள ஸ்கந்தக இணைப்புகள் தகர்த்து நாம் வடிவமைக்கும் முறைக்கு ஏற்ப கூந்தல் மாறும். ஆனால் புதிதாக வளரும் கூந்தல் பழைய படி வளரும். அதை மட்டும் அவ்வப்போது தனித்தனியாக செய்ய வேண்டும்.

மேலே சொன்ன எந்த சிகிச்சை முறையை செய்தாலும். அதற்கு முன்பாக கூந்தலின் தன்மையை கவனிக்க வேண்டும். எதையும் தாங்கும் சக்தி கொண்டதா? சாதாரண கூந்தலா? சென்சிரைட் கூந்தலா? கலரிங் கெமிக்கல் சிகிச்சைகள் கென்னா போன்ற சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டதா என பார்த்துக்கொள்ள வேண்டும்.

சிகிச்சை செய்து கொள்ளப் போபவரின் கூந்தலின் தன்மைக் கேற்ப கிறீம் உபயோகிக்க வேண்டும்.

**பக்க விளைவுகள் இருக்குமா?**

அனுபவம் வாய்ந்த அழகுக் கலைஞரிடம் முறைப்படி தரம் வாய்ந்தகிறீம்களை கொண்டுசெய்து கொள்ளும் பட்சத்தில் பக்க விளைவு வராது. சிகிச்சைக்கு பின் எண்ணெய் வைக்கலாம். தலை கழு வலாம். ஆனால் பிரத்தியேக சம்பூ மற்றும் கென்டீசனல் வைக்கலாம். இழுத்து பின்னுவது இறுக்கமாக கிளிப் போடுவது கூடாது.







## தலைமுடி கறுப்பாக வளர இலகுவான டிப்ஸ்

சம அளவு நெல்லிக்காய்ச் சாறு மற்றும் பாதாம் எண்ணெய் எடுத்து அதில் சிறுதுளி எழும்பிச்சைச் சாறு கலந்து இரவில் தலையில் நன்றாக தடவி காலையில் தலைக்கு குளித்து வந்தால் தலைமுடி கறுப்பாக வளரும் தேங்காய் எண்ணெயில் செம்பருத்திப் பூவை ஊறவிட்டு அந்த எண்ணெய்யை தலையில் தேய்த்துவர முடி உதிர;வதும் குறையும், கறுப்பாகவும் வளரும்.

முடி கரு கருவென வளற ஒரு கோப்பை கருவேப்பிலை, இரண்டு கரண்டி வெந்தயம் காயவைத்து பொடித்து செய்து, அதனை தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணையில் ஊறவைத்து தலையில் தேய்க்கலாம். முடிக்கு கெமிக்கல் கலந்த ஷாம்புக்களை பயன்படுத்துவதற்கு பதிலாக, சிகைக்காய் பயன்படுத்தி குளித்தால், முடி நன்கு ஆரோக்கியமாக கருமை நிறத்துடன் வளரும்.

## தலைமுடி உதிர்வதை தடுக்க-டிப்ஸ்

- ✓ வேப்பிலை ஒரு கைப்பிடி எடுத்து நீரில் வேகவைத்து ஒரு நாள் கழித்து வேகவைத்த நீரை கொண்டு தலை கழுவி 5 நிமிடங்கள் கழித்து குளிது வந்தால் முடி கொட்டுவது படிப்படியாக நின்று விடும்.
- ✓ கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் பொடிகளை கலந்து இரவில் தண்ணீரில் காய்ச்சி ஊறவைத்து காலையில் எலுமிச்சை பழச்சாறு கலந்து நன்கு கலக்கி தலையில் முடி மற்றும் முடியின் அடிபகுதியிலும் தேய்த்து குளித்து வந்தால் முடி உதிர்வது உடனடியாக நின்று விடும்.
- ✓ வெந்தயம், குன்றிமணி பொடி செய்து தேங்காய் எண்ணெயில் ஊறவைத்து ஒரு வாரத்திற்கு பின் தினமும் தேய்த்து வந்தாலும் முடி உதிர்வது நிற்கும்

# பெண்களைக் கவரும் சல்வார்கள்

பெண்களை அதிகம் கவர்ந்த உடைகளில் ஒன்றாகி விட்டது சல்வார். இதனை சுடிதார், பஞ்சாபி என்றும் கூட அழைக்கிறார்கள். அழகு மட்டுமல்ல அடக்கமான உடையாகவும், அணிவதற்கு இலகுவாகவும் இருப்பதால்; பல பெண்கள் சாறிகளை விட சல்வார்களையே அதிகம் விரும்புகின்றனர்.

சல்வார் என்றால் டொப், பியாமா, ஷோல் மட்டும் தான் என்று இருந்த காலம்மாறி இப்போது ஹொட்டன் சல்வார், நெற் சல்வார், அனார்கலி, மொடல் ஹிற், மதுபாலா, கண்தாங்கி சல்வார், நெற் கை, அரைக்கை, முழு நீளக்கை, கை இல்லாதது, கல் வைத்தது என பல்வேறு வடிவங்களில், டிசைன்களில், பல்வேறு நிறங்களில் சல்வார்கள் வருகின்றன. கடைக்குள் போனால் எதை எடுப்பது என்றே தெரியாது.

இளம் வயதினர், திருமணமானவர்கள் என வயது வேறுபாடின்றி எவரும் அணிந்தகொள்ளக் கூடிய இந்த சல்வார்கள், ஆலயம், விழாக்கள், திருமண நிகழ்வுகள் என செல்லும் இடத்தை பொறுத்து அதற்கேற்ற டிசைன்களில் அணிந்துகொள்ளலாம். (ஆலயங்களுக்கு சாதாரண டிசைன்களிலும், திருமணம், பார்ட்டிகளுக்கு ஆடம்பரமான டிசைன்களில்).

"கடைக்கு வர்ற பெண்கள் அதிகமானோர் சல்வாரைத்தான் விரும்பி வாங்கிறாங்க" என கூறுகிறார்கள் யாழ்ப்பாண புடைவைக்கடைக்காரர்கள். 3,500 தொடக்கம் 60,000 ரூபா விலை வரை சல்வார்கள் உள்ளன. ஒவ்வொரு டிசைன்ஸ் மற்றும் தரத்திற்கேற்ப விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. உங்கள் விருப்பத்திற்கேற்ப, விலைக்கேற்ப சல்வார்களை தெரிவுசெய்ய முடியும்.

## சில சல்வார் டிசைன்கள்





### ஃபுறொக் சல்வார் (frock salwar)

உயரமான மெல்லிய மற்றும் அளவான உடலமைப்புக் கொண்ட பெண்களுக்கு இத பொருத்தமானது. இதனை சட்டையாகவும் அணியலாம் அல்லது பியாமா அணிந்து சல்வாராகவும் அணியலாம். கொலர் வைத்தது, வைக்காதது, முழுநீளக் கை, அரைக் கை என பல்வேறு டிசைன்களில் பல நிறங்களில் உள்ளது.

### அனார்கலி (Anarkali Salwar)

இதில் போடர் வைத்த மற்றும் வைக்காத என இரண்டு வகை சல்வார்கள் உள்ளன. மெல்லிய மற்றும் ஓரளவு குண்டான பெண்களுக்கு இது எடுப்பாக இருக்கும். விழாக்கள், பார்ட்டிகளுக்கு அணியலாம்.





### லெகிந்தா சல்வார் (Lehenga Salwar)

மொடல் ஹிற், கண்தாங்கி எனவும் இந்த டிநனைக் கூறலாம். டோப்ஸ் உடன் ஸ்கேற் அணியாலம் அல்லது ஸ்கேற் இல்லாமல் டொப்ஸ் உடன் பியாமா அணியலாம்.

### றெற் சல்வார் t salwar

வட்டம், சதுரம், இதய வடிவம் என பல்வேறு டிசைன்களில் கழுத்து உள்ள சல்வார் இது. நீளமானது, நீளம் குறைந்தது என உள்ள இந்த சல்வாரை கை இல்லாமலும் அணியலாம். உயரம் குறைந்தவர்களுக்கு இந்த நெற் சல்வார்கள் பொருத்தமானதாக இருக்கும். ஏராளமான டிசைன்கள், நிறங்கள் என தெரிந்தெடுக்க சிரமப்படும் சல்வார் இது.

# உடல் உஷ்ணத்தை 2 நிமிடத்தில் தணிக்க

தற்போது நிலவி வரும் பருவ நிலை மாற்றத்தால் நம்மில் பலருக்கு உடலில் அதிக உஷ்ணம்(வெப்பம்) ஏற்படுகிறது. இது முக்கியமாக அதிக நேரம் வெளியில் பயணங்கள் மேற்கொள்வதாலும், அதிக நேரம் நாற்காலி, சோபா மீது உட்கார்ந்திருப்பதாலும் ஏற்படுகிறது. இதனால் முகப்பரு, தோல் வியாதிகள், தலை முடி உதிர்தல், வயிற்று வலி, உடல் எடை குறைதல் போன்றன ஏற்படுகின்றன. உடல் வெப்பத்தை எளிய முறையில் எமது வீட்டு சமையலறையில் கிடைக்கும் பொருட்களைக் பயன்படுத்தி தணிக்கலாம்.

**தேவையான பொருள்கள்**

நல்லெண்ணெய், பூண்டு, மிளகு

**செய்முறை**

ஒரு குழி கரண்டியில் தேவையான அளவு நல்லெண்ணையை எடுத்து அதனை மிதமான சூட்டில் சூடு படுத்தவும். எண்ணெய் காய்ந்ததும் அதில் சில மிளகு மற்றும் தோல் உரிக்காத ஒரு வெள்ளைப் பூண்டை போட்டு சில நிமிடத்தில் சூடானதும் அடுப்பில் இருந்து இறக்கி, சூடு ஆறினதும் எண்ணையை காலின்(இரு கால்) பெருவிரல் நகத்தில் மட்டும் பூசி விட வேண்டும்.

2 நிமிடங்கள் கழித்து உடனே காலை கழுவி விட வேண்டும், இதனை செய்யும் போதே உங்கள் உடம்பு குளிர்ச்சி அடைவதை உணர முடியும், 2 நிமிடத்திற்கு மேல் இதனை விரலில் வைத்திருக்க கூடாது, சளி ஜுரம் உள்ளவர்கள் இதனை முயற்சி செய்ய வேண்டாம், மிகுந்த மன அழுத்தம், உஷ்ண உடம்பு உள்ளவர்கள் இதனை கட்டாயம் செய்து பயன் பெறுங்கள்.





# யாழ்ப்பாண பையன்களிற்கு இப்படியான பெண்களைத்தான் பிடிக்குமாம்

ரஜிந்தன
rajinthan2011@gmail.com

**"காதல் நட்பாய் மாறுமா? நட்டுப் காதலாய் மாறுமா?"**

அட கண்றாவி, எது எப்ப வேண்டுமானாலும் எதுவாவோ மாறட்டும். நாங்கள் இப்ப விசயத்துக்கு வருவம்.

தனக்கு வரப்போற வாழ்க்கைத் துணை எப்படி எல்லாம் இருக்க வேண்டுமென ஒவ்வொரு பெண்ணும் கனவுகள் இருக்கும். எல்லா ஊடகங்களும் அதைத்தான் திரும்பத் திரும்ப பக்கம் பக்கமாக வெளியிடுவார்கள். ஏதோ பெண்களிற்கு மட்டும்தான் மனசு இருப்பதைப் போல நடக்கிறார்களே என பொருமிக் கொண்டிருக்கும் வாலிபர்களே, இது உங்களிற்கானது. நமது யாழ்ப்பாணத்து பையன்களின் மனநிலை எப்படியிருக்கிறதென பார்ப்போம் என கிளம்பினோம். படிக்கும், வேலை பார்க்கும், மதகடியில் உட்கார்ந்திருக்கும் வாலிபர்கள் என பலதரப்பினரையும் பிடித்து, நீங்கள் காதலிப்பதாக வைத்துக் கொண்டால், எப்படியான பெண்களை தேர்வு செய்வீர்கள் (அட.. நாம தேர்வு செய்யிறதெல்லாம் கிடைக்குமா என பலர் மூக்கால் அழுதது வேறுகதை) என்று கேட்டோம். அதாவது உங்கள் காதலி எப்படியிருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள். அவ்வளவுதான் கேள்வி.

இதைக் கேட்டதும், பெரும்பாலான பையன்கள் மணிரத்தினம் படத்தில் லொக்கேசன் பார்ப்பவர்கள் போல, தலையை உயர்த்தி, கண்களை மூடி கற்பனை பண்ண ஆரம்பிக்கிறார்கள். ஒரு மிதப்பான மனநிலையில் பேச ஆரம்பிக்கிறார்கள். காதலென்று வந்ததும், வெட்கத்தை விட்டு பேசினார்கள். காதலென்றாலே வெட்கம், ரோசம், சூடு, சொரணையெல்லாவற்றையும் விட்டு வேண்டுமென்றஜென் மனநிலைக்கு பையன்கள் தயாராகிவிடுவதால் இதிலொன்றும் ஆச்சரியமில்லை.

பொதுவாக எல்லா பையன்களுமே தனக்கு வாரப் போற காதலி தேவதை போல தக தக என்று



இருக்க வேண்டுமென ஆசைப்படுவார்கள் என்றுதான் பரவலாக சொல்கிறார்கள். ஆனால் நாங்கள் பேசியதில் அப்படி சொல்லத் தோன்றவில்லை. இப்படி பார்த்தால் இங்க சில பெண்களுக்குத்தான் காதலியாகும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்றார் ஒரு குசும்பன்.

காதலி விடயத்தில் யாழ்ப்பாண பையன்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை கீழே தொகுத்துள்ளோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வெளிப்படுத்தினாலும், விடயமென்னவோ ஒன்றுதான்.

- அழகாக உடை உடுத்தும் பெண்களை அதிகம் பிடிக்குமாம். அதிலும் சந்தர்பங்கள், சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்றால்போல் ஆடை அணிய வேண்டுமாம். தன்னை அழகுபடுத்த தெரிந்தவளுக்குத்தான் வாழ்க்கையை அழகுபடுத்த தெரியுமென கன்னா பின்னா தத்துவங்கள் வேறு சொல்லி மிரள வைக்கிறார்கள். (இதற்காகத்தானே காதணி தொடக்கம் காலணி வரை ஒரே நிறத்தில் பெண்கள் ஆடை அணிகிறார்கள்)
- பக்கத்தில் உட்கார்ந்திருப்பவன் காதிலிருந்து இரத்தம் வருமளவிற்கு டி.ராஜேந்தர் பட நாயகிகள் போல பக்கம் பக்கமாவோ, மணிரத்தினம் பட நாயகிகள் மாதிரி ஒரு வார்த்தையோ பேசாமல் அளவாக, அழகாக பேச வேண்டுமாம். (பையன்கள் மட்டும் சம்மந்தா சம்மந்தமில்லாமல் பேசிக் கொண்டிருப்பார்களாம்)
- காதலி கறுப்போ சிவப்போ என்பது முக்கியம் இல்லை. இருக்கிற அழகுதான் அழகு. அதுவே போதும். அழகுபடுத்துகிறேன் என அதிகமாக மேக்கப் பூசி, மாறுவேடப் போட்டிக்கு தயாராவதைப் போல கிளம்பி பயமுறுத்தக் கூடாதென்கிறார்கள்.
- அதிகம் குண்டாகவும் இருக்கா கூடாதாம். மெலிதாகவும் இருக்கக் கூடாதாம். பேண்களே, தலை சுற்றுகிறதா... பெரிதாக ஒன்றுமில்லை. இப்பொழுது நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ.. அப்படியே இருந்தால் போதும்.
- நிளநீளமாக நகம் வளர்த்து, அதில் பல அலங்காரம் செய்து கொண்டு திரியும் பெண்களை விட, இப்பொழுதும் பாரதிராஜா படநாயகிகளை போல நகம் கடிக்கும் பெண்களைத்தான் நம்மவர்களிற்கு பிடிக்கிறதாம்.
- தலை முடி நீளமாகவும், அழகாகவும் இருக்க வேண்டுமாம்.
- இவை அனைத்தையும் விட தங்களை அன்பாகபார்த்து, தமது அன்றாட செயற்பாடுகளை பற்றி அக்கறை காட்டும் பெண்ணைத்தான் பிடிக்கிறது.
- எப்ப பாத்தாலும் எரிந்து விழாமல், அன்பாக பேசும் பெண்ணாகவும், ஏதேனும் தவறு செய்திருப்பின் அதனை தனக்கு எடுத்து சொல்லுபவளாகவும் இருக்க வேண்டுமாம்.

நமது யாழ்ப்பாண பையன்களிடம் பேசியதில், அவர்களின் எதிர்பார்ப்புக்களை இப்படி பட்டியல்ப்படுத்த முடிந்தது. ஆனால், பேராசை கூடாது ஆண்களே. உங்கள் எதிர்பார்ப்புக்கள் அளவாக இருந்தாதான் காதலியோட சந்தோசமா இருக்கலாம்.

ஆனால் இன்றைய காலத்தில் இப்படி என்னதான் பல தகுதிகள் இருந்தும் சரியான புரிதல்களும் விட்டுக்கொடுப்புக்களும் இல்லாமல் பல காதலர்கள் பிரிந்து செல்கிறார்கள். இந்த உலகத்தில் இப்போது மட்டுமல்ல, எப்பவுமே காதல் என்ற ஒன்று இல்லாமல் யாராலும் வாழ்ந்திட முடியாது என்பதுதான் உண்மை.

அட போங்கடா... நீங்களும் உங்க சென்ரிமெண்டும் எண்டு நினைப்பவர்களை நாம் என்னதான் செய்ய முடியும்..



# மரங்களின் மனங்களில் இருந்து

கவிதைகள்
மேகலா.ம

மண்ணில் விழுந்ததொரு விதையின் புரட்சியாய்
நாம் துளிர்த்த போது ரசித்தீர்களே
எங்களின் மகுடமாய் இருந்த பூக்களைப் பறித்து
உங்கள் மகுடமாய் சூடுவதில் என்ன இன்பமோ?

தேன்சுவை இனிதென்று அருந்தும் நீங்கள்
வியந்து கொள்கிறிர்களே
தேனீயின் உழைப்பை புரிந்தீர்களா
அது எங்களின் வியர்வை என்று
விரல் நகத்தோடு தசையும் கிள்ளினால்
வலிப்பது உங்கள் விரல்களுக்கு மட்டுமா?
எம் மலர்களைக் கொய்கையில் வலிப்பது
காம்பெனும் எம் விரல்களுக்கும் தான்

இரத்தம் என்பது செந்நிறம் மட்டுமல்ல
உங்கள் கோடரி முனைகள் பட்டதும்
வடியும் நீரும் இரத்தம் அது எம் இரத்தம்
மழை வேண்டி நிதம் கண்ணீர் வடிக்கவும்
கொடும்பாவி எரிக்கவும் தெரிந்த உங்களால்
புரியமுடியுமா? நாமும் கண்ணீர் வடிப்பதை
எமைக் கண்ணீர் சிந்த வைத்தால்
கானல் நீர்தான் உங்கள் மழை என்பதை
எப்போது உணரப்போகிறீர்கள்?

ஓ மானிடர்களே
வாழ விரும்பினால் எம்மை வாழவிடுங்கள்
நாம் வாடும் ஒவ்வொரு கணமும்
உங்கள் வாழ்வின் அஸ்தமனம் எனப் புரியுங்கள்



# தனிமையும் பௌர்ணமி நிலவும்

தென்னங் கீற்றை விலத்தி
எட்டிப்பார்த்த முகத்தை
ரசித்திருந்தேன் இராமுழுதும்
ஒற்றைப்பனை அருகின்
ஓலைக் குடிசையில் இருந்து

பொழுது புலர்வதற்காய்
கூவிற்றொரு சேவல்
ஒற்றைக் குயிலொன்று
அதைத் தொடர
கன்னம் சிவந்தாள்
கீழ்வானக் கன்னி அவளை
பட்சிகளின் பரபரப்பை
மனம் சில கணம்
ரசித்துவிட

சொல்லாமல் மறைந்த
என் தனிமைக்கு
துணையாய்
வார்த்தைகள் பேசாமல்
கூட இருந்த
முழுமதி முகத்தை
மீண்டும் காண்பேனா?
ஏங்கிற்று என்மனம்
நாட்களை எண்ணுகிறேன்
மீண்டும் வரும் பௌர்ணமி
என்று...

# சர்ச்சையை கிளப்பிய ஆட்டமிழப்பு




இன்றைய திகதியில் கிரிக்கெட் உலகத்தில் பெரும் சர்ச்சையாக உருவெடுத்துள்ளது பென் ஸ்ரோக்ஸின் ஆட்டமிழப்பு சரியா? தவறா? என்பதுதான். கிரிக்கெட் விமர்சகர்கள், வீரர்கள் என ஆளாளுக்கு இதைப்பற்றி கருத்தை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அவுஸ்திரேலியாவுடனான இரண்டாவது ஒருநாள் போட்டியில் பென் ஸ்ரோக்ஸ் சர்ச்சைக்குரிய விதத்தில் ஆட்டமிழந்தார். அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர் மைக்கல் ஸ்ரார்க் வீசிய பந்தை முன்னால் வந்து ஆடினார். அடித்தும் அல்லாமல், தடுத்தும் அல்லாமல், ஒருவிதமான பலவீனமாக ஆட்டம். பந்து மீண்டும் மைக்கல் ஸ்ரார்க் கைக்கு சென்றது. கிறீசை விட்டு முன்னால் வந்த ஸ்ரோக்ஸ் விரைவாக பின்னால் செல்ல எத்தனித்தார். இதற்குள் விக்கெட்டைநோக்கி பந்தை எறிந்தார் ஸ்ரார்க். விக்கெட்டை நோக்கி ஸ்ரோக்ஸ் திரும்ப எத்தனித்த சமயத்தில் பந்து அவரை தாக்குவதைப் போல சென்றிருக்க வேண்டும். தனது கையால் தடுத்து விட்டார்.

களத்தடுப்பிற்கு இடையூறு செய்தார் என அவுஸ்திரேலியர்கள் முறையிட்டனர். பின்னர் மூன்றாவது நடுவரிடம் சென்று, ஸ்ரோக்ஸ் ஆட்டமிழந்ததாக அறிவிக்கப்பட்டது. இதுதான் இப்பொழுது சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக சொல்லிக் கொண்டிருக்க, நியூசிலாந்தின் கப்டன் பிரண்டன் மெக்கலத்தின் கருத்து கவனிக்கத்தக்கதாக உள்ளது. டெய்லி மெயில் பத்திரிகையில் அவர் எழுதிய பத்தியில் இந்த ஆட்டமிழப்பிற்கு அதிருப்தி தெரிவித்துள்ளார். அவரது வாதம், இந்த ஆட்டமிழப்பை அவுஸ்திரேலியர்கள் கோரியே இருக்கக்கூடாதென்பதே. அவரது பத்தியில் இப்படி கூறப்பட்டுள்ளது "ஸ்மித் முறையீடு செய்ய வேண்டாம் என்ற முடிவை எடுத்திருக்கலாம், இதன் மூலம் அவரது தலைமையில் கிரிக்கெட் ஆட்டத்தை அதன் நல்லுணர்வுடன் ஆட வேண்டும் என்ற ஒரு விஷயத்தை அவர் அடிக்கோடிட்டு காட்டியிருக்கலாம், ஆனால் அவரோ மாற்று முடிவை எடுத்தது கடும் ஏமாற்றம் அளிக்கிறது.

என்னை தவறாக புரிந்து கொள்ள வேண்டாம்: வெற்றி என்பது முக்கியம்தான், ஆனால் நீண்ட நாட்கள் கிரிக்கெட் ஆடும் போது, சில விஷயங்களை, மதிப்பீடுகளை நாம் காக்கத்தவறியது தெரியவரும், முறையீட்டை வாபஸ் பெறாதது மூலம் ஸ்மித் தனது முதிர்ச்சியின்மையை வெளிப்படுத்தியுள்ளார். இதற்காக அவர் ஒருநாள் வருந்தவே செய்வார்.

நாங்களாக இருந்தால் முறையீடு செய்திருக்க மாட்டோம். அந்தத் தருணத்தில் இடையூறு விவகாரம் எழுப்பப்பட்டிருக்கக் கூடாது. நான் அந்த அவுட்டைப் பார்த்தவரையில், பென் ஸ்ரோக்ஸ் உடனடியான செயல் தற்காப்புக்காகவே என்று தெரிந்தது. இதில் ஸ்லோமோஷன் ரீப்ளே தேவையே இல்லை. ஏனெனில் இது அந்தக் கணத்தில் விநாடிக்கும் குறைவான காலநேரத்தில் எடுக்கக் கூடிய முடிவு.

அவரது கையில் பந்து தாக்கியது என்பது நல்ல அறிகுறியல்ல. நடுவர் தீர்ப்பெல்லாம் ஒரு விஷயம் அல்ல. எது முக்கியமெனில் கிரிக்கெட் ஆட்டத்தை நாம் ஆடும் விதம்தான். ஸ்மித் தவறிழைத்து விட்டதாகவே நான் கருதுகிறேன். அவுஸ்திரேலியாவைப் பொறுத்தவரை, என்றாவது ஒருநாள் இந்த நிகழ்வை அவர்கள் திரும்பிப் பார்க்கும் போது, அவர்கள் செய்தது அதன் விளைவுகளுக்கான மதிப்பை பெற்றுத் தரவில்லை என்பதை உணர்வார்கள், தவறுக்காக ஒருநாள் வருந்துவார்கள்.

ஒரு முறை போட்டி ஒன்றில் குமார் சங்கக்காரா சதம் எடுத்ததை கொண்டாடுவதற்காக அவரது கூட்டாளி முத்தையா முரளிதரன் கிரீஸை விட்டு நகந்த போது அவரை நாங்கள் ரன் அவுட் செய்தோம். அதன் பிறகு அதற்காக நாங்கள் வருந்தாத நாட்களே இல்லை. அதே போல் ஸ்மித்தும் இதற்காக ஒருநாள் வருந்தினால் நல்லதுதான்" இவ்வாறு கூறியுள்ளார் பிரண்டன் மெக்கலம்.



# விளையாடாமல் செய்தியாகும் யுவராஜ்

இப்பொழுதெல்லாம் யுவராஜ் சிங்கைப் பற்றிய எந்த விளையாட்டு செய்தியும் வருவதில்லை. அவர் விளையாடுவதுமில்லை. எங்காவது உள்ளூர்போட்டிகளில் விளையாடினாலும் சொல்லிக் கொள்ளும் விதமாகவும் ஆடுவதில்லை. 'எங்கள் அப்பாவிடமும் குதிரை இருந்தது' பாணியில் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார். என்றாலும், அவர் செய்திகளில் எப்படியோ அடிபட்டுக் கொண்டுமிருக்கிறார். என்ன கொஞ்சம் வில்லங்கமான விடயங்களில்.

அப்படியொரு வில்லங்கமான செய்தியிது. கிசுகிசு மேற்றர். ஏற்கனவே பல இந்தி நடிகைகளுடன் ஊர்சுற்றியவர், இம்முறை லண்டன் நடிகையுடன் சுற்றுகிறார்.

ஹசல் கீச் என்ற நடிகையும் யுவராஜூமே தற்போது பிசினாக ஒட்டியுள்ளனர். இந்தியில் வசூல்மழை பொழிந்த 'பொடிகார்ட்' படத்தில் இந்த நடிகை நடித்தவர். பில்லாவிலும் நடித்துள்ளார். சுசுகி விளம்பரத்திலும் நடித்துள்ளார். அண்மையில் இருவரும் ஒன்றாக லண்டனில் ஊர்சுற்றியதாக கூறப்படுகிறது. பின்னர் சேர்ந்தே இந்தியாவிற்கும் சென்றுள்ளனர். யுவராஜ் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு நடிகையுடன் நெருக்கமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# றேஞ்சர்ஸ் வெற்றி!

பொலிகண்டி பாரதிவிளையாட்டு கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 3ம் இடத்தை தீர்மானிப்பதற்கான போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது. பலமான சென்.மேரிஸ் அணியை வீழ்த்தி 3ம் இடத்தை பெற்றுக் கொண்டது.

அணிக்கு ஏழுபேரை கொண்ட இந்த தொடரின் மூன்றாமிடத்திற்கான பரபரப்பான ஆட்டத்தில் 32 என்ற கோலடிப்படையில் றேஞ்சர்ஸ் வெற்றிபெற்றது.



# குழந்தைகள் ஏன் அழுகின்றார்கள்.?



பி.சியா
siyapj27@gmail.com

குழந்தைகள் அழும் பொழுது சில நேரங்களில் இரசித்து கொண்டே இருக்கலாம். அதேபோல் சில வேளைகளில் அம்மாமாருக்கே எரிச்சல் வந்து விடும். ஏன் இப்படி அழுகின்றானோ என்று சினம் கொள்வார்கள்.

ஆனால் ஒரு பிள்ளையின் அழுகையை எதற்காக அழுகின்றார்கள் என்று ஒவ்வொரு தாயும் அறிந்துகொள்ள வேண்டும். குழந்தைகளின் அழுகைக்கான காரணத்தை அறிந்து கொண்டு அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவது ஒவ்வொரு தாயினது கடமையும் ஆகும்.

**பிறந்தவுடன்**

ஒவ்வொரு குழந்தையும் தனது தாயின் கருவறையில் இருக்கும் பொழுது தனது தாயின் இதயத் துடிப்பை பத்து மாதங்கள் கேட்டு கேட்டு மெய்மறந்து அந்த இதயத் துடிப்பின் இசையில் பத்து மாதங்கள் உறங்கிக் கொண்டிருக்குமாம். இந்த பத்து மாதங்கள் கேட்டு ரசித்த இதயத் துடிப்பு திடீரென கேட்காமல் போவதால்தான் குழந்தைகள்



பிறந்தவுடனே அழத் தொடங்கி விடுகின்றனவாம். அழுகின்ற குழந்தையை தூக்கி நெஞ்சில் வைத்துக் கொள்ளும் பொழுது குழந்தை மீண்டும் அந்த இதயத் துடிப்பை உணரத்தொடங்குவதால், தனது அழுகையை நிறுத்தி விடுகிறது.

**பசிக்கு அழும் குழந்தை**

குழந்தை பசிக்காகத்தான் அழுகிறது என்பது பல தாய்மாரின் முதன்மைக் கணிப்பு. இது பெரும்பாலும் உண்மைதான் என்றாலும், பசியையும் தாண்டிப் பல காரணங்களால் குழந்தை அழக்கூடும்.

குழந்தை பசிக்காகத்தான் அழுகிறதா என்பதை உறுதிசெய்ய, தாயானவர் தன் விரலை நன்றாகச் சுத்தப்படுத்திக் கொண்டு, குழந்தையின் வாய்க்குள் வைத்தால், உடனே குழந்தை விரலைச் சப்பத் தொடங்கிவிடும். இதன் மூலம் குழந்தை பசியால் அழுகிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். பொதுவாக குழந்தை போதிய



அளவு பால் குடித்த பின்னர் இரண்டு மணி நேரத்துக்குள் அழுதால் அது நிச்சயம் பசிக்காக இருக்காது. வேறு காரணத்தால் அது அழக்கூடும்.

பசிக்கு அடுத்தபடியாகத் தாகம் எடுத்தால் குழந்தை அழும். உதாரணமாக திட உணவு சாப்பிடும் குழந்தைக்குச் சில தாய்மார் உணவைக் கெட்டியாகப் பிசைந்து கொடுத்துவிடுவார்கள். இதனால் உணவு விக்கிக்கொள்ளும். குழந்தைக்குத் தாகம் எடுக்கும். இதனால் சாப்பிட்ட பிறகு குழந்தை அழும். அப்போது கொஞ்சம் தண்ணீரைக் கொடுத்தால் குழந்தையின் அழுகை நின்றுவிடும்.

**ஆடைகளில் நெருக்கடி**

அதிகக் கனமான ஆடைகள் இறுக்கமான ஆடைகள் உலித்துகிற



ஆடைகள் மற்றும் கால் கொலுசு கழுத்து செயின் இடுப்பு ஆபரணங்கள் ஆகியவற்றாலும் குழந்தை அடிக்கடி அழலாம். பருத்தி நூலில் தயாரிக்கப்பட்ட Milfisக்கு பதிலாக நாகரிகம் என்ற பெயரில் இப்போது செயற்கை இழையில் தயாரிக்கப்பட்ட Milfisத்தான் குழந்தைக்குப் பெரும்பாலும் அணிவிக்கிறார்கள். இதனால் ஒவ்வாமை ஏற்பட்டு குழந்தைக்கு அரிப்பும் தடிப்பும் உண்டாகின்றன. இதன் காரணமாகவும் குழந்தைகள் அடிக்கடி அழுவதுண்டு.

அதேபோன்று பால் குடித்த பிறகு சிறுநீர் கழிப்பது மலம் கழிப்பது போன்றவற்றால் உள்ளாடை, படுக்கை போன்றவை ஈரமாகி விடும்போது அதைத் தெரியப்படுத்தவும் குழந்தை அழும். குழந்தை இரவில் அழுவதற்குப் பெரும்பாலும் இதுதான் காரணமாக இருக்கும். ஈரமான துணியை மாற்றிவிட்டால் அழுகை நிற்கும்

**பூச்சி கடித்தால்**

தன்னுடைய உடலில் ஏதேனும் புதிதாக ஊர்வது போல் உணர்ந்தால் அப்போது குழந்தை அழலாம் எறும்பு, கொசு, பூச்சி, பேன் கடித்தாலோ, சருமம் அரித்தாலோ குழந்தை அழும். புட்டிப்பாலில் சர்க்கரை கலந்து குழந்தைக்குக் கொடுக்கும்போது அதில் சில சொட்டுகள் வாய் ஓரத்தில் ஒழுகியிருக்கும். சர்க்கரை வாசனைக்கு வரும் எறும்பு கடித்துவிடும். அப்போது குழந்தையின் சருமத்தில் ஒவ்வாமை ஏற்பட்டுச் சிவந்த தடிப்புகள் ஏற்படலாம்.

சில நேரம் ஒவ்வாமை குழந்தையின் குரல் நாணையும் தாக்கியிருந்தால் சருமத் தடிப்புகளோடு சரியாக மூச்சுவிட முடியாமல் குழந்தை அழும்.





அப்போது குழந்தையின் குரலும் மாறுபட்டிருக்கும்.

**வலிகளின் பொருட்டு**

குழந்தைக்கு வயிற்று வலியும் காது வலியும் ஏற்படுவது மிகவும் சகஜம். குழந்தை தன்னுடைய தொடையை வயிற்றில் மடித்து வைத்துக்கொண்டு அழுதால் அதற்கு வயிற்றில் வலி இருக்கிறது என்று புரிந்துகொள்ளலாம்.

குழந்தைக்கு அளவுக்கு அதிகமாகப் பால் அல்லது திட உணவைக் கொடுத்துவிட்டால் வயிறு உப்பி அழ ஆரம்பிக்கும். இதுபோல் உணவுடன் அதிகக் காற்று வயிற்றுக்குள் சென்றுவிட்டாலும் குழந்தை அழும். தாய்ப்பால் கொடுத்து முடித்தவுடன் ஒவ்வொரு முறையும் குழந்தையைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு அதன் முதுகைத் தட்டிக் கொடுக்க வேண்டும். இதனால் குழந்தையின் வயிறு தாயின் தோளில் அழுந்திக் காற்று வெளியேறிவிடும். குழந்தையும் அழுவதை நிறுத்திவிடும்.

சில வேளை குழந்தைக்குக் குடல் சொருகிக்கொள்ளும். இதனால் வயிறு வீங்கி வலி தாங்க முடியாமல் தொடர்ந்து அழும். அப்போது மலத்தில் ரத்தம் போகும். கூடவே வாந்தியும் வரும். உணவு ஒவ்வாமை காரணமாகவும் வயிற்றில் வலி வந்து அழும்.

காதின் உட்பகுதியில் செவிப்பறைக்குப் பின்னால் சீழ் இருக்கும்போது குழந்தைக்குக் காது வலிக்கும். அப்போது காதுப் பகுதியைத் தொட்டால் அதிகமாக அழும். செவிப்பறையில் சீழின் அழுத்தம் அதிகமாகி அதில் துளை விழுந்து வெளிக்காதின் வழியாகச் சீழ் வடிந்துவிட்டது என்றால் காது வலி குறைந்துவிடும். இதன் பிறகு குழந்தை அழாது.

**சளி, தடிமல், வயிற்றுப்போக்கு**

சளி, மூக்கு ஒழுகல், மூக்கு அடைப்பு, காய்ச்சல், தலைவலி, உடல் வலி, இளைப்பு, நெஞ்சில் வலி, சிறுநீர்க் கடுப்பு, மலச் சிக்கல், வாந்தி போன்ற காரணங்களாலும் குழந்தை அழக்கூடும். இந்த மாதிரி நேரங்களில் குழந்தை பால் குடிக்காது தொடர்ந்து அழுவது, வீறிட்டு அழுவது, உடலை முறுக்கி அழுவது என்று அழுகைச் சத்தம் வேறுபடும்.

வயிற்றுப்போக்கு காரணமாகக் குழந்தைக்கு வயிற்றில் வலி வந்து அழும் அல்லது உடலில் நீர்ச்சத்து அதிகமாக வெளியேறி, தாகம் அதிகரித்து நாக்கு வறண்டு அழுவது வழக்கம். மருத்துவரைப் பார்ப்பதற்குள் சிறிது உப்புச் சர்க்கரைக் கரைசலைத் தண்ணீரில் கலந்து குழந்தைக்குக் கொடுத்தால், அழுகை நின்றுவிடும்.

குழந்தைக்குக் குளிர் அடித்தாலும் அழும். புழுக்கமாக இருந்து உடல் வியர்த்தாலும் அழும். வாஷிங் மெஷின், வாக்குவம் கிளீனர், ஹேர் டிரையர் போன்றவற்றின் சத்தம் பிடிக்காமல் குழந்தை அழலாம். இந்தப் பிரச்சினைகளைச் சரி செய்தால் மட்டுமே குழந்தையின் அழுகை நிற்கும்.

பால் பற்கள் ஒவ்வொன்றாக முளைக்கத் தொடங்கும்போது குழந்தை அழும். சில மருந்துகளின் பக்க விளைவால் வயிற்றைப் புரட்டும்; வாந்தி வருவது போலிருக்கும். இதனாலும் குழந்தை அழலாம்.

**களைப்பும் உறக்கமும்**

குழந்தை தொடர்ச்சியாக அழுவதற்குக் களைப்பு ஒரு முக்கியக் காரணம். எந்த நேரமும் குழந்தையைத் தூக்கிவைத்துக் கொஞ்சுவது, விளையாடுவது, தொட்டிலில் போட்டு ஆட்டுவது, உறவினர் படையெடுப்பு போன்றவற்றால்



குழந்தை களைத்து விடும். இதனாலும் அழும். இந்தப் பழக்கங்களைக் குறைத்துக்கொண்டால் குழந்தை அழுவதும் குறையும்.

குழந்தைகளுக்குப் பொழுது போகாதபோது, தனியாக இருக்கும்போது, விளையாடத் துணை கிடைக்காதபோது, தன்னை யாரும் கவனிக்கவில்லை என்று நினைக்கும்போது... இப்படிப் பல சந்தர்ப்பங்களில் குழந்தைகள் அழும். அப்போது குழந்தையைக் கைகளில் தூக்கி வைத்துக்கொண்டாலேயே அழுகையை நிறுத்திவிடும். அல்லது, குழந்தையுடன் பேசி, சேர்ந்து விளையாடி, சிரிப்பூட்டினால் அழுகை நிற்கும்.

பொம்மை, பந்து என்று வயதுக்கு ஏற்ற விளையாட்டுப் பொருட்களைக் கையில் கொடுத்துவிட்டால் குழந்தை அழுவதை நிறுத்திவிடும். ஒரு வயதுக்கு மேற்பட்ட குழந்தையாக இருந்தால் சிறிது நேரம் காரில்ஃஇரண்டு சக்கர வாகனத்தில் பாதுகாப்பாக வெளியே அழைத்துச் செல்லலாம்.

குழந்தைக்கு உறக்கம் வந்தால்கூட, சிறிது நேரம் அழும். அப்போது தாலாட்டுப் பாடி உறங்க வைப்பதுதான் ஒரே தீர்வு. ஆனால், இன்றைக்கு எத்தனை இளம் தாய்மாருக்குத் தாலாட்டுப் பாடத் தெரியும்? இதற்கும் ஒரு வழி இருக்கிறது. செல்போனில் தாலாட்டுப் பாடல்களைப் பதிந்துகொண்டு, இம்மாதிரி நேரங்களில் போட்டுவிட்டால், அதைக் கேட்டுக்கொண்டே குழந்தை உறங்கிவிடும்.

# நீரிழிவு நோயாளாருக்கான உணவுத்திட்டமிடல்



வைத்தியர் கந்தையா சோதிதாசன்
drsothithas@gmail.com



இன்று நடுத்தர வயதை கடந்தவர்களில் அனேகமானோர் நீரிழிவு நேயாளராக இருக்கிறார்கள்.

இரத்தத்தில் இருக்கும் குளுக்கோசின்அளவைச் சரியாக வைத்திருக்க உதவுவது இன்சுலின். இன்சுலினைப் போதுமான அளவு சுரக்கும் தன்மையை கணையம் இழந்துவிடுகிறபோது அதனால் இரத்தத்தில் உள்ள குளுக்கோசின் அளவு அதிகமாகி விடுகிறது. இந்த நிலையைத் தான் நீரிழிவு என்று குறிப்பிடுகிறோம். நீரிழிவு நோயின் பாதிப்பு படிப்படியாகத் தலையிலிருந்து பாதம் வரை பரவி பல்வேறு உடல் உறுப்புகளைத் தாக்கிச் செயலிழக்கச் செய்கிறது.



எனவே இந்நோய் தாக்கத்தில் இருந்த விடுபட சிறந்த மருத்துவ சிகிச்சை அவசியமாகிறது. அதோடு குருதியில் குளுக்கோசின் அளவை சமநிலையில்பேண நீரிழிவு நோயாளிகள் திட்டமிட்ட அளவான சமநிலையான சத்து அடங்கிய உணவை உட்கொள்வது மிகவும் அவசியம்.

முறையான உணவு, தேவையான உடற்பயிற்சியிருந்தால் நீரிழிவு நோயை நம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளலாம்.

சோறு தமிழரது பிரதானமான உணவாக இருப்பதால் முற்றாக தவிர்கமுடியாது. தவிட்டுடன் கூடிய சிவப்பரிசிச் சோறு விரும்பத்தக்கது.

ஆனால் சோற்றின் அளவானது ஒருவர் செய்யும் வேலைக்கு ஏற்பவும் நிறைக்கு ஏற்பவுமே இருக்க வேண்டும். அதிக உடல் உழைப்புடன் கூடிய வேலை செய்பவர்கள் உண்ணும் அளவை விட அலுவலகத்தில்வேலை செய்பவர்களுக்கான உணவு குறைவானதாகவே இருக்க வேண்டும்.

இடியப்பம், புட்டு, தோசை போன்ற உணவுகள் தயாரிப்பதற்கு தவிடு நீக்காத அரிசிமா, சோயா மா, குரக்கன் மா போன்றவற்றை பயன்படுத்தலாம். இவ்வாறு உணவில் மாப்பொருளினை carbohydrate சேர்த்துக் கொள்ளும் போது அளவு மிக முக்கியமானதாகும். இதனை அதிகமாக சாப்பிட்டால் நீங்கள் உட்கொள்ளும் கலோரி சத்து அதிகமாகும். இது நீரிழிவை அதிகரிக்கும்.

மாப்பொருள் என்பது நீங்கள் உட்கொள்ளும் சோறு, இடியப்பம், றொட்டி, உருளைக்கிழங்கு, மரவள்ளி போன்றவற்றில் உண்டு.

பயறு, பருப்பு, சோயா, கொண்டைக் கடலை போன்றவற்றில் புரதமும் நார்ப்பொருளும் உள்ளதால் தினமும் உணவில் சேர்ப்பது அவசியம். ஒருநேர உணவிற்கு இவற்றை அவித்துப் பயன்படுத்தலாம். அல்லது ஏனைய உணவுகளுடன் சேர்த்தும் உண்ணலாம்.

காய்கறிவகைகள் விரும்பிய அளவு உட்கொள்ளக்கூடியவையாகும். (கத்தரி, பூசணி, தர்ப்பூசணி, வெண்டி, வெள்ளரி, புடோல், பாகல், கரட், முள்ளங்கி, போஞ்சி, பயிற்றை, முருங்கைக் காய் )

நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தன்மை கீரைகளுக்கும் உண்டு. கறிவேப்பிலை, தூதுவளை, ஆரைக்கீரை, மொசுசுமொசுக்கை, வெந்தயக் கீரை, முருங்கைக் கீரை, மணத்தக்காளி, அகத்திக் கீரை, சிறுகீரை, அரைக்கீரை, வல்லாரை இவற்றில் ஏதாவது ஒன்றை சூப் செய்து தினமும் 1 டம்ளர் வீதம் காலை அல்லது மாலை ஒருவேளை சாப்பிட்டு வரலாம்

பழவகைகளும் கட்டாயம் உணவில் சேர்க்க வேண்டியவையே. பழங்களில் நார்ச்சத்து அதிகம் என்பதால் அவை முக்கியத்துவம் பெறுகின்றன. ஆனால் பழங்கள் குருதியில் வெல்லத்தின் அளவை திடீரென கூட்டக்கூடியவை என்பதால் இவற்றை கூடுதலாக எடுத்துக்கொள்ளகூடாது .

தோடை 1 , அப்பிள் (தோலுடன்)1, கொய்யா (சிறியது) 2, வெள்ளரிக்காய்பிஞ்சு 2, அன்னாசிப்பழம் 4 வளையங்கள், பப்பாளி, வழைப்பழங்களை மிதமாக எடுக்கலாம்.



நீரிழிவு நோயாளிகளுக்குக் கொழுப்புச் சத்து அதிகமாகும் வாய்ப்புகள் உள்ளதால் உணவு வகைகளில் எண்ணெயின் அளவைக் குறைப்பது அல்லது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வது என்பது மிகவும் அவசியம். சிறியவகை மீன்கள், கோழி இறைச்சி போன்ற கொழுப்புக்குறைவான உணவுகளை சேர்த்துக்கொள்ளலாம். முட்டையயின் மஞ்சள் கருவில் கொழுப்பும் கொலஸ்ட்ரோலும் அதிகம் என்பதால் நீரிழிவு உள்ளவர்கள் வாரத்தில் 34முறை மட்டும் உண்ணலாம்.

### தவிர்க்க வேண்டிய உணவு முறைகள்

உப்பு தினமும் உட்கொள்ளும் அளவை விடக் குறைவாக இருக்க வேண்டும். 35g/per பீணீஹ் என்ற விகிதத்தில் இருக்க வேண்டும். பொட்டாஷியத்தையும் குறைக்க வேண்டும் என்ற சூழ்நிலை வந்தால் குறைத்து விட வேண்டும். பொட்டாஷியம் அதிகஅளவில்உள்ளஉணவு வகைகள் இளநீர், முந்திரி, போன்ற பருப்பு வகைகள் மற்றும் மாம்பழம் போன்ற சிலவகைப்பழங்கள் சில காய்கறிவகைகள் வகைகள், (தண்டு கீரை, பசலை கீரை, மரவள்ளிக் கிழங்கு, முருங்கைக் கீரை, பீன்ஸ், (முருங்கைக்காய்).

உணவில் எண்ணெய் வகைகளை மிகக் குறைவாகவே உபயோகிக்க வேண்டும். அது தேங்காயெண்ணய் ,சோயா, சூரிய காந்தி அல்லது நல்லெண்ணை எதுவாக இருந்தாலும் சரி. குறைவான அளவே பாவிக்க வேண்டும்.

எண்ணெயில் பொரித்த வதக்கிய உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. ரோல்ஸ், பற்றிஸ், வடை, முறுக்கு, மிக்ஸர் போன்ற நொறுக்குத்தீனிகள் அனைத்திலும் மாப்பொருளும், கொழுப்பும் மிக அதிகமாக உள்ளன. அவை நீரிழிவை மோசமாக்கும். கொலஸ்ட்ரோல் அதிகரிப்பிற்கும் எடை அதிகரிப்பதற்கும் காரணமாகும்.

இனிப்புள்ள உணவுகளை தவிர்க்கவேண்டும். ஐஸ்கிறீம், சொக்லேற் கேக் வகைகள் இனிப்பு பிஸ்கற்றுகள் என்பவற்றை முற்றாகவே தவிர்க்க வேண்டும். சீனியானது மிக விரைவாக குருதியில் குளுக்கோசின் அளவை அதிகரிக்கும். எனவே கோப்பி, தேநீர் போன்றவற்றைச் சீனி போடாமல் அருந்துவது நல்லது.

விரைவாக உறிஞ்சப்படும் இனிப்புப் பண்டங்களை உண்ணும் போது அவற்றைத் தனியாக உண்ணக் கூடாது. ஆறுதலாக உறிஞ்சப்படும் உணவு வகைகளுடன் சேர்த்து உண்ண வேண்டும்.

சோயா, பயறு, பருப்பு, கௌபீ, பயிற்றை போன்ற அவரையின உணவுகள் ஆறுதலாகச் சமிபாடடைவதால் அவ்வாறு இனிப்பு சாப்பிடும்போது கலந்து உண்ண ஏற்றவையாகும்.

சித்தாயுர்வேதத்தில் நீரிழிவு நோய்கான நிவாரணியாக கூறப்படும் சில மூலிகை வகைகளயும் உணவில் சேர்த்துக் கொள்ளுதல் பயன் தரும் மூலிகை உணவுகள்.

சிறுகுறிஞ்சா, ஆவாரை, (இதன் பூக்களை காயவைத்து தூளாக்கி சுடுநீரில் ஊற விட்டு தேநீர் போல் அருந்தலாம்) சீந்தில், பாகல், (இதை கறியாக பயன்படுத்தலாம் ) இத்தோடு வெந்தயம், வில்வம் போன்றன பயன் அளிக்கும் மூலிகைகள் ஆகும். இவ்வாறு உணவை திட்மிட்டு உண்பதனுடாக இந்நோய் தாக்கத்தில் இருந்து விடுபட இடமுண்டு .

---



வவுனியா வாரிக்குட்டியூர் 6ம் யூனிட்டில் அமைக்கப்பட்டுள்ளது இந்த பிரமாண்ட ஐயனார் சிலை. 27 அடி உயரமான இந்த பிரமாண்ட சிலைதான் இலங்கையிலேயே உயரமான ஐயனார் சிலை.

இறுதி யுத்தகாலத்தில் நடந்த மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தி கடந்த 07.09.2015 அன்று திருகோணமலை நகரில் நடந்த கையெழுத்துப் போராட்டம். திருகோணமலை மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கையெழுத்திட்டு ஆரம்பித்து வைத்தார்.





## கல்லாப்பெட்டியுடன் காணாமல் போன கவர்ச்சி மேயர்

பிரேசிலில் 25 வயதான இளம்பெண் மேயர் ஒருவர் மக்களின் வரிப்பணத்தைச் சுருட்டிக் கொண்டு தலைமறைவாகி விட்டாராம். இவர் நாட்டைவிட்டே தலைமறைவாகியிருக்கலாமென பொலிசார் சந்தேகிக்கின்றனர். படுகவர்ச்சியாக திரியும் இவர், மேயர் போலவே செயற்பட்டதில்லையென சொல்கிறார்கள். எப்பொழுதும் 'புல் மேக்கப்' இல் ஊரைச்சுற்றித் திரிபவர், ஒருமுறைகூட அலுவலகப்பக்கம் எட்டியும் பார்க்கவில்லையாம். வட்ஸ் அப், பேஸ்புக், எஸ்.எம்.எஸ் மூலம் ஊழியர்களை வேலை வாங்கினாராம். இவரது காதலன்தான் முன்னர் மேயராக இருந்திருக்கிறார். அவர் ஊழல்குற்றச்சாட்டில் சிக்க, இவர் களமிறங்கி மேயராகியுள்ளார். இப்பொழுது 40 இலட்சம் டொலரை சுருட்டிக் கொண்டு தலைமறைவாகிவிட்டாராம்.



## பிரமாண்ட தமிழ்முட்டை!

உங்கள் வீட்டு கோழிகள் ஒழுங்காக முட்டையிடுவதில்லையென முணுமுணுத்து கொண்டிருக்கிறீர்களா, அப்படியாயின் நிச்சயம் இது உங்கள் வயிற்றெரிச்சலை கிளறும். நுவரெலியாவிலுள்ள கோழியொன்று பிரமாண்ட முட்டையொன்று இட்டுள்ளது. கடந்த 5ம் திகதி இது நடந்துள்ளது. சாதாரணமாக கோழிமுட்டைகள் நமது கைகளிற்குள் அடங்கும். ஆனால் இந்த முட்டை கைகளிற்குள் அடங்காது. நிறையும் 190 கிராம். சாதாரண முட்டைகள் வெறும் 70 கிராம்தான். லோகநாதன் வசந்தப்பிரியா என்பவரது வீட்டு கோழிதான் செய்தியாகியுள்ளது. எப்படியோ அது ஒரு தமிழ்முட்டை என்பது நமக்கெல்லாம் பெருமைதானே!



## அக்கரைப்பற்று ஐக்கியம்

அக்கரைப்பற்று மணிக்கூட்டு கோபுரத்தின் அடியில் இந்து ஆலயமொன்றின் திருவிழா பதாகைகளை கடந்தவாரம் தொங்கவிட்டனர். 'இது நம்ம ஏரியா இதற்குள் இந்துக்களின் பதாகையா?' என சில முஸ்லீம் அடிப்படைவாதிகள் (ஜனவரி 8 இல் தோற்கடிக்கப்பட்ட அரசியல் கலாசாரத்தின் பிரதிநிதிகள் இவர்கள்) இனவாத தீ மூட்ட எத்தனித்தனர். ஆனால் அவர்கள் நினைத்தது நடக்கவில்லை. 'முன்னைய ஆட்சியில் என்ன நடந்ததென்பது எங்களிற்கு தெரியும். நீங்கள் மூடிக்கொண்டிருங்கள்' என்ற சாரப்பட பெருமளவான முஸ்லீம் சகோதரர்கள் அதற்கு சமூகவலைத்தளங்களில் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.



## அப்பிள் கம்பஸ் 2

அப்பிள் நிறுவனர் ஸ்டீவ் ஜோப்ஸ், கடந்த 2006இல் அறிவித்த 'அப்பின் கம்பஸ் 2' (Apple Campus 2) 175 ஏக்கர் பரப்பளவில் தயாராகி, திறப்புவிழாவிற்காக காத்திருக்கிறது. இந்த வருட இறுதி அல்லது அடுத்த வரட தொடக்கத்திற்குள் திறக்கப்பட்டு விடும். இந்த வளாகம், 2.3மில்லியன் சதுரஅடியில், 13,000 ஊழியர்கள் வசிக்கும் வசதிகளை கொண்டது. 1000 பேர் அமரும் அதிநவீன அரங்கு, 3இலட்சம் சதுரஅடியில் ஆய்வுகூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதைவிட முக்கியம் இங்கு தேவையான மின்சாரம் சூரியஒளியிலிருந்தே பெறப்படவுள்ளது. இதற்காக 7இலட்சம் சதுரஅடியில் சேலர்பனல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வளாகத்தை வானிலிருந்து எடுத்த படம் இது.



## நாட்டாமை தீர்ப்பை மாத்து!

ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் குற்றச்செயல்களில் ஈடுபட்டால் தண்டனை கறாராகத்தான் இருக்கும். அந்த தண்டனை முறைகள் மனிதஉரிமை அமைப்புக்களினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டும் வருகின்றன. இது ஆப்கானில் சமீபத்தில் வழங்கப்பட்ட தண்டனையின் போது பிடிக்கப்பட்ட படம். இளம்பெண்ணொருவர் கள்ளஉறவு வைத்திருந்தார் என குற்றம்சாட்டப்பட்டது. உடனடியாக அவருக்கு கசையடி தண்டனை கொடுக்கப்பட்டது.



## அதிசயம்

வவுனியாவில் நாலுகால் கால்களுடன் அதிசய கோழிக்குஞ்சொன்று பொரித்துள்ளது. ஈஸ்வரிபுரத்தில் கடந்த வாரம் இந்த குஞ்சு பொரித்துள்ளது.

இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 13.09.2015 அன்று வெளியிடப்பட்டது